

07

## முஸ்லிம்கள் நம்பிக்கை இழந்துவிடக் கூடாது

வைத்தியர் எம்.ஜி. ஸைபுல் இஸ்லாம்
பொறுப்பாளர் -
சகவாழ்வுக்கான உப குழு, தேசிய சூறா சபை

## தோற்றுப் போன ஈஸ்டர் தாக்குதல்



03



03

## அவசரகாலச் சட்டமும் முஸ்லிம்களும்






# மீள்பார்வை


මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/116/NEWS/2019 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 418 • 10 மே 2019 வெள்ளிக்கிழமை • றமழான் 1440 • விலை 40.00







# 4/21 தாக்குதலில் சம்பந்தப்பட்ட அனைவரும் கைது. அனைத்து வெடிபொருட்களும் மீட்பு



உயிர்த்தெழுந்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரும் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் அல்லது கொல்லப்பட்டுள்ளனர் என உதவி பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன தெரிவித்தார்.

இதனால் பொது மக்கள் பயமின்றி தமது அன்றாட அலுவல்களில் ஈடுபட முடியும் என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். எதிர்காலத் தாக்குதல்களுக்காகவென மறைத்து வைக்கப்பட்டிருந்த அனைத்து வெடிபொருட்களும் பாதுகாப்புப் பிரிவினால் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர், பொதுமக்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் பொருட்டு தொடர்ந்தும் தேடுதல் நடைபெறும் எனவும் தெரிவித்தார்.

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு தேவை - பிரதமர்



பூகோளப் பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கு இந்தச் சட்டம் அவசியமானது என்பதால், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அனைத்துக் கட்சிகளும் நிபந்தனையற்ற ஆதரவு வழங்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது வேண்டிக் கொண்டார்.

ஜேவிபி பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த பிரதமர், 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவு பயங்கரவாதத்தை குற்றமென்று வரையறுக்கிறது. (பக். 15)

## CTA: பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைக்குக



**- மஹிந்த**

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை ஆராய்ந்து முன்மொழிவுகளை முன்வைப்பதற்கான பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை அமைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். சிவில் சமூகம், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளில் இருந்தும் இந்தச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுவதனாலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் தெரிவித்தது. (பக். 15)

## "ஷரீஆ பல்கலைக்கழகம்" உயர் கல்வி அமைச்சின் கீழ்



கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவுடன் தொடர்புபட்ட பட்டிகலோ கம்பஸ் அமைச்சர் ரஊப் ஹக்கீமின் கீழுள்ள உயர்கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இந்தப் பல்கலைக் கழகத்துடன் தொடர்பான சகல கல்வி நடவடிக்கைகளும் ஒழுங்கமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஷரீஆ பல்கலைக்கழகம் என்ற பெயரிலோ பட்டிக்கலோ கம்பஸ் என்ற பெயரிலோ எந்த நிறுவனத்துக்கும் பட்டப்படிப்பு கற்கைநெறிகளைத் தொடர்வதற்கு தாம் அனுமதிக்கவில்லை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

பட்டிக்கலோ கம்பஸ் பிரைவேட் லிமிட்டட் என கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதியப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு வரும் இந்த உயர்கல்வி நிறுவனத்தை ஒரு ஷரீஆ பல்கலைக்கழகமாக சிங்கள ஊடகங்கள் சித்திரித்து வருகின்றன.

(பக். 15)

## பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு கார்டினலுக்கும் அழைப்பு



பாதுகாப்பு கவுன்ஸிலில் உள்ளடங்குபவர்களை நாங்கள் மாற்றி அமைத்திருக்கிறோம். வழமையான அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக நிபுணத்துவம் வாய்ந்தவர்களையும் நாங்கள் அடிக்கடி கூட்டத்துக்கு வரவழைக்கிறோம். கருதினால் மல்கம் ரஞ்சித் அவர்களும் எமது அழைப்பின் பேரில் அண்மையில் பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டத்தில் கலந்து கொண்டார் என ஜனாதிபதி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (பக். 15)

## பயங்கரவாதிகளுக்கு மரண தண்டனை

**- மரிக்கார் தனிநபர் பிரேரணை**



பயங்கரவாதத்துடன் நேரடித் தொடர்புடையவர்களுக்கு மரண தண்டனை வழங்கக் கோருவதற்கான தனிநபர் பிரேரணை ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் முன்வைத்துள்ளார். இதற்கான பிரேரணை பாராளுமன்றச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கான பிரேரணையும் இதனுள் அடங்குகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் மார்க்கத்தில் "அது" இல்லை!



நண்பன் சென். அந்தனிஸ் சேர்ச்சுக்கு போய்வரும் வரை ஜம்பெட்டா ஸ்ட்ரீட்டை திரும்பத்திரும்ப அளப்போம்

அப்படியே சிவன் கோயில் போற வங்க திரும்பி வரும் வரை கிருஷ்ணா கடையில காத்திருப்போம்.

ஷு ரோட் பள்ளியில நாங்க தொழுதுட்டு வரும் வரை ரட்ணம் லைப்ரரில பழைய பேப்பருக்கும் வேலையிருக்கும்..

லக்கி ஹோட்டல்ல சேர்ந்து சாப்பிடுவோம். க்றீம் ஹவுஸ்ல சேர்ந்து அரட்டையடிப்போம்.

சென் லூசியஸ் படிக்கட்டுகள்ல பல மணி நேரம் பேசிக்கிட்டிருப்போம். ஆரியபவன்ல லைட் டீ குடிச்சுகிட்டே கலைஞ்சு போயிருக்கோம்.

ஒரு நாள் கூட '?' இருந்ததில்லை...

இவர்கள் எங்கிருந்து கிளம்பினார்கள்.....? என் மார்க்கத்தில் 'அது' இல்லை!

பிறப்புக்கும் இறப்புக்குமிடையில் இத்தனை விகாரம்.

- இர்பான் இக்பால்




## சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை



பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கையர்கள் இரத்தம் வழங்க வரிசையில் முண்டியடித்த படங்களை பார்க்கும் போது, இந்த நாட்டை நான் ஒருபோதும் வெறுக்க முடியாது. அடுத்த விமானத்தில் ஏறி கொழும்புக்கு வரவே நான் ஆசைப்படுகிறேன்.

- இங்கிலாந்தைச் சேர்ந்த இங்கா கீச் என்ற பெண் டுவிட்டரில் பகிர்ந்த வரிகள்.

## மரண தண்டனை

நான் வழமையாக வேலைக்குச் செல்லும் நீர்கொழும்பு கட்டுவாபிட்டிய St. Sebastian Church ஊடான பாதை ஊடாக சென்று வந்தேன்.

வீதியின் இரு புறங்களிலும் காணப்பட்ட பெரும்பாலான வீடுகளில் வெள்ளைக் கொடிகள் தொங்கவிடப்பட்டு இறந்தவர்களின் போட்டோக்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. பள்ளிவாசல்கள் உற்பட அனைத்து மதத்தலங்களும் பாதுகாப்புப் படையினரால் குவிக்கப்பட்டு இருந்தன.

மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது. பாதை எங்கும் சோக அறிகுறிகளைத் தவிர வேறு எதனையும் கண்டுகொள்ள முடியாது இருந்து.

அநியாயம் இழைக்கப்பட்டவர்களின் சாபமே கொலைகார்கள் சின்னாபின்னமாவதற்குப் போதுமானது. பாதிக்கப்பட்ட ஒரு பெண் கூறுகிறாள் : இந்த அநியாயத்தைச் செய்த ஒவ்வொருவரும், எங்களைப் போலவே தங்களது குடும்ப உறுப்பினர்கள் இல்லாமலாக்கப் பட்ட பின்னரே மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்.

لعنة الله على الظالمين அல்லாஹ் போதுமானவன்

- முஹம்மத் பஸூல்

## மடையர்கள்

எமது உறவினர் ஒருவர் நீண்ட நாள் மரணப் படுக்கையில் இருந்து மரணிப்பதைக் கூட எம்மால் தாங்க முடியவில்லை. ஒரே வீட்டில் நான்கைந்து மையத்துக்கள் ஒரே நாளில் நடந்தால் ஒரு மனிதனால் அதை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

ஒரு போர்க்களத்தில்கூட சிறுவர்களை பெண்களை கொலை செய்யாதீர்கள் என்று சொன்ன மார்க்கத்தின் பெயரால் இப்படி ஒரு மூர்க்கத் தனத்தை அரங்கேற்றி இருக்கிறார்கள் இந்தக் காட்டேரிகள்.

ஜனநாயகம் ஹராம் காபிர்களின் ஆட்சியில் முஸ்லிம்கள் வாழ்வதே பாவம் என்றெல்லாம் சிலர் எழுதும் போதே நாம் அவர்களை போட் டுக் கொடுத்தி ருக்க வேண்டும் அல்லது போட்டுத் தள்ளி இருக்க வேண்டும். இனவாதப் பிரச்சினைகள் வந்த பொழுது நாம் சகவாழ்வை உருவாக்கப் போராடிய அளவுக்கு எமக்குள் இருந்த இந்த விஷ ஜந்துக்களை இனம் காட்டப் போராடவில்லை.

அதன் விளைவைத்தான் இன்று முழு சமூகமும் அனுபவிக்கிறது. இந்த நாட்டில் இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காகவும் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கும் எத்தனை வகையான முயற்சிகளையும் செலவுகளையும் முஸ்லிம் தனிமனிதர்களும் இயக்கங்களும் செய்திருப்பார் கள்.

அவை அத்தனையையும் எந்தப் பெறுமானமும் அற்றதாக மாற்றி விட்டார்கள் இந்த மடையர்கள். எமது எதிர்கால சந்ததிகளையேனும் யாரிடமும் தமது மூளையை அடகு வைக்காத சுயபுத்தியுள்ள பிள்ளைகளாக வளர்த்தெடுக்க முயற்சி செய்வோம்.

- சப்வான் பஷீர்

• மாஸ் எல். யூசுப்

# பாதிக்கப்பட்டவன் பேசுகிறேன்



**இறந்தவர்களும் உயிருடன் இருப்பவர்களும் சமனாக மாட்டார்கள். காயப்பட்டவர்களும் சுகதேகியாக இருப்பவர்களும் ஒன்றாக மாட்டார்கள். துன்பப்படுபவர்களும் அல்லாதவர்களும் ஒப்பாக மாட்டார்கள்.**

உணர்வுகளின் பரிமாணம் வித்தியாசப்பட்டாலும் தாங்க முடியாத கவலையொன்று என்னை மூடிக் கொண்டது. எதுவிதக் காரணமுமின்றி, அநியாயமாக, புத்திக்கு எட்டாத வகையில் மிகக் கொடூரமாக இலக்கு வைக்கப்பட்ட என் அன்புக்குரிய அன்னையர், தந்தையர், சகோதரர்கள், சகோதரிகள், புதல்வர்கள், புதல்விகள் அனைவருக்கும் ஆழமான உண்மையான மனவருத்தத்தினை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரம் உங்களுக்கு மட்டும் உரியதல்ல. மானசீகமாக இது என்னையும் துயருக்குள்ளாக்கியது. எனது பிள்ளைகளையும் எனது பேரப் பிள்ளைகளையும் என்னால் பாசமாகப் பார்க்க முடியவில்லை. இந்தப் பரிவான பார்வைகளை இழந்து விட்ட எத்தனையோ உயிர்களைப் பற்றிய நினைவுகள் என்னுள் ஆழமாக எட்டிப் பார்க்கின்றன.

எனது உள்ளம் உறைந்து போயிருந்தது. எனது விரல்கள் இன்றும் விறைத்துப் போயிருக்கின்றன. எனது இயலாமையை எண்ணி நான் எனது வீட்டில் குறுக்கும் நெடுக்குமாக அலைகின்றேன். அப்பாவிகளுக்கும், அன்புள்ளவர்களுக்கும், இளையவர்க்கும் முதியவர்க்கும் உதவவோ, ஆதரவளிக்கவோ, பலப்படுத்தவோ எதுவுமே செய்ய முடியாத கையறு நிலையில் நானிருக்கிறேன்.

நீங்கள் தனித்தவர்கள் அல்ல. சந்தேகத்துக்கிடமின்றி இந்த நாட்டின் சமாதானத்தை விரும்புகின்ற எல்லாப் பிரஜைகளுமே ஏதோவொரு வகையில் இந்த ஆழ்ந்த அதிர்ச்சியையும் வேதனையையும் உணர்கிறார்கள். அன்புள்ளம் கொண்டவர்களே, நீங்கள் தனிமைப்பட்டு விட்டதாய் நினைக்க வேண்டாம். உடலால் நீங்கள் அருகில் இல்லாவிட்டாலும் உள்ளத்தால் நீங்கள் உங்களது நிழலை விடவும் நெருக்கமாக இருக்கிறீர்கள். மொத்தத்தில் நீங்கள் நாங்களாகி விட்டீர்கள் என உங்களை நான் எனது உள்ளத்தின் பக்கத்தில் ஆரத் தழுவிச் சொல்ல வேண்டும் போலிருக்கிறது.

காயப்பட்ட உங்கள் அனைவருக்கும் எனது நாளாந்த பிரார்த்தனைகளில் பங்கிருக்கிறது. என்னைப் போல் பலரும் தங்களது பிரார்த்தனைகளில் உங்களை அன்புடன் நினைவுபடுத்துவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். உங்களது வலிகளையும் வேதனைகளையும் அசௌகரியங்களையும் நீக்கிவிடுமாறு நான் இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

நீங்கள் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்ற ஏக்கத்திலிருந்தும் அதிர்ச்சியிலிருந்தும் உங்களை அவசரமாக மீளச் செய்ய வேண்டும் என இறைவனிடம் கையேந்துகின்றேன். அமைதியை விரும்பும் அப்பாவியான மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற உடல், உள ரீதியான வேதனைகளில் இருந்து உங்களுக்கு இறைவன் நிவாரணம் கிடைக்கச் செய்வானாக.

வைத்தியசாலைக்கு வந்து உங்களைப் பார்க்கக் கிடைத்திருந்தால் பெரும் ஆறுதலாக இருந்திருக்கும். உங்களது கட்டிலருகே நான் வந்து நின்றிருக்க வேண்டும். நீங்கள் நலம் பெறுவதற்கு நான் உதவியிருக்க வேண்டும். சகோதர வாஞ்சையுடன் உங்களைக் கவனித்திருக்க வேண்டும். எங்களது அன்புக்குரியவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டிருக்க வேண்டும். தமது உற்றார் உறவினர்களை இழந்தவர்களுடன் அமர்ந்து அவர்களுக்கு ஆறுதல் கூறியிருந்தாலாவது கனத்துப் போன எனது இதயம் இளகிப் போயிருக்கும்.

ஆனாலும் யதார்த்தம் இதற்கெல்லாம் இடம் கொடுக்காது என்பதை நீங்கள் அறிந்து தான் இருப்பீர்கள். இது உச்சபட்ச உணர்ச்சி வெளிப்பாட்டுக்கான தருணம் என்பதனை நானும் அறிவேன். அதனால் எனது உள்ளத்தின் சுமையை இறக்கிக் கொள்வதற்கு எழுதுவதை நான் தெரிவு செய்தேன்.

இந்தப் பயங்கரப் படுகொலையை நடத்திய மிருகங்களைப் பற்றி நான் எதனையும் தெரிவிக்க விரும்பவில்லை. இதனை அவர்களாகவே செய்திருக்கலாம். அல்லது அவர்கள் ஐஎஸ் உடன் தொடர்புபட்டவர்களாகவோ கண்ணுக்குப் புலப்படாத சக்திகளின் கைக்கூலிகளாகவோ இருக்கலாம். இது தொடர்பான புலனாய்வு நடைபெறும் நிலையில் இதுபற்றி நாங்கள் எதனையும் இதுவரை தீர்க்கமாக அறிய முடியவில்லை.

எது எப்படி அமைந்தாலும் என்னைப் பொறுத்தவரையில் இவர்கள் மனிதர்களல்ல. மிருகங்களையும் விட இழிவானவர்கள். இதனையும் விட மேலதிகமாக அவர்களைப் பற்றிச் சொல்வதற்கில்லை. இதற்குப் பொறுப்பானவர்கள் அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். மரண தண்டனை வரையான கடுமையான தண்டனை இவர்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டும். இவர்களைப் பகிரங்கமாகத் தூக்கிலிட வேண்டும். அது தான் அடுத்தவர்களுக்கும் பாடமாக அமையும்.

வைத்தியசாலைகளிலும் மருத்துவச் சேவையிலும் உள்ள என் அன்புச் சகோதர சகோதரிகளே, உங்களுடைய சேவை நாட்டுக்கு மிகவும் தேவையாக இருந்த வேளையில் நீங்கள் உங்களது கடமைக்காக எழுந்து நின்றீர்கள். இறுக்கமான சூழ்நிலைகளின் போதும் நீங்கள் மனிதாபிமானத்தை வெளிக்காட்டினீர்கள்.

பொலிஸிலும் பாதுகாப்புப் பிரிவிலும் கடமையாற்றும் எனது சொந்தங்களே, நீங்கள் உங்களது துணிவையும் தைரியத்தையும் வெளிப்படுத்தினீர்கள். இந்தச் சந்தர்ப்பத்தைக் கையாள வேண்டிய சிறந்த முறையில் அதனைக் கையாண்டீர்கள். இதனூடாக நாட்டில் சமாதானத்தைப் பேணுவதற்கு உதவினீர்கள். முஸ்லிம்கள் உட்பட ஏனைய அப்பாவிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக நீங்கள் பாடுபட்டீர்கள். இதற்காக உங்களுக்கு எங்களது நன்றியினை

தாங்கள் திருப்பித் தாக்கப்படுவோம் என முஸ்லிம் சமூகம் அச்சமடைந்திருந்தது. முஸ்லிம்கள் ஒரு சமூகமாக இதற்குப் பொறுப்புக் கூற முடியாது. இது அனைவரும் அறிந்த அனைவரும் ஏற்றுக் கொள்கின்ற உண்மை. எந்த நிலைமையிலும் எந்த முஸ்லிமும் இதனை மன்னிக்க மாட்டான். முஸ்லிம்களுக்கு எதிரான கலவரம் நடந்து அதிலே முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருந்தாலும் இவ்வாறான மிருகத் தனமான செயலினை அங்கீகரிக்க முடியாது. உறுதியாகவே இது இஸ்லாம் ஏற்றுக் கொள்ளாத ஒன்று.

ஒருவருடைய தவறுக்காக இன்னொருவரைத் தண்டிப்பது இஸ்லாமியப் போதனையல்ல. இதனை கிறிஸ்சேர்ச் தாக்குதலுக்கான பதிலடியாக சிலர் சித்திரிக்கின்றார்கள். இந்த விடயத்தில் இன்னொருவரின் செயலுக்காக நியூஸிலாந்திலோ இலங்கையிலோ எந்த நியூஸிலாந்து நாட்டவரும் கொல்லப்படவோ காயப்படுத்தப்படவோ முடியாது. இது தான் சமாதானத்துக்கான இஸ்லாத்தின் போதனை.

ஓரிறைக் கொள்கையைப் பின்பற்றும் இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயங்களின் இந்தப் போதனைதான் கருதினால் மல்கம் ரஞ்சித்துடைய வார்த்தைகளிலும் ஒலித்தது. கொந்தளிப்பான சூழலை அவதானித்து உண்மையான மதத் தலைவர் என்ற வகையில் அவர் ஆற்றிய உரை பாதிக்கப்பட்டவர்களுக்கு அன்பையும் அமைதியையும் வழிகாட்டலையும் வழங்குவதாக அமைந்திருந்தது. உங்களது சாதுர்யமான ஆறுதல் வார்த்தைகள் சிங்கள தமிழ் கிறிஸ்தவர்களின் உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

கிறிஸ்தவர்கள் எப்படியும் அமைதியை விரும்புபவர்கள். நீங்கள் ஒரு அற்புதமான மனிதர், கருதினால் அவர்களே! நெருக்கடியான நிலையில் நீங்கள் வழங்கிய தலைமைக்கு நான் மதிப்பளிக்கிறேன். கொந்தளிப்பான நிலையிலும் அமைதி காத்த கிறிஸ்தவ சகோதர சகோதரிகளுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

என்னுடைய ஏனைய சகோதர சகோதரிகளுக்கும் ஊடகங்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும்.

எனது சகோதர சகோதரிகளே, நீங்கள் அதிர்ச்சி அடைந்திருந்தால் முஸ்லிம்களும் அதுபோலவே அதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் இதனைக் கண்டிப்பது போலவே, சந்தேகத்துக்கிடமின்றி முஸ்லிம்களும் இதனைக் கண்டிக்கிறார்கள். தாக்குதல் நடத்திய மிருகங்களைத் தப்பிக்க விடாமல் செய்தமையை பெரும்பாலானவர்கள் வரவேற்கின்றார்கள். சமூக ஊடகங்களின் தாக்கத்தினால் உங்களில் சிலர் குழப்பம் விளைவிக்கவும் ஒற்றுமையைக் குலைக்கவும் முயன்றீர்கள். வன்முறைகளில் ஈடுபடுவதற்குத் தூண்டப்பட்டீர்கள். தயவு செய்து குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதற்கு முனையாதீர்கள். இது நெறிமுறைகளுக்கும் தார்மீகங்களுக்கும் அப்பாற்பட்டது.

வெறுப்பைப் பரப்புவதில் சந்தர்ப்பவாதிகளாக இருந்து விடாதீர்கள். மக்களின் உணர்வுகளைக் கிளறும் வகையில் பொய்யையும் வதந்திகளையும் பரப்பாதீர்கள். ஒழுக்கமான, கண்ணியமான மனிதர்களாக நடந்து கொள்ளுங்கள். நீங்கள் வன்முறையில் இறங்கினால், இந்த மிருகங்களின் நோக்கத்துக்கு நீங்களும் உடந்தையாகிறீர்கள் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள். அவ்வாறென்றால் உங்களுக்கும் அவர்களுக்கும் எந்த வித்தியாசமும் கிடையாது. அது மரணத்துக்கும் அழிவுக்குமே வழி கோலும். நீங்கள் அந்தக் குழுவினரில் அடங்க மாட்டீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

பாரபட்சங்கள் நிலவிய வேளையிலும் பொறுப்புடன் செயற்பட்ட சில ஊடகங்களும் இருந்தன. ஊடக தர்மத்தைப் பற்றி ஊடகங்களுக்கு நான் சொல்லித் தருவது என்பது கொல்லன் தெருவில் ஊசி விற்பதற்குச் சமமானது. ஊடகங்களுக்கு நெறிமுறைகள் பற்றி எல்லாம் தெரியும். நீங்கள் நல்லதைச் செய்திருக்கிறீர்கள். ஆனால் உங்களது தரத்தை உயர்த்திக் கொள்ள நீங்கள் இன்னும் சிறப்பாகச் செயற்பட வேண்டும். இதனை வார்த்தைகளினால் சொல்வது போதாது. செயற்படுத்திக் காட்டுங்கள். மக்களது உள்ளங்களை வெல்லுங்கள். உங்களுக்கு முன்னால் பாரிய பொறுப்பு இருக்கிறது.

சரியான முறையில் சிந்தித்து பொறுப்புடன் செயலாற்றுகின்ற ஒரு சிலரைத் தவிர, ஏனைய அனைத்து அரசியல் வாதிகளதும் பொறுப்பின்மை, சூடு சொரணையின்மை, அடுத்தவர்களை ஏசித் திரிவது என்பன தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இவர்களில் பெரும்பாலானவர்கள் சமூகத்தின் எதிரிகள் மூலமாக பயன் பெறுகிறார்கள். பாராளுமன்றத்தில் உங்களது கோமாளித்தனத்தை நாட்டில் யாருமே மெச்சுவதில்லை என்பது உங்களில் சிலருக்கு இனிமையானதாக இருக்கலாம். தயவு செய்து பொறுப்புடன் செயற்படுங்கள். உங்களது சிந்தனைகளில் நாட்டை மனமுவந்து முற்படுத்துங்கள்.

இது எனது நாடு. இது உங்களது நாடு. இது எங்களது நாடு. சிங்களவர், தமிழர், முஸ்லிம்களாகவும், பௌத்தர், இந்து, கிறிஸ்தவர், இஸ்லாமியராகவும் நாம் கைகளை ஒன்றாய்க் கோர்ப்போம். சோதனைகளும் வேதனைகளும் நிறைந்த இந்தச் சூழலில் சமாதானத்துக்காக முன்னர் ஒன்றிணைந்தது போல மீண்டும் நாங்கள் ஒன்றாய் இணைவோம். ஒற்றுமையாய் இந்த அநியாயத்தை முறியடிப்போம். ஒற்றுமையினால் மட்டுமே இந்த மிருகங்களை வெல்ல முடியும். நாங்கள் பிரிந்து விட்டால் இந்த மிருகங்களே வெல்லும்.

இலங்கை நீடூழி வாழ்க !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• பியாஸ் முஹம்மத்

# தோற்றுப் போன ஈஸ்டர் தாக்குதல்

2001 இல் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க பதவியேற்றதும் புத்த சாசனம் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்திருந்தார். இதனது அறிக்கை 2002 இல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையில் முஸ்லிம் அடிப்படைவாதச் செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. 2009 இல் ஆளுனர் அலவி மௌலானாவும் முஸ்லிம் அடிப்படைவாதம் பற்றி பகிரங்கமாக கருத்து வெளியிட்டிருந்தார். அடிப்படைவாத முஸ்லிம்கள் சில அரசியல்வாதிகள் மற்றும் சர்வதேச உறவுகள் மூலமே இந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன என மாவனல்லைச் சம்பவம் தொடர்பில் கடந்த ஜனவரியில் பொதுபலசேனா வெளியிட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அன்றிலிருந்து இன்றுவரை இஸ்லாமிய அடிப்படைவாதம் பற்றி நாட்டில் பலரும் சிலாகித்து வருகின்றனர். ஆனால் இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது என்ன என்பது தொடர்பில் முஸ்லிம் சமூகமும் சரிவரப் புரிந்து கொள்ளாத ஒன்றாகவே காணப்படுகிறது. பிலிப்பைன் பல்கலைக் கழகத்தின் தத்துவம் மற்றும் ஆசிய கற்கைகளுக்கான பேராசிரியர் ஹென்றி பிரான்சிஸ் பி எஸ்பிரித்து இது தொடர்பில் விவரிக்கும் போது, இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது உண்மையிலேயே தவறாகப் புரியப்பட்டதொரு வார்த்தைப் பிரயோகமாகும். இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது இஸ்லாத்தில் இருந்து பெறப்பட்ட ஒரு சொல் அல்ல. எந்த இஸ்லாமிய அமைப்பும் இதனை நோக்கி அழைப்பு விடுப்பவையும் அல்ல.

நவீன மேற்கத்தேய மத பரிபாஷையில் முஸ்லிம்கள் மீது தவறாகப் பிரயோகிக்கப்படும் வார்த்தையே அடிப்படைவாதம் என்பதாகும். அடிப்படைவாதிகள் என்பது, பைபிள் வாசகங்களின் உரைபெயர்ப்பை விசுவாசிக்கின்ற கிறிஸ்தவர்களைக் குறிப்பதற்காக அமெரிக்க மத சமூகவியலாளர்கள் பயன்படுத்திய வார்த்தைப் பிரயோகமாகும் எனவும் அந்த வகையில் இது இஸ்லாத்துக்கோ முஸ்லிம்களுக்கோ பிரயோகிக்கப்பட முடியாது எனவும் தெரிவிக்கிறார்.


தாலிபான் தலைவர்களுடன் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரேகன்

சமய, சமூக வரைவிலக்கணத்தின்படி, அடிப்படைவாதம் என்பது எந்தவொரு நம்பிக்கையினதும் அடிப்படைகளுக்கு அல்லது பிரதானமான கொள்கைகளுக்கு அழுத்தம் கொடுப்பதைக் குறிக்கிறது. அமெரிக்காவின் தீவிர பழமைவாத புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளைக் குறிப்பதற்கு 1900 களின் ஆரம்பத்தில் பாவிக்கப்பட்ட வார்த்தையே அடிப்படைவாதமாகும். 1909 - 1915 இடைப்பட்ட காலப்பிரிவில் ''விசுவாசத்தின் அடிப்படைகள்: விவிலிய உண்மைகளுக்கான சான்றுகள்'' என்ற பெயரில் சமய ஆய்வுக் கட்டுரைத் தொடரொன்று வெளியிடப்பட்டது. இந்த சமயக் கட்டுரைகளில், கிறிஸ்தவ மதத்தின் உண்மையான அடிப்படைகளை அல்லது முக்கியமான கோட்பாடுகளை அவர்கள் வரைவிலக்கணப்படுத்தியிருந்தனர்.

பைபிளின் உரைபெயர்ப்புத் தான் இந்தக் கோட்பாடுகளின் மையக் கருத்தாக இருந்தது. 1920 களில் அமெரிக்க புரட்டஸ்தாந்துகளுக்கிடையிலான நவீனத்துவத்துக்கு எதிரான வாதங்களின் போது இந்த நம்பிக்கையுடையவர்கள் அடிப்படைவாதிகள் என அழைக்கப்பட்டார்கள் என வைட் எல் மூடி தனது இறையியல் கையேட்டில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அடிப்படைவாதத்துக்கு இஸ்லாமிய அடைமொழியைப் பாவிப்பது பொருத்தமாகாது. அது மேற்குலகில் உருவாக்கப்பட்டு சந்தைக்கு வந்த பண்டம். அடிப்படைவாதம் என்பதை கிறிஸ்தவர்கள் பாவிக்கும் அதே அர்த்தத்தில் முஸ்லிம்கள் பாவிக்கவில்லை. எல்லாவற்றுக்கும் அடிப்படைகள் இருப்பது போல இஸ்லாத்துக்கும் அடிப்படைகள் இருக்கின்றன. இஸ்லாத்தின் அடிப்படைகளை நடைமுறைப்படுத்துவதனை இலகுபடுத்துவதற்காக மாற்றங்களை மேற்கொள்வதனையோ, நவீனமயப்படுத்துவதனையோ இஸ்லாம் மறுக்கவில்லை. இஸ்லாத்தின் அடிப்படைகளைப் பாதுகாப்பதற்கான இமாம் இப்னு தைமியாவின் செயற்பாடுகள் இந்தவகையைச் சார்ந்தவையே. இதில் அவர் எங்குமே வன்முறையை ஒரு வழிமுறையாகக் கொண்டதில்லை. அந்தவகையில் அடிப்படைகளில் மட்டுமே தங்கியிருந்து அதற்காகப் போராடும் அடிப்படைவாதத்துக்கும் இஸ்லாத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை. அப்படிப் பார்க்கும் போது அடிப்படைவாதத்துக்காக வன்முறையைப் பாவிப்பதை இஸ்லாமாக ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை.

இஸ்லாம் என்பது அமைதியை, சமாதானத்தைக் குறிக்கிறது. அந்த மார்க்கத்தின் இறைவன் அஸ்ஸலாம் - சாந்தியானவன் - என்ற பெயரால் அழைக்கப்படுகிறான். அவனுடைய தூதர் உலக மக்களுக்கான அருளாக அனுப்பப்பட்டவர். ஆகவே இந்த மார்க்கம் வன்முறையான மார்க்கமாக முடியாது. இஸ்லாத்தின் அல்லது முஸ்லிம்களின் குறியீடாக சிலர் பாவிக்கும் ஜிஹாத் என்பது கூட அல் குர்ஆனில் யுத்தமாகக் குறிப்பிடப்படவில்லை. அதனை ஒரு போராட்டம் என்றே அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. அல்குர்ஆன் ஜிஹாத் பற்றிப் பேசியதை விட பொறுமை பற்றியே அதிகமாகப் பேசியிருக்கிறது. நபிகளார் யுத்தத்தை விரும்பி மேற்கொண்டவரல்ல. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர் மோதலைத் தவிர்த்துக் கொள்ளவே முயற்சித்திருக்கிறார்.

தனது பக்கம் நியாயம் இருந்த போதிலும் ஹுதைபியாவில் அவர் சமாதானமாகப் போவதை விரும்பினார். அஹ்ஸாப் யுத்தத்தின் போது சேதத்தைக் குறைப்பதற்காக அகழி தோண்டினார். பத்தாயிரம் பேர் கொண்ட படையுடன் மக்காவை நோக்கித் திரும்பி வந்த போதும் மக்கா வெற்றியின் போது எந்த வன்முறையிலும் தமது தரப்பினர் ஈடுபடாமல் அவர் தனது சமூகத்தினரை வழிநடத்தினார். தனது வாழ்நாளில் நபிகளார் மூன்று முறையே யுத்தத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இதனுடைய மொத்தக் கால அளவே ஒன்றரை நாட்கள் மட்டும் தான். வேறு வழியில்லை என்ற நிலையிலேயே அவர் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார். அதுவும் தற்பாதுகாப்புக்கான போராட்டமாக அமைந்திருந்தது.

இந்தவகையான போராட்டங்கள் தமது அடிப்படையான இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கான நீதிக்கும் அநீதிக்கும் இடையிலான போராட்டமாக அமைந்திருந்தன. இவை கூட அநீதியை எதிர்கொள்வதற்கு வன்முறையைத் தூண்டிவிடுவதாக அமைந்திருக்கவில்லை. உலக சமாதானம் பற்றிய இந்தச் சிந்தனையைச் சுமந்திருந்த உஸ்மானியப் பேரரசு மேற்கிலும் மொகலாயப் பேரரசு கிழக்கிலும் வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து மேற்கின் ஏகாதிபத்தியச் சக்திகள் 20 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பாதியில் முஸ்லிம்களின் நிலங்களை அபகரித்து காலனித்துவமயப்படுத்தின. இதன்போதான ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக ஆங்காங்கே போராட்டங்கள் நடந்தன. இந்தப் போராட்டங்களை சிந்தனையின் வன்முறையாக உருவகப்படுத்தி இஸ்லாம் கொண்டு வந்த சமாதானச் சிந்தனையையே வன்முறையானதாகச் சித்திரிப்பதில் மேற்கின் ஊடகங்கள் வெற்றி கண்டன. இதன் அடிப்படையில் தான் இஸ்லாமிய அடிப்படைவாதம், இஸ்லாமிய தீவிரவாதம் என்ற சொற்கள் பிறப்பெடுத்தன.

இவ்வாறு அநியாயத்துக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்கும் சிறு குழுவினர் தமது போராட்டங்களை விஸ்தரிப்பதற்காக வேண்டி முயற்சிக்கின்ற போது அவர்களுக்கு உதவி வழங்குதல் என்ற போர்வையில் மேற்கு விரிக்கும் வலைகளில் அவர்கள் சிக்கி விடுகின்றனர். இதனால் போராட்டம் திசை மாறி தமக்கு உதவியவர்களின் தேவைக்கேற்றவாறு வன்முறைக் குழுக்களாக வடிவமைக்கப்படுகின்றன. இதற்கு இஸ்லாமிய அடையாளத்தைப் புகுத்தி, இஸ்லாமிய வன்முறையாக இதனை உலகுக்குக் காட்டுவதனூடாக அநீதிக்கெதிரான போராட்டங்கள் மழுங்கடிக்கப்படுகின்றன. மேற்கத்தேய ஊடகங்கள் இந்த வன்முறைக் குழுக்களின் செயற்பாடுகளைத் தான் இஸ்லாமியப் போராட்டம் என்று காட்டுகின்றன.

ரஷ்யாவுக்கு எதிராக தாலிபான்களை சீஐஏ (அமெரிக்கா) பயன்படுத்தியது பற்றி மைக்கல் சொஸுடோவ்ஸ்கி தனது யுத்தமும் உலகமயமாக்கலும்: செம்டம்பர் 11 இன் பின்னாலுள்ள உண்மைகள் என்ற நூலில் தெளிவுபடுத்தியுள்ளார். அநீதிக்கெதிரான ஆப்கானிய முஜாஹித்களின் போராட்டத்தை தனது எதிரியான ரஷ்யாவை வீழ்த்துவதற்குப் பாவித்து பின்னர் அந்தப் போராட்டக் குழுவை இஸ்லாமிய வன்முறைக் குழுவாக அமெரிக்கா மாற்றி அழித்தொழித்த வரலாறு கிழக்கில் நடந்திருக்கிறது.

(பக்.14)

• லத்தீப் பாரூக்

# ஈஸ்டர் தாக்குதல்: பின்னாலிருந்த சக்தி எது?



மனிதாபிமானமற்ற கொடூரமான ஏப்ரல் 21 தாக்குதல்களை தற்போதைய நிலைமையில் வெறுமனே ஒரு குறிப்பிட்ட சமயத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களாக பார்க்கக் கூடாது. மாறாக இதை நாட்டின் பல்லினப் பண்பு மற்றும் பல்லின சமூகக் கட்டமைப்பு என்பனவற்றின் மீது நடத்தப்பட்ட கொடிய தாக்குதலாகவே நோக்க வேண்டும்.

முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் இந்த நாட்டில் எப்போதுமே வன்முறைகள் தலைதூக்கியதாக வரலாறு கிடையாது. ஆனால் இவ்விரு சமூகங்களுமே அடிப்படைவாத சிங்கள பிரிவுகள் சிலவற்றால் குறிவைக்கப்பட்டு வந்துள்ளமை அண்மைக்கால வரலாறாகும். இந்த இரு சமூகங்களும் குறிப்பிட்ட பிரிவுகளால் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் ஒருபோதும் அவற்றுக்குப் பதில் அளிக்கவில்லை. இந்த குண்டுதாரிகள் அரச இலக்குகளை தாக்கியிருந்தால், களியாட்ட விடுதிகளைத் தாக்கியிருந்தால், பௌத்த விகாரைகளை அல்லது இந்துக் கோயில்களை கூடத் தாக்கியிருந்தால் பழிவாங்கும் நோக்கில் நடத்தப்பட்டதாக அர்த்தம் கொண்டிருக்கலாம்.

மூன்று தசாப்த கால இனவாத யுத்தத்தின் போது சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்த முஸ்லிம் சமூகம் ஏப்ரல் 21 இல் நடத்தப்பட்டுள்ள பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ள இந்தத் தாக்குதலில் முஸ்லிம் குழுக்கள் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கேள்வியுற்று பெரும் அதிர்ச்சியிலும் குழப்பத்திலும் மூழ்கி உள்ளது.

இந்தத் தாக்குதல்களில் தேசிய தவ்ஹீத் ஜமாஅத்தின் சம்பந்தம் அதனைத் தொடர்ந்து ஏற்கனவே இனவாதக் கூலிப் படையினரின் தாக்குதலுக்கு ஆளாகி உள்ள முஸ்லிம் சமூகத்தின் மீது பாரதூரமான கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற ரீதியில் தொடங்கப்பட்டுள்ள ஊடகப் பிரச்சாரம் என்பன பெரும் கவலை அளிப்பதாக அமைந்துள்ளன.

எந்தவிதமான ஆத்திரமூட்டல் செயற்பாடுகளிலும் ஈடுபடாத முஸ்லிம் சமூகம் 2018 மார்ச்சில் மத்திய மலைநாட்டில் தாக்குதலுக்கு உள்ளானது. அதன் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. சூறையாடப்பட்டன. கோடிக்கணக்கில் நட்டம் ஏற்படுத்தப்பட்டது. வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்பட்டன. வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டன.

இந்த அழிவுகள் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் மத்தியில் இன்னமும் ஆறாத வடுவாக உள்ளன. ஆனால் யாரும் இது வரை சட்டத்தின் முன்னால் நிறுத்தப்படவில்லை. இந்த சம்பவங்களோடு தொடர்புடைய ஒருவர் மகிந்த ராஜபக்ஷ இடைக்காலத்தில் பிரதமராக அரசியல் சாசனத்துக்கு முரணாக நியமிக்கப்பட்ட கையோடு விடுதலை செய்யவும் பட்டார். இதுதான் இந்த நாட்டு முஸ்லிம்கள் எதிர்நோக்கிய தலை விதி. மேலைத்தேய ஆதரவுப் போக்குள்ள ரணில் மைத்திரி அரசால் அவர்கள் ஓரம் கட்டப்பட்டார்கள். முஸ்லிம்கள் மீது பாரபட்சம் காட்டப்படுவதாக அவர்கள் உணர்ந் தார்கள்.

இந்த நாட்டின் உள்நாட்டு அரசியல் நடிகர்களோடு வெளிநாட்டுச் சக்திகளின் பங்களிப்பு பின்னிப் பிணைந்துள்ளது என்பது தெளிவாகத் தெரியும் விடயமாகும். சர்வதேச ரீதியில் மூலோபாய கேந்திர முக்கியத்துவம் மிக்க இந்த நாட்டில் பிளவுகளையும் பிரிவினையையும் ஏற்படுத்தி தமது நலன்களைப் பேணுவதுதான் வெளிநாட்டுச் சக்திகளின் நோக்கமாக உள்ளது. இந்து சமுத்திரத்தில் நமது கண்களுக்குப் புலப்படாமல் இடம்பெற்று வரும் பனிப் போர், அதிகரித்து வரும் இராணுவ மயமாக்கல் என்பனவற்றின் பின்னணியில் இலங்கையில் தமது இராணுவ கேந்திர நிலையங்களை உருவாக்கிக் கொள்வதற்கான ஒரு போட்டியும் வலுவடைந்துள்ளது. யுத்தத்துக்குப் பிந்திய காலத்தில் இந்துத் தீவிரவாத அமைப்பான RSS உம் பௌத்த தீவிரவாத அமைப்பான BBS உம் ஒன்றிணைந்தன. இந்தக் கூட்டணி ஏன் முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் மூட்டி விடுவதற்கான இலக்கை வைத்திருக்கக் கூடாது?

குண்டுதாரிகள் கிங்ஸ்பரியையும், சின்னமன்ட் கிறாண்டையும் ஷாங்கிரிலாவை [illegible] நடுவே உள்ள இந்தியாவுக்கு உரித்தான தாஜ்சமுத்திராவை? ஏன் இவர்கள் விட்டு வைத்தார்கள்? ஏன் அதை மறந்து போனார்கள். இந்த குண்டு வெடிப்பின் விவரங்கள் பற்றி உள்ளூர் ஊடகங்கள், அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளை விட இந்திய ஊடகங்களும் அரசியல்வாதிகளும் அதிகம் அறிந்து வைத்துள்ளார்களே, அது எப்படி?

இந்த சம்பவம் இடம்பெற இரு வாரங்களுக்கு முன்பே இந்திய உளவுத் துறை இலங்கை உளவுத் துறைக்கு தகவல்களை வழங்கியதாகக் கூறப்படுகின்றது. தாக்குதல்தாரிகள் பற்றிய தகவல்களும் வழங்கப்பட்டுள்ளனவாம். அப்படி என்றால் இந்திய உளவுப் பிரிவு இந்த நாட்டுக்குள் எந்தளவு ஊடுருவி உள்ளது என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தாக்குதல்தாரிகள் கிறிஸ்தவ தேவாலயங்களை வெற்றிகரமாகத் தாக்கி உள்ளனர். ஆனால் அவர்களின் இலக்காக இருந்ததாகச் சொல்லப்படும் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகம் மட்டும் ஏன் தாக்கப்படவில்லை?

மிக மோசமாகக் கண்டிக்க வேண்டிய இந்தக் கீழ்த்தரமான பாரிய அளவிலான குற்றச் செயலை தெமட்டகொடையில் அல்லது சரிக்காமுல்லையில் இருக்கின்ற ஒரு சிலரைக் கொண்ட ஒரு குழுவால் மட்டும் செய்திருக்க முடியாது. இந்தத் தாக்குதல்கள் மிகத் துல்லியமாகத் திட்டமிடப்பட்டு நேர்த்தியாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. மிக நவீன வெடிபொருள்கள் பாவிக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட ஒரு சில நிமிட கால எல்லைக்குள் இந்தத் திட்டங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. அதிகாரிகள் தேசிய தௌஹீத் ஜமாஅத் அல்லது NTJ மீது குற்றம் சாட்டியுள்ளனர். இந்தக் குழுவுக்கு வெளிநாட்டுத் தொடர்புகள் பல இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

இந்த வெளிநாட்டுத் தொடர்புகள்தான் இந்தத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பதையும் நிர்ணயிக்கப்ப போகின்றது. எனவே NTJ இன் வெளிநாட்டுத் தொடர்புகள் காரணமாக இந்தத் தாக்குதலின் பின்னால் ஏதோ ஒரு வெளிநாட்டு அமைப்பு அல்லது வெளிநாட்டு அரச அமைப்பு அல்லது வெளிநாட்டு அரசு அல்லது வெளிநாட்டு அரச புலனாய்வுப் பிரிவு என ஏதோ ஒரு வெளிநாட்டு மறைகரம் செயல்பட்டுள்ளது என்பதில் மட்டும் எவ்வித சந்தேகமும் இல்லை என்றே கூற வேண்டும்.

இந்த மிகப் பெரிய விளையாட்டில் மிகவும் ஆபத்தான விளையாட்டில் பகடைக்காய்களாக அல்லது இந்த பயங்கரத் தூண்டிலில் சிக்கிக் கொண்ட இரைகளாக உள்ளவர்கள் தான் களம் இறக்கப்பட்டவர்கள்.

புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும் அரசு ஏன் துரித கதியில் செயல்படவில்லை என்ற கேள்வியும் இங்கு பிரதானமாக எழுப்பப்பட்டுள்ளது. நூற்றுக் கணக்கான அப்பாவி உயிர்களைக் காவு கொள்ளக் கூடிய திட்டம் முன்கூட்டியே தெரிந்திருந்தும் அரசு இயந்திரம் அதை தடுக்கும் விதத்தில் ஏன் செயற்படவில்லை? அப்பாவி உயிர்களைக் காப்பாற்றுவதுதான் ஒரு அரசு என்ற ரீதியில் செய்திருக்க வேண்டிய தலையாய கடமையாகும்.

இந்தச் சம்பவங்கள் பற்றி ஆராய ஜனாதிபதி ஒரு குழுவை நியமித்துள்ளார். முன் கூட்டி கிடைத்த தகவல்கள் ஏன் அலட்சியம் செய்யப்பட்டன என்பது பற்றி புறம்பாக ஆராயப்பட வேண்டும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## பொது எதிரி

எதிரி மையப்பட்ட அரசியலே நம்முடையது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றில் குறிப்பிட்டிருந்தார். இலங்கையில் அரசியலை முன்னெடுத்துச் செல்வதற்கு எல்லோருக்குமே எதிரி மனப்பான்மையை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது. இந்த எதிரியை இதுவரை காலமும் நாட்டுக்குள் இருக்கின்ற இனங்களுக்கிடையே உருவாக்குவதில் அரசியல்வாதிகள் தொடர்ந்தும் வெற்றி அடைந்து வந்திருக்கிறார்கள்.

நாட்டில் இனங்களுக்கிடையே மோதலை உருவாக்கி அதிலே குளிர்காய்வதை அவர்கள் வாடிக்கையாக்கி வைத்திருந்தார்கள். எத்தனை உயிர்கள் போனாலும் நாடு எப்படிக் குட்டிச் சுவராகிப் போனாலும் தமது அரசியலை நடத்துவதற்கு இதுவொன்றும் அவர்களுக்குப் பிரச்சினையாகத் தெரியவில்லை. மாறி மாறி வந்த எல்லா அரசாங்கங்களும் அரசியல்வாதிகளும் இதே நடைமுறையைத் தான் பின்பற்றினார்கள்.

உயிர்த்தெழுந்த ஞாயிறு தாக்குதல் ஒரு பூகோளப் பிரச்சினை என ஜனாதிபதியும் பிரதமரும் பல முறை கூறி வருகின்றனர். இருந்த போதிலும் நாட்டுக்குள்ளே இருக்கின்ற இன்னொரு சமூகத்தை குற்றவாளியாக்கி மீண்டும் இனங்களுக்கிடையே மோதலை உருவாக்குவதற்கு சில சக்திகள் பின்னணியில் இருந்து செயற்படுவதையும் அவதானிக்க முடியுமாகியுள்ளது.

உயிர்த்தெழுந்த ஞாயிறு தாக்குதலுக்காக முஸ்லிம் சமூகத்தின் மீது பழிவாங்குவதற்கு ஒரு கூட்டம் தயாராகி வருகிறது. ஏற்கனவே அரசியல்வாதிகள் விதைத்த முஸ்லிம்களுக்கெதிரான இனவாத நச்சுவிதைகளின் அறுவடையை இந்தத் தாக்குதலுடன் பிணைத்துக் கொள்வதற்கு சந்தர்ப்பவாத சக்திகள் முயற்சித்து வருகின்றன. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு விதமாக முஸ்லிம் சமூகம் இலக்கு வைத்திருக்கப்பட்டிருப்பதை அவதானிக்கும் பொழுது, ஒரு சமூகம் திட்டமிட்டு பழிவாங்கப்படுவது தெரிகிறது.

இது நாட்டு மக்கள் தமக்குள்ளால் சண்டை பிடித்துக் கொள்வதற்கான தருணமல்ல. அரசியல் செய்வதற்கு எதிரி மனப்பான்மை தேவை என்றிருந்தால் நாட்டு மக்களை எதிரிகளாக்குவதை விட்டு பொதுஎதிரியின் மக்களின் கவனத்தைத் திருப்புவதே நாட்டின் மேல் உண்மையான அக்கறையுள்ள அரசியல் தலைவர்கள் செய்ய வேண்டிய பணி. அரசியல்வாதிகளின் தேவைக்காக இனங்களுக்கிடையில் இரத்த ஆறு ஓட்டிக் கொண்டிருந்த இலங்கை மக்களுக்கு தற்போது சர்வதேசப் பயங்கரவாதம் என்கின்ற பொது எதிரி வாய்த்திருக்கிறது. இந்த நிலையில் மீண்டும் சில்லறைப் பிரச்சினைகளுக்கும் சந்தேகங்களுக்குமெல்லாம் தமக்கிடையே சண்டை பிடித்துக் கொள்ளாமல் பொது எதிரியை எதிர்கொள்வதற்கான வழிவகைகளை ஒன்றாக இணைந்து செயற்படுத்துவது பற்றி இலங்கைச் சமூகம் சிந்திக்க வேண்டும்.

உயிர்த்தெழுந்த ஞாயிறு தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களை முஸ்லிம் சமூகம் வேறு பிரித்துக் காட்டியிருக்கிறது. சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யவும் அழித்தொழிக்கவும் அது தன்னாலான அனைத்து வழிகளையும் செய்து கொடுத்துள்ளது. நாட்டுக்கான தனது விசுவாசத்தை தொடர்ந்தும் அது வெளிப்படுத்தி வருகிறது. நாட்டின் பொது எதிரியை எதிர் கொள்வதற்கு அந்தச் சமூகம் தன்னை அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறது என்பதனை முஸ்லிம் சமூகத்தின் தலைமைகள் வெளிப்படுத்தி இருக்கிறார்கள். சர்வதேச பயங்கரவாதியான ஐஎஸ் தமது சமூகத்துக்கு எதிரானது என்பதை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஐஎஸ் அமைப்பு உலகெங்கிலும் முஸ்லிம்களைக் கருவறுக்கவே செயற்படுகிறது என்பதையும் அவர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் அடுத்தடுத்த கட்டங்களில் ஐஎஸ் இன் தாக்குதல் இலக்குகளாக முஸ்லிம் சமூகம் அமையக் கூடும். அந்த வேளையில் நாட்டில் சமாதானமாக வாழும் ஒரு சக இனம் என்ற வகையில் நாட்டு மக்கள் அனைவரும் இணைந்து தமது பொது எதிரியை எதிர்கொள்வதற்குத் தயாராக வேண்டும். ஒன்றுபட்டு பொதுஎதிரியை எதிர்கொண்டால் மட்டுமே இந்த மாபெரும் பயங்கரவாதத்தின் முன்னால் நமது நாடு தாக்குப் பிடிக்க முடியும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தும்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல: 96, கிருல வீதி, கொழும்பு 05
தொலைபேசி 011-5353635
பெக்ஸ் 011-5335500
ஈமெயில் sreckwood@pccsl.lk
இணையத்தளம் www.pccsl.lk

# யேசு உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணி

• முஹம்மத் நஸ்ரீம்

ஊடகங்களில் வெறும் செய்திகள் மாத்திரம் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இக்கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அவை காணப்படுவதில்லை. எனவே அவ்வாறான மிக முக்கியமான விடயத்தைப் பற்றி இக்கட்டுரை ஆராய இருக்கின்றது.

1. நியூஸிலாந்து படுகொலைக்குப் பிறகு மேற்கத்தேய முஸ்லிம்களுடன் அனுதாபத்தை பகிர்ந்து கொள்வதற்காக இத் தீவிரவாதத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதா?

2. சீனா இலங்கையில் அடைந்து வரும் நன்மைகளைக் கண்டு பொறுக்க முடியாத வல்லரசு நாடுகளால் திட்டமிடப்பட்ட பயங்கரவாத தாக்குதல்களா?

3. அமெரிக்காவுடனான சிரியா மற்றும் ஈராக் போர்களின் போது தோல்வியடைந்தமைக்கு பழி தீர்ப்பதற்காகவா?

4. இத்தாக்குதல் பற்றி இலங்கையின் பாதுகாப்புத் தரப்புக்கு முன் கூட்டி எச்சரிக்கப்பட்டுள்ள போதும் அது பற்றி அரச மற்றும் பாதுகாப்புத் தரப்பு கவனத்திற் கொள்ளாமைக்கான காரணம் என்ன?



5. இத்தாக்குதலின் சூத்திரதாரிகள் சிறுபான்மை கிறிஸ்தவ சமூகத்தை ஏன் இலக்கு வைத்தனர்?

6. சீனக் கம்பனிகளுக்குச் சொந்தமான ஹோட்டல்கள் ஏன் இலக்கு வைக்கப்பட்டன?

7. இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு சிங்களப் பேரினவாத சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட இன வெறித் தாக்குதல்களுக்கு பழிவாங்கும் செயற்பாடாக இதனை நோக்க முடியுமா?

8. உள்நாட்டு அரசியல்வாதிகள் இச் சூழ்ச்சியுடன் தொடர்புபடுகிறார்களா?

9. யார் இந்த ISIS தீவிரவாதிகள்? அமெரிக்காவுக்கும் இந்த அமைப்புக்கும் என்ன தொடர்பு? இவர்களுடன் இலங்கை தற்கொலைக் குண்டுதாரிகள் எவ்வாறு தொடர்பானார்கள்?

10. இலங்கை முஸ்லிம்களிலுள்ள ஒரு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட ஏற்று கொள்ளவே முடியாத இப்படுகொலைகளுக்கு முஸ்லிம்கள் மாத்திரம் தான் பொறுப்புக் கூற வேண்டுமா? அல்லது அவர்களை மாத்திரம் தான் குற்றவாளிகள் கூண்டில் நிறுத்தப்பட வேண்டுமா?

11. நஷ்டம் யாருக்கு?

12. இதிலிருந்து மீண்டு கொள்வதற் கான ஆலோசனை என்ன?

அரசு மற்றும் பாதுகாப்புத் தரப்புக்கு
மக்கள் பிரதிநிதிகளுக்கு
அரசியல்வாதிகளுக்கு
மக்களுக்கு
முஸ்லிம்களுக்கு

என்ற பல கேள்விகளுக்கான விடைகளைத் தேட வைப்பதற்கு இவ்வாய்வு வழிவகுக்கலாம். இக்கேள்விகளை தனித் தனியே தொகுத்திருந்தாலும் தகவல்களை தனித்தனித் தொகுப்புக்களாக எழுத முடியாது. ஒவ்வொரு கேள்வியும் இன்னொன்றுடன் நேரடியாகத் தொடர்புபடுவதனால் ஆய்வு முழுக் கேள்விகளும் உள்ளடங்குகின்ற வகையில் எழுதப்பட்டுள்ளது. முழுமையாக வாசிக்கின்ற போதுதான் ஒரு பொதுவான பார்வைக்கு வர முடியும்.

நியூஸிலாந்து படுகொலைக்குப் பிறகு மேற்கத்தேய முஸ்லிம்களுடன் அனுதாபத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக இத்தீவிரவாதத் தாக்குதல் மேற்கொள்ளப்படாது.

நியூசிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்குப் பழி தீர்க்கும் வகையில் தான் இலங்கையில் ISIS தமது தாக்குதலை மேற்கொண்டது என்ற எதிர்வு கூறலை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படி பழி வாங்குவதற்காக இலங்கையை மாத்திரம் தெரிவு செய்தமைக்கான காரணத்தை அலசுகின்றபோது இதனை நியாயப்படுத்த முடியாதுள்ளது. அதே போன்று இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது திடீர் தாக்குதலல்ல என்பதுடன் பல வருடங்களாக திட்டமிடப்பட்டு செய்யப் பட்டது என்பதை களநிலவரங்கள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

அடுத்து இலங்கையில் தாக்குதல் நடாத்தியவர்களுக்கும் நியூசிலாந்தில் தாக்கியவர்களுக்குமிடையில் எவ்விதத் தொடர்பும் கிடையாது. இலங்கையை தமது அடுத்த களமாகப் பயன்படுத்துவதற்கு இலங்கையில் காணப்பட்ட தளர்வான பாதுகாப்பு நிலவரமே காரணம் என்ற ஒரே காரணியில் மாத்திரம் சற்று உடன்படலாமே தவிர வேறெந்தக் காரணிகளையும் இந்நிகழ்வுடன் தொடர்புபடுத்த முடியாது.

### இலங்கையில் சர்வதேச வல்லரசுகளுக்கிடையிலான மோதலும் இலங்கையின் அரசியல் பின்னணியும்...

இலங்கைத் தீவானது ஆசியாவிலே மற்றும் இந்து சமுத்திரத்திலே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாகவும் மற்றும் மூலோபாய அமைவைக் கொண்டும் காணப்படுகிறது. இந்து சமுத்திரத்தில் மிகவும் ஆழமான துறைமுகங்களையும் கொண்டு காணப்படுவதுடன் பூகோள அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையை யார் பிடுங்கிக் கொள்வது என்பதில் பாரிய போட்டி நிலவி வருகின்றது.

எது எவ்வாறு இருந்த போதும் சீனாவானது வரலாற்று நெடுகிலும் இலங்கையுடனான தொடர்பை ஏதோ ஒரு வகையில் பேணி வந்துள்ளது என்பதை வரலாறு பதிந்து வைத்துள்ளது. அதே போன்று சீனா காத்திருந்து பழம் பறிக்கின்றமையிலே மேற்கினுடைய கழுகுப் பார்வை விழ ஆரம்பித்திருக்கிறது எனலாம்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் போது இலங்கைக்கு ஏதோ ஒரு வகையில் தனது விசுவாசத்தை சீனா வழங்கி வந்திருக்கிறது. தனது ஆயுதங்களை இலங்கைக்கு வழங்கி போராட்டத்தில் கைகோர்த்திருக்கிறது.

மறுபுறம் அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் சீனாவின் இலங்கை மீதான மேலாதிக்கத்தை குறைக்கவோ, அல்லது அந்த இடத்தில் தாம் அமர்ந்து கொள்ளவோ பல பிரயத்தனங்களை மேற்கொண்டு வந்திருக்கின்றன என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

''சீனாவின் மூலோபாய நலன்களுக்காக இலங்கை தன்னை இழந்து விடக் கூடாது'' என்ற அடிப்படையில் 2009 ஆம் ஆண்டு செனட்டின் வெளியுறவுக் கொள்கைக்கான குழு இலங்கை அரசுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலே குறிப்பிடப்பட்ட சர்வதேசக் காரணிகளுடன் இலங்கையின் அரசியல் பின்னணியைத் தொடர்புபடுத்தி நோக்குகின்ற போது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவருடைய காலத்தில் இலங்கை சீனாவை நெருங்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற போரை முன்னிறுத்தி ராஜபக்ஷவுக்கு எதிராகப் போர்க் குற்றங்களை மேற்கோள் காட்டி அமெரிக்கா மிரட்டி வந்திருப்பது யாவரும் அறிந்த விடயமாகும். அதே நேரம் சீனாவுடனான நெருக்கத்தைக் குறைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் போர்க் குற்றம் தொடர்பிலான பாரதூரத்தைக் குறைத்து வந்துள்ளது. இவ்வாறான நெருக்குதல்களுக்கு மத்தியிலும் சீனா தன் இலக்கை அடைந்து கொள்வதில் எவ்விதத் தடையும் காணப் படவில்லை.

சீனாவினது மேலாதிக்கத்தின் உச்ச கட்டம் தான் இலங்கை சீனாவுக்கு கடனாளியாக மாறியது. நெடுஞ்சாலைகள் அமைத்தல், ரயில் பாதைகளை புனரமைத்தல் மற்றும் துறைமுக அபிவிருத்தி போன்றவற்றுக்கான ஒப்பந்தங்களே சீனாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட பிரதான பாரிய கடன் சுமைகளாகும்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொழும்பு துறைமுக அபிவிருத்தியைப் பொறுத்தவரை அச்செயற்றிட்டம் முற்று முழுதாக சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அல்லது சீனா தன்வசமாக்கிக் கொண்டுள்ளது என்றும் கூற முடியும். அத்துடன் தற்போது இந்து சமுத்திரத்தினூடே வருகின்ற வியாபார சரக்குகளில் 80%மானவை இத்துறைமுகத்திற்கு வந்திறங்குகின்ற அல்லது ஊடறுத்துச் செல்கின்ற நிலமை காணப்படுகின்றது. சீனாவின் ஆதிக்கத்துடன் இத்துறைமுக வேலைகள் முடிவுக்குக் கொண்டு வரப்படும் பட்சத்தில் சீனாவின் இலங்கை மீதான ஆதிக்கம் இன்னும் பாரிய மடங்குகளால் அதிகரித்திருக்கும் என்பது ஒரு திட்டமான எதிர்வு கூறலாகும்.

எனவே இந்தியாவுக்கு இவ்வளர்ச்சியில் அல்லது சீனாவின் மேலாதிக்கத்தின் உடன்பாடு கிடையாது; இவற்றை அதனால் பொறுக்க முடியாது.

மறுபக்கம் சீனாவைப் பொறுத்தவரையில் கொழும்புத் துறைமுகமானது ஏனைய துறைமுகங்களை விட மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதனை ஒருபோதும் சீனா விட்டுக் கொடுக்க மாட்டாது. ஆபிரிக்க நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் தமது வியாபார பொருட்களை மிக இலகுவாக விநியோகிப்பதற்குப் பொருத்தமான மையமாக இலங்கை விளங்குகிறது.

சர்வதேச நாடுகளுக்கு மத்தியில் சீனாவே இலங்கையில் அதிகமான நலன்களை அடைந்து வருகின்றது. இந்நிலையில் இலங்கையில் ஸ்திரமற்ற நிலையொன்று உருவாகுமாக இருந்தால் சீனாவின் நீண்ட காலத் திட்டங்களுக்கு தடைகள் ஏற்படுவதுடன் பாரிய நஷ்டங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பும் காணப்படுகிறது.

2018 இல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களுக்குமிடையில் கொழும்புத் துறைமுக அபிவிருத்தியை யாருக்கு ஒப்படைப்பது என்பதில் கருத்து வேறுபாடு நிலவியமையே இறுதியாக ரணிலைப் பதவி விலக்கி அவரது இடத்துக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களை பிரதமராக்கிய சம்பவம் நிகழ்ந்தது என்று அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கு துறைமுக அபிவிருத்தியை கையளிக்க நாடி தமது திட்டத்தை காய்நகர்த்திக் கொண்டு வந்ததையடுத்து இந்த முரண்பாடு நிகழ்ந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஜனாதிபதி மேற்கொண்ட இத் திடீர் மாற்றமானது சீனாவுக்கு திருப்தியளித்த அதே சமையம் அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்கு காழ்ப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் எனவும் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இப்பின்னணியிலிருந்து நோக்குகின்ற போது இலங்கை மீதான சர்வதேச நாடுகளினது போட்டி நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு மத்தியில் பிளவினை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல், நாட்டி இன்னுமொரு பயங்கரவாதத்திற்கு நாட்டை இட்டுச் சென்று, ஒரே நேரத்தில் பல இடங்களில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெறும் அளவிற்கு விளைவு பாரதூரமாகி விட்டது.

அடுத்து மிக முக்கியமான அவதானமாக, தற்கொலைக் குண்டுதாரிகள் இலக்கு வைத்த மூன்று ஹோட்டல்களும் சீனக் கம்பனிகளுக்குச் சொந்தமானவையாகும். அத்துடன் இம் மூன்று கம்பனிகளுமே கொழும்புத் துறைமுக அபிவிருத்தியில் நேரடியாகத் தொடர்புபடுகின்ற மற்றும் பாரிய பங்கெடுக்கின்ற சீனக் கம்பனிகளாகும். எனவே இந்த அவதானம் அமெரிக்கா மற்றும் இந்தியாவினது சூழ்ச்சியாக இருக்கலாம் என்ற சந்தேகத்தை உறுதிப்படுத்தும் ஆதாரங்களில் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

### சிறுபான்மை கிறிஸ்தவ சமூகம் இலக்கு வைக்கப்பட்டமைக்கான காரணம்

இலக்கு வைக்கபட்ட கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களை (பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• கலாநிதி றவூப் ஸெய்ன் (Ph.D)



# அவசரகாலச் சட்டமும் முஸ்லிம்களும்

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அடுத்து 23 ஆம் திகதி இலங்கை பாராளுமன்றம் பொது மக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் அவசரகால சட்டவிதிகளை அமுல்படுத்த அனுமதித்துள்ளது. இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி அவர்கள் வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் ஐரோப்பிய காலனித்துவவாதிகள் -குறிப்பாக ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் பல முறை அவசரகாலச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. காலனித்துவத்திலிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் 1953 ஆம் ஆண்டு இலங்கையில் முதல் முறையாக அவசரகால சட்ட விதிகள் அமுல்படுத்தப்பட்டன. ஒரு கிலோ அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து நாட்டில் ஏற்பட்ட அமைதியற்ற நிலைமையினால் 29 நாட்கள் இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1983 இல் ஏற்பட்ட இனக் கலவரத்தைத் தொடர்ந்து அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. இலங்கையில் போர் நடைபெற்ற 27 ஆண்டு காலம் அவசரகாலச் சட்ட நிறைவேற்றப் பட்டு பாராளுமன்றத்தில் நீடிக்கப்பட்டது. அவசர காலச் சட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு 2009 இற்கு பின்னர் மிகப் பெரும் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2009 ஆம் ஆண்டில் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முடிக்கும் வரை அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருந்தது.

எவ்வாறாயினும், போர் முடிந்ததன் பின்னரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அவசரகாலச் சட்டத்தை சிறிது காலம் நீடித்து வந்தார். சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் எழுந்த விமர்சனங்களைத் தொடர்ந்து அவரது அரசாங் கம் அவசரகாலச் சட்டத்தை ரத்துச் செய்தது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் போர்க் காலத்தில் தமிழ் இளைஞர்கள் பாரிய பாதுகாப்பு நெருக்கடிகளை எதிர்கொண்டனர். சந்தேகத்தின் பேரில் எந்தவொரு நபரும் எந்தவொரு நேரத்திலும் கைதுசெய்யப்படுவதற்கான அதிகாரத்தை இச்சட்டம் முப்படையினருக்கு வழங்கியிருந்தது.

நாடளாவிய ரீதியில் படையினர் விரும்பும் இடங்களில் சோதனைச் சாவடிகளை நிறுவினர். சந்தேகத்தின் பேரில் பல்லாயிரக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டனர். புலி ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்பட்ட, கொழும்பில் தங்கியிருந்த அல்லது கொழும்புக்கு வருகை தந்த வடக்குத் தமிழர்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர். தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம்களும் பாதுகாப்புப் படையின் சந்தேகப் பார்வைக்கு உட்பட்டனர்.

இந்நிலையில் இலங்கையின் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து 9 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் அவசரகாலச் சட்ட விதிகளை அமுல்படுத்த ஜனாதிபதி ஆணை வழங்கியுள்ளார். 21 ஆம் திகதி நிகழ்ந்த பயங்கரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்டுள்ள அச்ச நிலைமையை நீக்கி மீண்டும் தலைதூக்காத வண்ணம் பயங்கரவாத செயற்பாடுகளை தடுத்து நிறுத்தும் வகையிலேயே தற்போது அவசர காலச் சட்டம் அமுல்படுத்தப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத்தகைய அவசரகாலச் சட்டத்தினால் எத்தகைய நடவடிக்கைகளை இராணுவத் தரப்பு மேற்கொள்ளும் என்பது குறித்து பொதுமக்கள் தெளிவாகப் புரிந்திருக்க வேண்டும். தற்போது அமுலில் உள்ள அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. சந்தேக நபர்களை கைதுசெய்வதற்கு பொலிஸாருக்கு மாத்திரம் காணப்பட்ட அதிகாரம் தற்போது இலங்கையில் காணப்படும் அனைத்து இராணுவத் தரப்புக்கும் வழங்கப்பட்டுள்ளது.

2. பொலிஸார் தவிர்ந்த ஏனைய பாதுகாப்புத் தரப்பினரால் கைதுசெய்யப்படும் சந்தேக நபர்கள் அவர்கள் தடுப்புக் காவலில் 24 மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்துவதற்கான அதிகாரம் காணப்படுகின்றது.

3. 24 மணித்தியாலங்களின் பின்னர் பொலிஸாருக்கு சந்தேக நபர் ஒப்படைக்கப்பட்டு தடுப்புக் காவல் கட்டளையின் பிரகாரம் அவரை ஒரு மாத காலம் தடுத்து வைக்க முடியும்.

4. ஒரு மாத காலத்திற்கு மேல் சந்தேக நபரைத் தடுத்து வைத்து விசாரணை செய்ய வேண்டுமாயின், பாதுகாப்புச் செயலாளரின் அனுமதியுடன் குறித்த சந்தேக நபர் மேலும் ஒரு மாத காலத்திற்கு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்த அதிகாரம் உள்ளது.

5. கைது செய்யப்படும் சந்தேக நபரிடன் முழுமையாக விசாரணை நிறைவடையும் வரை நீதிமன்றத்திற்குப் பிணை வழங்குவதற்கான அதிகாரம் கிடையாது.

6. கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்படும் சந்தேக நபர் குற்றமிழைக்காதவர் என்பதனை பாதுகாப்புத் தரப்பு உறுதிப்படுத்தும் பட்சத்தில் மாத்திரமே பிணை வழங்கப்படும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உள்ளது.

7. தேவை ஏற்படும் பட்சங்களில் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான அதிகாரம் இச்சட்டத்தின் கீழ் பொலிஸ் மாஅதிபருக்கு வழங்கப்படுகின்றது.

ஏப்ரல் 23 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ள அவசரகாலச் சட்டம் முழு நாட்டிற்கும் உரியதென்று கருதப்பட்டாலும் இச்சட்டத்தை பிறப்பித்த நோக்கத்திற்காக மாத்திரமே அது அமுல்படுத்தப்பட வேண்டும் என தமிழ் அரசியல்வாதிகள் கூறி வருகின்றனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டு மீளவும் அவசரகாலச் சட்டம் தமிழர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்படுவதை தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று தமிழ்த் தேசிய கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையில் இச்சட்டம் பெரும்பாலும் முஸ்லிம்கள் செறிவாக வாழும் பிரதேசங்களிலேயே கடுமையாக அமுல்படுத்தப்படுகின்றது. விரும்புகின்ற நேரத்தில் குறிப்பிட்ட பிரதேசத்தை இராணுவம் சுற்றி வளைப்பதற்கும் தேடுதல் வேட்டையை நடத்துவதற்கும் சந்தேகத்திற்கிடமான தனிநபர்களை கைதுசெய்யவும் இச்சட்டம் முப்படையினருக்கும் அதிகாரத்தை வழங்கியுள்ளது.

முஸ்லிம் பிரதேசங்கள் கடும் சோதனைக்கு உட்படுவதனால் தெற்கிலும் வடக்குக் கிழக்கிலும் முஸ்லிம்கள் கடும் அச்ச நிலைக்கு ஆளாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது. சந்தேகத்தின் பேரில் எவரும் எந்த நேரத்திலும் கைதுசெய்யப்படலாம் என்ற நிலைமை முஸ்லிம்கள் மத்தியில் பெரும் பீதியை உருவாக்கியுள்ளது.

அறபு நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வைத்திருப்பவர்கள் கூட இச்சட்டத்திற்கு அஞ்சுகின்றனர். அவசரகாலச் சட்டத்தின் கீழ் புர்கா மற்றும் நிகாப் என்பன தடைசெய்யப்பட்டுள்ளன. அவசரகாலச் சட்டம் நீடிப்பது நாட்டில் போதிய பாதுகாப்புச் சூழல் இல்லை என்பதற்கான அடையாளமாகவே பார்க்கப்படுகின்றது. சோதனைச் சாவடிகள் நிறுவப்படுவதும், தேடுதல் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்வதும் வெளிநாட்டவர்கள் மத்தியில் இலங்கை சுற்றுலாத் துறைக்கான பாதுகாப்பு மிக்க நாடு அல்ல என்ற கருத்தையே உருவாக்கும்.

இந்நிலையில் அவசரகாலச் சட்டம் எப்போது விலக்கிக் கொள்ளப்படும் என்ற விவாதம் அரசியல்வாதிகளிடையே எழுந்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இச்சட்டத்தை நீடிப்பதற்கு அனுமதிக்க முடியாது எனவும், உச்ச நீதிமன்றத்திற்கு இது குறித்து தீர்ப்புக் கேட்டுச் செல்லவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# தாக்குதல்களும் அவற்றுக்குப் பின்னரும்

• அஷ்ஷெய்க்
எஸ்.எச்.எம். ஃபளீல் (நளீமி)

1. தாக்குதல்கள் கொடூரமானவை, அவற்றைக் கண்டிக்க வார்த்தைகள் இல்லை. மார்க்க அடிப்படையில் அவற்றை அனுமதிக்க முடியாது என்பது ஒருபுறமிருக்க மனிதாபிமான அடிப்படையிலும் அவை மிகப் பிழையானவை.

2. அவற்றை செய்தவர்கள் முஸ்லிம் பெயர்களில் இருந்ததற்காக அவற்றுக்கு இஸ்லாத்தின் அங்கீகாரமிருப்பதாக நினைப்பது முற்றிலும் தவறு.

3. அவர்களும் அவர்களை சார்ந்தவர்களாக இருப்பவர்களும் உரிய முறையில் அடையாளம் காணப்பட்டு இந்த நாட்டிலிருந்து அந்தச் சிந்தனை வேர் பிடுங்கப்பட வேண்டும்.



**அவர்களது நடவடிக்கைகளது விளைவுகள்**

1. இஸ்லாத்திற்கு அவப்பெயர் வந்துள்ளது.

2. முஸ்லிம்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என்று பலரும் பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள்.

3. இஸ்லாத்தை இந்த நாட்டின் போக்கிற்கு ஏற்ப நடுநிலை நின்று நடைமுறைப் படுத்தியவர்களும் கூட வலை விரிப்பில் அகப்பட்டு தவிக்கிறார்கள்.

4. மத்ரஸாக்கள் இஸ்லாமிய இயக்கங்கள் பலத்த சந்தேகத்திற்கு உட்பட்டுள்ளன.

5. பல வீடுகளிலிருந்து இஸ்லாமிய நூல்கள், சஞ்சிகைகள் கூட அவ்வீட்டாராலேயே தீ வைக்கப்பட்டன. அவற்றில் தீவிரவாத கருத்துக்கள் இல்லாவிட்டாலும் இது எதிர்காலப் பரம்பரைக்காக ஒவ்வொரு வீட்டிலும் பாதுகாக்கப்பட்ட அறிவு முதுசொம்களது அழிவாகும்.

6. முஸ்லிம்களது வியாபார நிலையங்களுக்கு பொருட்கள் வாங்க வரும் மற்றும் முஸ்லிம்களுடன் கொடுக்கல்-வாங்கல் செய்வோரது தொகை கணிசமான அளவு குறைந்து விட்டதாக அறிய முடிகிறது.

7. முகம் மூடியிருந்த பெண்கள் எப்படி போனாலும் சாரி அணிந்த நிலையில் முக்காடு போடுகிறவர்களுக்கே அவற்றை அகற்றும் படி பலாத்காரப் படுத்திய பல சம்பவங்கள் நடந்துள்ளன.

8. பஸ் வண்டிகள், காரியாலங்கள், கடைகள் போன்றவற்றின் கதவுகள் அருகே எந்த வகையிலும் எதிர்பாராத வகையில் 'புர்கா' உடன் நுழைய வேண்டாம் என்ற அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது. புர்காவை அரசு உத்தியோக பூர்வமாகவே தடை செய்துள்ளது.

9. நாட்டின் பொருளாதாரம் படுமோசமான நிலையில் ஏற்கனவே இருந்தது. தற்போது அது கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு மாறிவிட்டது.

10. முஸ்லிம் சமூகம் ஏற்கனவே கல்வி பொருளாதாரம் சமூக உறவுகள் ஆகிய துறைகளில் பாதாளத்தை நோக்கிப் போய் இருந்தது. தற்போது அதன் வேகம் துரிதப் படுத்தப்பட்டுள்ளது.

11. ஊடகங்கள் துவேஷத்தை மிக மோசமாகத் தூண்டுகின்றன. செய்திகளில் நூறு விதமானவை தாக்குதல்கள் பற்றியும் தாக்குதல்களுக்கு பின்னால் இடம்பெறும் சோதனைகள் பற்றியுமே அமைந்திருக்கின்றன. இறந்தவர்களது உடல்கள் அடக்கம் செய்யப்படும் படங்களும் அந்த நேரம் உறவினர்கள், நண்பர்கள் அழுது புலம்பும் காட்சிகளும் காட்டப்படுகின்றன. பெரும்பாலும் வெறுப்பை உண்டுபண்ணும் வகையில் செய்தி அறிவிப்புக்கள் அமைவதால் பொது மக்களது மனநிலை முஸ்லிம்களுக்கு எதிராக படுமோசமாகத் தூண்டப்படுகிறது.

12. குறிப்பாக பௌத்த குருமாரின் ஊடக அறிக்கைகளும் கருத்துக்களும் துவேஷத்தை கக்குகின்றன. இனவாத அமைப்புக்கள் எக்காளமிட்டுச் சிரிக்கின்றன. அவர்கள் 'நாம் எப்போதோ சொன்னோமே, நீங்கள் கேட்கவில்லையே' என்று பொறுப்பான பதவிகளில் இருப்போரையும் பொது மக்களையும் நோக்கிப் பரிகாசமாகக் கேள்வி எழுப்புகிறார்கள். 'மதரசாக்களை தடைசெய்யச் சொன்னோம், 'புர்கா' வேண்டாம் என்றோம். எம்மைத் தான் சிறையில் போட்டீர்கள். இப்போது என்ன நடந்திருக்கிறது?' என்று அவர்கள் கேட்கிறார்கள்.

13. இவற்றை பார்க்கும் பெரும்பான்மை சமூகத்தில் உள்ள நிதானமாக சிந்தித்து வந்த, முஸ்லிம்களது பக்கத்திலிருந்த நியாயங்களுக்காகவும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காகவும் குரல் கொடுத்த பலர் தற்போது தலைகாட்டப் பயப்படுகிறார்கள். அல்லது கொஞ்சமாகவே பேசுகிறார்கள். என்னவெல்லாம் நடக்க வேண்டுமென்று முஸ்லிம் விரோத சக்திகள் நினைத்தனவோ அவை அனைத்தும் நடந்தேறிவிட்டன.

14. இந்த விளைவுகள் எதனையும் யோசிக்காத, முஸ்லிம் சமூகத்துக்குள் இருந்த கோடாரிக் காம்புகளான, வழிகெட்ட தீவிரவாத சிந்தனைகளுக்கு உள்ளாக்கப்பட்ட சிலர் இந்த நாடகத்தை அரங்கேற்றி இருக்க இனவாதிகள் மிக மிக சுதந்திரமாக பேசவும் நடக்கவும் அவர்கள் வழிசமைத்துக் கொடுத்து விட்டார்கள்.

15. இதனால் நாடு ஒட்டுமொத்தமாக குட்டிச்சுவர் ஆகிவிட்டது. முஸ்லிம் சமூகம் சுமார் 200 வருடம் பின் தள்ளப்பட்டு விட்டது. ஏற்கனவே அது பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டு இருந்தவேளை இந்த சம்பவம் நிலைமையை இன்னும் மோசமாகி விட்டது.

16. முஸ்லிம் சமூகமானது பெரும் குழப்பத்திலும் அதேநேரம் பயத்திலும் இருக்கிறது. தூக்கத்தில் இருந்தவனுக்கு திடீரென கன்னத்தில் ஓர் அறை விழுந்தால் எப்படி இருக்குமோ அப்படியான நிலை இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது. தர்காநகர், திகனை, கிந்தோட்டை கலவரங்கள் தூங்கியவன் மீது திடீரென விழுந்த அடிகள் தான். ஆனால், அவற்றைத் தொடர்ந்து நாம் எம்மை ஒழுங்குபடுத்தத் தவறி விட்டோம். மிதவாத, நடுநிலைமையான தூரநோக்கோடு பார்க்கின்றவர்கள் உரிய முறையில் நடவடிக்கைகளை எடுக்காததன் காரணமாகவும் மூலோபாயத் திட்டங்களை வகுத்து குறிப்பாக இளைஞர்களை வழிநடாத்தத் தவறியதன் காரணமாகவும் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது.

**சில ஆலோசனைகள்**

பின்வரும் ஆலோசனைகளை இந்த சந்தர்ப்பத்தில் முன்வைக்க முடியும்

1. இது ஒரு சோதனை மிக்க கால கட்டம். இதில் மிகக் கவனமாகவும் தூர நோக்கோடு சிந்தித்தும் நாம் நடந்துகொள்ள வேண்டும். அல்லாஹ் முஸ்லிம் சமூகத்தைத் தண்டித்திருக்கிறானா அல்லது சோதிக்கிறானா என்பதை இனங்கண்டு கொள்வது கஷ்டமாக இருக்கிறது. சோதனை என்பது நல்லடியார்களை அதாவது நற்கருமங்களில் ஈடுபடக் கூடியவர்களை பரிசோதித்து, நன்மை வழங்குவதற்காக செய்யப்படும் ஏற்பாடுகளாகும்.

தண்டனைகள் என்றால் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றாமல் பொடுபோக்காக இருந்து அல்லாஹ்வுடைய கட்டளைகளை நிறைவேற்றாமல் பாவங்களில் ஈடுபட்டவர்களுக்கு அல்லாஹ் கொடுப்பவையாகும். இவற்றில் நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை பற்றி நாம் சிந்திக்க முடியும்.

சோதனை என்பது நல்லடியார்களுக்கு வரும் என்று குர்ஆன் சொல்லியிருக்கிறது. அந்த நேரத்தில் 'இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்' என்று சொல்வதோடு பொறுமையாகவும் இருக்க வேண்டும் என்றுதான் அல்லாஹ் கூறுகிறான். ஆனால், தண் டனை என்று வருகின்ற பொழுது நாமாக சம்பாதித்துக் கொண்டவையாகவும் இவை இருக்கலாம்.

உஹது ' யுத்தத்தில் 70 ஸஹாபாக்கள் கொல்லப்பட்டு 70 பேர் காயப்பட்ட பொழுது 'இது எங்கிருந்து வந்தது?' என்று ஸஹாபாக்கள் தமக்குள் கேள்வி கேட்டார்கள். அந்த நேரத்தில் அல்லாஹ் 'அது உங்களிடம் இருந்து தான் வந்தது' என்று சொன்னான். 'குல் ஹுவ மின் இந்தி அன்ஃபுசிகும்'. அந்த வகையில் இந்த சூழ்நிலையானது எமக்கான தண்டனையாக தரப்பட்டதா என்றெல்லாம் யோசிக்க வேண்டியிருக்கிறது. அல்லாஹ் பாதுகாக்க வேண்டும். அப்படியாயின் நாம் எம்மை மீள்பரிசீலனைக்கு தீவிரமாக உட்படுத்த வேண்டும்.

2. எல்லா நிலைகளிலும் நாம் அல்லாஹ்வை அஞ்சி, பாவங்களைத் தவிர்த்து, அவனிடத்திலே மன்றாடி அவனது உதவியை மாத்திரமே நாம் அடிக்கடி வேண்டி நிற்க வேண்டும்.

3. எந்த சந்தர்ப்பத்திலாவது நாம் வன்முறைகளால் வன்முறைகளை எதிர்கொள்ள முயற்சிக்கக் கூடாது. வன்முறைகள் நல்ல விளைவுகளைத் தரமாட்டாது. "மிகவுமே நல்ல முறையில் நீங்கள் உங்களுக்கு வருகின்றவற்றை (சவால்களை) எதிர்கொள்ளுங்கள்" என்று குர்ஆனில் அல்லாஹ் சொல்லிவிட்டு 'அப்படி நீங்கள் செய்தால் எதிரி கூட உற்ற நண்பனாகி விடுவான்' என்று குர்ஆன் சொல்கிறது.

4. பொறுமையாகவும் சட்டத்தின் அடிப்படையில் மட்டுமே வன்முறையாளர்களை எதிர்கொள்ள வேண்டும்.

(பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுவது நலம்



இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

# திட்டமிடப்பட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வரும் போலிப் பிரசாரங்களுக்கு நாம் ஏமாந்து விடக்கூடாது

வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத சோகமான நிகழ்வொன்றுக்கு நாம் முகம்கொடுத்துள்ளோம். உலகில் எல்லா இன மக்களினதும் வழிபாட்டுத் தளங்கள் தாக்கப்பட்டே வருகின்றது. இவ்வாறு மோதல்களை உருவாக்குவதன் மூலம் சொல்ல வருகின்ற விடயங்களை விடவும் இவற்றை திட்டமிடுபவர்கள் எவற்றை எதிர்பார்க்கின்றனர் என்பதையே விளங்க வேண்டியுள்ளது.

ஒரு வகையில் இலங்கை துரதிஷ்டமானது. எமது நாடு ஆறேழு வருடங்களுக்கு ஒரு தடவை இதுபோன்ற நிகழ்வுகளுக்கு முகம் கொடுக்கிறது. 1950 தசாப்தங்களில் தமிழர்களுடனான பிரச்சினையை பார்த்தோம். 1960 தசாப்தங்களில் கத்தோலிக்க ஆக்கிரமிப்பு என்கின்ற பிரச்சினையைப் பார்த்தோம். 1970 தசாப்தங்களில் வகுப்புவாத போராட்டத்தைப் பார்த்தோம். 1980 தசாப்தங்களில் மீண்டும் தமிழ் - சிங்கள முரண்பாட்டை நோக்கினோம். 1990 முதல் சிங்கள - முஸ்லிம் முரண்பாடுகளை அவதானித்து வருகின்றோம்.

இவை ஏன் இடம்பெறுகிறது? இவை இயல்பாக தோற்றம் பெறுகின்றதா? முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் கடந்த காலப்பகுதியில் எந்தவிதமான முரண்பாடுகளும் காணப்படவில்லை. இது திடீரென தோற்றம் பெற்றுள்ளது. இங்கு இன, மத பேதங்களை நான் காணவில்லை. கண்களுக்குப் புலப்படாத மறைகரங்கள் மோதல்களை உருவாக்குகின்றன. இதன் மூலம் தங்களது இருத்தலை தகவமைத்துக் கொள்கின்றன.

இலங்கையின் அமைவிடம் தொடர்பாக உலகின் பலம் பொருந்திய நாடுகளது கழுகுப் பார்வைகள் குவிய ஆரம்பித்திருக்கும் வேளையில் அந்நாடுகள் இலங்கையின் ஸ்திரமற்ற தன்மையிலிருந்து பிரயோசனம் பெறப் பார்ப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இன்று உலகம் பூராகவும் இது போன்ற மிலேச்சத்தனமான சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டுள்ளன. கடந்த வாரம் அமெரிக்காவின் கலிபோனியாவிலுள்ள யூத வழிபாட்டுத்தளமொன்று தாக்கப்பட்டது.

வெள்ளையினத் தீவிரவாதியொருவரே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கிறார். அமெரிக்காவிலுள்ள எல்லா இன மக்களும் வெள்ளையின கலாசாரத்திற்கு உட்பட்டே நடக்க வேண்டும், இன்றேல் அங்கு அவர்களுக்கு இருக்க முடியாது என்பது வெள்ளையின தீவிரவாதிகளின் கொள்கையாகக் காணப்படுகிறது. இதற்கு 6 மாதங்களுக்கு முன்பு டெக்ஸாஸில் உள்ள யூத வழிபாட்டுத்தளமொன்றும் தாக்கப்பட்டது. இந்தத் தாக்குதலையும் தீவிர வெள்ளையினத்தவர் ஒருவரே நடத்தியிருக்கிறார்.

இற்றைக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் நியூசிலாந்து பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் மீதும் கடும்போக்கு வெள்ளையினத்தவர் ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இன்று உலகில் சகல இன மக்களினதும் வழிபாட்டுத் தளங்கள் தாக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் அமெரிக்காவின் இளம் புத்திஜீவியான உமர் சுலைமானின் உரையொன்றை செவிமடுக்கக் கிடைத்தது. அவர் தனது உரையில் கெலொப் ஆய்வறிக்கையை மேற்கோள் காட்டிப் பேசுகின்றார். அதாவது 1998 முதல் 2005 வரையில் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்டுள்ள பயங்கரவாதத் தாக்குதல்களில் 6 வீதமான முஸ்லிம்களே தொடர்புபட்டுள்ளனர்.

2007 முதல் 2009 வரையில் ஐரோப்பாவில் இடம்பெற்றுள்ள பயங்கரவாதத் தாக்குதல்களுள் 99.6 வீதமானவை முஸ்லிம் அல்லாதவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் பலம்பொருந்திய ஊடகங்கள் இஸ்லாம் என்றால் துப்பாக்கியை கையில் ஏந்தி அல்லாஹு அக்பர் என்று சொல்வது போன்ற காட்சியையே சித்தரித்துள்ளன. எனவே உருவாக்கப்படும் பீதி புள்ளிவிபரங்களால் உறுதிப்படுத்தப்படுவதில்லை. சம்பவங்களை நுனிப் புல் மேய்வதில் பிரயோசனமில்லை. அவற்றை ஆராய்ந்து பார்த்தே ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

உலகில் செல்வச் செழிப்பு, அரசியல் அதிகாரம், பொருளாதார அந்தஸ்து போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்கு மோதல்களை உருவாக்குபவர்கள் விதவிதமான எதிரிகளை உருவாக்கியுள்ளனர். ஒரு காலத்தில் பாசிசவாத்திற்கு எதிராக மோதல் முன்னெடுக்கப்பட்டது. பாசிசவாதத்தின் பெயரில் மோதல்கள் உருவாக்கப்பட்டன. மறுபுறத்தில் கமுனிசவாத்திற்கு எதிராக எதிரிகள் நிர்மாணிக்கப்பட்டனர். மற்றுமொரு காலத்தில் யூதர்களுக்கு எதிரான போராட்டம் முன்னகர்த்தப்பட்டது.

இன்று உலகம் முழுவதிலும் இஸ்லாம் எதிரியாக சித்திரிக்கப்பட்டுள்ளது. உலகில் பலம்பொருந்திய இஸ்லாமிய நாடுகளுக்கு தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றது. ஈராக், சிரியா, லிபியா போன்ற நாடுகள் இதற்கு சிறந்த உதாரணங்கள். ஈராக் அழிக்கப்பட்டு பெறுமதியான வளங்கள் சூறையாடப்பட்டன. மிகப் பழமைவாய்ந்த பபிலோனியா நாகரிகத்திற்கு சொந்தமான நாடே ஈராக். ஷீஆ-சுன்னி மோதல்கள் எதுவும் அங்கு காணப்படவில்லை. சகல இனத்தவர்களும் ஒற்றுமையாக வாழ்ந்த நாடு அது. பல்வேறு பிரிவினைகள் உருவாக்கப்பட்டு இன்று அந்த நாடு கூறுபோடப்பட்டுள்ளது.

ஈராக், லிபியா போன்ற நாடுகள் பொருளாதார ரீதியில் பலம் பொருந்திய நாடுகளாகக் காணப்பட்டன. ஒரு காலத்தில் இந்நாடுகள் இலங்கைக்கும் உதவிசெய்துள்ளன. லிபியா இன்று துண்டாடப்பட்டுள்ளது. அதுபோன்று சிரியாவும் அழிக்கப்பட்டுள்ளது. பல மில்லியன் கணக்கிலான மக்கள் கொல்லப்பட்டும் அகதிகளாக்கப்பட்டும் உள்ளனர். இன்று அந்த நாடுகள் சுக்குநூறாக்கப்பட்டுள்ளன.

சிரியாவில் துருக்கியும், ஈரானும் இணைந்தே ஐஸிஸை தோற்கடித்தன. ஐஸிஸ் இஸ்லாத்திற்கு முரணான அமைப்பு என்பதாக முஸ்லிம் நாடுகள் உலகிற்கு சொல்லியுள்ளன. இலங்கையிலும் இஸ்லாமிய அமைப்புக்கள் ஐஸிஸை பயங்கரவாத இயக்கமாக அடையாளப்படுத்தியுள்ளன. ஆனால் சில ஊடகங்களின் செயற்பாடுகள் துரதிஷ்டமானது.

பயங்கரவாதத்தை இஸ்லாத்துடன் தொடர்புபடுத்துகின்றன. ஐஸிஸ் தொடர்பில் இலங்கையில் முதன் முதலாக இஸ்லாமிய அறிஞர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். ஐஸிஸ் ஒரு பயங்கரவாத அமைப்பு என்றும், அது இஸ்லாத்திற்கு முரணான சிந்தனைகளை கொண்ட அமைப்பு என்றும், அது இலங்கைக்கு ஆபத்தாக அமையும் என்றும், அதில் சம்பந்தப்பட்டிருப்பவர்களை கைதுசெய்யுமாறும் கூறினார்கள். இன்று இந்தப் பயங்கரவாதிகளைத் தேடும் நடவடிக்கையில் பாதுகாப்புத் தரப்புக்கு கூடுதலாக உதவிசெய்து வருபவர்கள் முஸ்லிம்களாவர். பயங்கரவாதத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட பயங்கரவாதிகளை இஸ்லாமிய அடக்கஸ்தளங்களில் அடக்கம் செய்வதில்லை என்ற அறிவிப்பையும் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபை விடுத்திருந்தது.

முஸ்லிம் பெயர் தாங்கிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலின் காரணமாக இலங்கை முஸ்லிம்கள் மீள் தாக்குதல்களுக்கு உள்ளாகலாம் என்கின்ற அச்சத்தில் உறைந்து போயுள்ள தருணத்தில், இத்தகைய ஆபத்துக்களையும் துச்சமாக மதித்து அரசாங்கத்திற்கு தீவிரவாதிகளை பிடிப்பதற்கு ஒத்துழைத்து வருகின்றனர். இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அரசியல் நோக்கங்களுக்காக பரப்பப்படும் கருத்துக்களால் நாம் வழிதவறி விடக்கூடாது.

மூடி மறைக்கப்படும் உண்மையான தகவல்கள் மற்றும் புள்ளிவிபரங்களை ஆராய்ந்து பார்த்தே முடிவுகளுக்கு வர வேண்டும். இஸ்லாமோபோபியா மூலம் ஏற்படுத்தப்படுகின்ற அச்சம், சந்தேகங்கள் புள்ளிவிபரங்களால் உறுதிப்படுத்தப்படுவதில்லை. திட்டமிடப்பட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வரும் போலிப்பிரசாரங்களுக்கு நாம் ஏமாந்துவிடக்கூடாது.

# பயங்கரவாதத்துக்கு எதிராக ஒத்துழைக்கும் முஸ்லிம்கள் மீதான நெருக்குவாரங்கள்

• பிறவ்ஸ்

**அலரி மாளிகையில் ஞாயிற்றுக்கிழமை (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு**

உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடைபெற்ற மிலேச்சத்தனமான தாக்குதலினால் நாடு வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் உறவினர்களும் காயமடைந்தோரும் பெரும் சோகத்துக்கு ஆளாகியுள்ளனர். அதுமாத்திரமின்றி, முஸ்லிம் சமூகமும் இதனால் பெரும் அதிர்ச்சிக்கும் பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளது.

நாடளாவிய ரீதியில் முப்படையினரும் சிறப்பான முறையில் தேடுதல் நடவடிக்கைளை முன்னெடுத்து வருகின்றனர். இந்த தேடுதல் நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் சிவில் சமூகம் அரசியல் சமூகமும் பூரண ஆதரவை வழங்கி வருகின்றன. இவ்வாறான தேடுதல் நடவடிக்கைகளின்போது ஊடகங்களை அழைத்துச் செல்லும்போது, சாதாரண விடயங்கள் கூட பெரிதுபடுத்தப்பட்டு சித்தரித்துக் காட்டப்படுவதால் அவை மக்கள் மத்தியில் தேவையற்ற பீதியை உருவாக்க வழிவகுக்கும்.

சிறிய விடயங்களை ஊடகங்களில் மிகைப்படுத்திக் காண்பித்து, அதன் மூலம் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதிலிருந்து தவிர்ந்துகொள்ள வேண்டும். ஏற்கனவே மனம் புண்பட்டுள்ள முஸ்லிம்கள் மீண்டும் மனம் நோகாதபடி நடந்துகொள்ள வேண்டும். இதற்காக தேடுதல் நடவடிக்கைகளை நிறுத்துமாறு நாங்கள் கோரவில்லை. இதனால் அப்பாவிகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதனையே நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

முஸ்லிம் மக்கள் மீதான சந்தேகத்தில், அப்பாவிகள் பலர் குற்றமிழைத்தவர்களாக சித்தரிக்கப்படும் சூழல் இதன் மூலம் உருவாக்கப்படலாம் என்பதில் நாங்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். இந்த சிறிய பயங்கரவாதக் குழுவின் வெளிநாட்டு சக்திகளை கண்டறிய வேண்டும். அதற்கான முழு ஒத்துழைப்பையும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் வழங்கும்.


முஸ்லிம் சமூக மட்டத்திலும் அரசியல் மட்டத்திலும் துளியளவும் ஆதரவும் அனுதாபமும் இல்லாத சிறிய பயங்கரவாத கும்பலை முழுமையாக அழித்தொழிப்பதற்கு முஸ்லிம்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர். இப்படியான சூழ்நிலையில், முஸ்லிம்களுக்கு தேவையில்லாத நெருக்கடிகளையும் சந்தேகத்தையும் உருவாக்கி பயங்கரவாதிகளுக்கு அனுதாபம் தேடுகின்ற சூழலுக்கு ஒருபோதும் இட்டுச் செல்லக் கூடாது.

இதுவரையும் அனுதாபமில்லாத ஒரு சிறிய குழுவினருக்கு அனுதாபம் தேடிக் கொடுக்கின்ற ஒரு நடவடிக்கையாக இந்த தேடுதல்கள் மாறிவிடக் கூடாது. அப்பாவிகள் மீது குற்றம் சுமத்தி அவர்களை மன உழைச்சலுக்கு ஆளாக்காமல் சரியான முறையில் குற்றவாளிகளை அடையாளம் காண வேண்டும். இதனை கவனத்திற்கொண்டு பாதுகாப்புத் தரப்பினர் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

சமூக மட்டத்திலும் சமய மட்டத்திலும் தேவையில்லாத பழிச் சொல்லுக்கு ஆளாக்குகின்ற அடிப்படையில் முஸ்லிம்கள் செயற்படுன்றனர் என்ற கருத்தாடல் எழும்பிவிடாமல், மக்களின் உணர்வுகளை மதித்து பாதுகாப்பாகவும் கவனமாகவும் இந்த தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து முற்றாக ஒழிப்பதற்கு முஸ்லிம்கள் பல வழிகளிலும் உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கி வருகின்றனர். அவர்கள் பயங்கரவாதத்தை ஆதரிக்காமைதான் இதற்குக் காரணமாகும். இந்நிலையில் மக்கள் மத்தியில் தேவையில்லாத பயம், பீதியை ஏற்படுத்துவதற்கு ஊடகங்களும் பாதுகாப்புத் தரப்பும் காரணமாக இருந்துவிடக் கூடாது.

இப்படியான தேடுதல் நடவடிக்கைகள் ஏனைய பிரதேசங்களில் நடைபெற்றால், இதைவிட அதிகமான பொருட்கள் கைப்பற்றப்படலாம். இதனால்தான் ஆயுதங்களை கையளிப்பதற்கு அரசாங்கம் காலக்கெடு விதித்துள்ளது. இதனால் சகல தரப்பினரிடமிருந்தும் ஆயுதங்கள் களையப்படலாம். மூதாதையர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற புராதன பொங்கிஷங்கள் கூட, இன்று ஆயுதங்களாகக் கணிக்கப்பட்டு அவை பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கப்படுகின்றன.



எல்லா சமூகத்திலும் குற்றவாளிகள் இருக்கின்றனர். அவர்கள் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள். ஆனால், பயங்கரவாதத்தை எந்த சமூகமும் ஆதரிப்பதில்லை. எனவே, பயங்கரவாதத்தையும் ஏனைய குற்றங்களையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

தற்போது கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் எனக் கருதிவிட முடியாது. அவர்களில் ஒருசிலர் மாத்திரமே பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். இவர்களில் சாதாரண குற்றம் புரிந்தவர்களை அடையாளம் கண்டு, அவர்கள் உரிய முறையில் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டும்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை 90 நாட்கள் வரை தடுத்துவைத்து விசாரிக்க முடியும். அதற்கான முழுப்பொறுப்பும் பாதுகாப்புத் தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணைகளில் நாங்கள் எவ்வித தலையீடுகளையும் செய்யப்போவதில்லை.

வீடுகளில் முஸ்லிம்கள் வாசிக்கும் சஞ்சிகைகள் கூட இன்று பாதுகாப்புத் தரப்பினால் கைப்பற்றப்படுகின்றன. உதாரணமாக பின்லேடனின் புகைப்படத்துடன் [illegible] யிலோ இருந்தால் அதன் அர்த்தம் தெரியாமல் அதைப் பயங்கரவாத புத்தகமாக கருத முடியாது. அது பயங்கரவாதத்துக்கு எதிரான கருத்துகளைக் கொண்ட புத்தகமாகவும் இருக்கலாம்.

இப்படியான புத்தகம், சஞ்சிகைகளை விசாரிக்கும் அது தொடர்பில் தெளிவுபடுத்தக்கூடிய துறைசார்ந்த நிறுவனங்களின் உதவியை பாதுகாப்புத் தரப்பினர் பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அதனை அடையாளம் காணக்கூடியவர்கள் தேடுதல் நடவடிக்கைகளின்போது உடனிருக்க வேண்டும்.

இந்தத் தீவிரவாதக் குழுவினர் 150-200 பேர் வரை இருக்கலாமென உளவுத்துறை நம்புகிறது. முஸ்லிம்கள் எப்போதும் பயங்கரவாதிகளுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர். தேவையில்லாத செயற்பாடுகள் மூலம் சிறிய குழுவுக்கு ஆதரவாக, குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது போன்ற ஒரு சூழ்நிலையை யாரும் உருவாக்கிவிடக் கூடாது.

பள்ளிவாசல்களில் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டால், அவை என்ன நோக்கத்துக்காக அங்கு கொண்டுவரப்பட்டது என்பது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும். பள்ளிவாசலுக்கு ஆயுதங்கள் எப்படி வந்தன, ஏன் வந்தன, அவற்றை யார் கொண்டுவந்தார்கள் எனத் தீவிரமாக ஆராயப்பட வேண்டும்.

நாட்டில் 9 ஆயிரம் பள்ளிவாசல்கள் இருப்பதாக சிலர் கூறுகின்றனர். ஆனால், 2500 பள்ளிவாசல்கள் மாத்திரமே இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. இன்னும் பதிவு செய்யப்படாத பள்ளிவாசல்கள் 300 அளவில் இருக்கின்றன. பதிவுசெய்யாத பள்ளிவாசல்கள் விடயத்தில் தீர்மானமெடுக்கும் அதிகாரம் முஸ்லிம் சமய அமைச்சுக்கு உள்ளது. இந்த விடயத்தில் யாரும் குழப்பமடைய வேண்டாம். இவற்றை அரசாங்கம் சரியான முறையில் ஒழுங்கமைக்கும்.

முஸ்லிம்கள் ஒரு நாளைக்கு ஐந்து நேரம் தொழுகையில் ஈடுபட வேண்டும். பள்ளிவாசல்கள் தூரத்தில் இருந்தால் ஐந்து நேரம் அங்கு சென்று வருவது மிகவும் சிரமமாக இருக்கும். இதனால்தான் அருகருகில் பள்ளிவாசல்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இலங்கையிலுள்ள பள்ளிவாசல் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. தங்களுக்கு நிதி எவ்வாறு கிடைக்கிறது, அது எப்படி கையாளப்படுகிறது என்பது குறித்து பள்ளிவாசல் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அதில் ஏதும் குளறுபடிகள் இந்தால் அதன் நம்பிக்கையாளர் சபையை விசாரிக்கும் உரிமை திணைக்களத்துக்கு உள்ளது.

இதன் பின் சகல பள்ளிவாசல்களும் நெறிப்படுத்தப்பட்ட ஒரு கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப்படும். பள்ளிவாசல் பதிவுசெய்யப்பட்ட நிபந்தனைக்கு முரண்பட்டால் அவற்றை தடைசெய்யும் அதிகாரம் திணைக்களத்துக்கு இருக்கின்றது. அவ்வாறு தடைசெய்யப்பட்ட பள்ளிவாசல்களின் விபரங்களை வக்பு சபையிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

இஸ்லாமிய மார்க்க கல்வி புகட்டப்படும் மத்ரசாக்களின் பாடத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். அதற்கான பூர்வாங்க வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிரும் நிலையில்தான் இந்த அசம்பாவிதங்கள் நடைபெற்றுள்ளன. தற்போது மத்ரஸாக்களின் பாடத்திட்டம் முஸ்லிம் சமய அமைச்சினால் ஒருங்கமைப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஏதாவது பள்ளிவாசல்களில் தீவிரவாத கருத்துகள் பேசப்பட்டால் முஸ்லிம்கள் அவற்றை அரசாங்கத்தின் உயர்மட்டத்துக்கு கூறியுள்ளனர். இப்படியான தகவல்கள் முஸ்லிம்கள் மூலம் தங்களுக்கு கிடைக்கப் பெற்றதை உளவுத்துறையும் உறுதிப்படுத்தியுள்ளது. மார்க்கத்தின் பெயரால் மாற்று சமூகத்துக்கு எதிராக தீவிரவாதக் கருத்துகளை பரப்புவோரை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்வதில்லை. தீவிரவாதக் கருத்துக்களை பரப்புவோரை முஸ்லிம்கள் காட்டிக் கொடுக்கின்றனர்.

சமய வழிபாட்டுத் தளங்களுக்குள் நுழையும்போது அதற்குரிய கௌரவத்தை கொடுக்க வேண்டும். சப்பாத்துகளை அணிந்து கொண்டும்,

(பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்கள் நம்பிக்கை இழந்துவிடக் கூடாது



**வைத்தியர் எம்.ஜி. ஸைபுல் இஸ்லாம்**
பொறுப்பாளர் - சகவாழ்வுக்கான உப குழு, தேசிய சூறா சபை

வைத்தியர் எம்.ஜி. சைபுல் இஸ்லாம் அவர்கள் குருநாகல் மாவட்டத்திலுள்ள எஹெட்டுமுள்ளையை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை குளி/எஹெட்டுமுள்ள மு.ம. வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை புத்/சிலாபம் நஸ்ரியா மத்திய கல்லூரியிலும் உயர் நிலைக் கல்வியை மட்/கல்முனை சாஹிரா கல்லூரியிலும் கற்றுள்ளார். பேராதனை பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையில் M.B.B.S பட்டத்தையும், களனி பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையில் Msc பட்டத்தையும் பூர்த்தி செய்துள்ளார்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வைத்தியராகக் கடமையாற்றி வரும் இவர், தேசிய ஷூறா சபையின் சகவாழ்வுக்கான உப குழுவின் தலைவராக செயற்பட்டு வருகின்றார். மருத்துவத் துறைக்கு அப்பால் பல்வேறு சமூக பிரச்சினைகள் தொடர்பில் ஆழ்ந்த புலமையும் அனுபவமும் உள்ள வைத்தியர் எம்.ஜி. சைபுல் இஸ்லாம் அவர்களிடம் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு பிந்திய சமூக நிலைவரம் குறித்து மீள்பார்வை பத்திரிகைக்கு மேற்கொண்ட நேர்காணல் இங்கு தரப்படுகிறது.

**நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி**

- 'ஈஸ்டர் தாக்குதல், அமெரிக்க 9/11 தாக்குதலுக்கு ஒத்தது.'
- 'புத்திஜீவிகள் எமது நாட்டிற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் இந்தத் தாக்குதலால் வரக்கூடிய நீண்டகால, குறுகிய கால பாதிப்புக்களை பேச வேண்டும்.'
- 'சமூக பொருளாதார அரசியல் ரீதியில் சிந்தித்து சில வழிகாட்டல்களை வழங்கும் போதே சமூகத்தில் உண்மையான மாற்றங்களை கொண்டு வர முடியும்.'
- 'பிரதேச மட்டங்களில் கலந்தாலோசனை சபைகள் உருவாக்கப்பட வேண்டும்.'
- 'இயக்க வெறிகளை மறந்து எல்லோரும் ஒன்றுபட வேண்டிய தருணமே இது.'
- 'அடுத்த சமூகத்தவர்களது உணர்வுகளைப் புரிந்து செயற்பட வேண்டும்.'
- 'நாம் நம்பிக்கை இழந்துவிடக்கூடாது. எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு உண்டு. இப்பிரச்சினையை தீர்த்து மேலே வர முடியும் என்ற நம்பிக்கை முஸ்லிம்களிடம் அடிப்படையாகக் காணப்பட வேண்டும்.'

**தேசிய ஷூறா சபையைப் பற்றி சற்று தெளிவுபடுத்த முடியுமா?**

தேசிய ஷூறா சபை 2012 இல் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் தேசிய ரீதியாக செயற்பட்டு வரும் முஸ்லிம் நிறுவனங்களுக்கிடையில் ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக வேண்டி இது உருவாக்கப்பட்டது. தற்பொழுது 18 நிறுவனங்களும் புத்திஜீவிகள் சிலரும் இதில் அங்கத்துவம் வகிக்கின்றனர். பதியுதீன் மஹ்மூதின் புதல்வர் தாரிக் மஹ்மூத் இதன் தலைவராகச் செயற்பட்டு வருகின்றார்.

தேசிய ஷூறா சபையின் முதலாவது கூட்டத்தில் என்னென்ன விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அதில் ஒன்று, இனங்களுக்கிடையில் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கான உப குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என்பது. இதன் பின்னர் எல்லோரும் இணைந்து சகவாழ்வு வேலைத்திட்டத்தை இலங்கையில் எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பாக நீண்ட கால இலக்குடன் கூடிய திட்டமொன்றை தயாரித்தோம்.

இதற்கூடாக முஸ்லிம்களை தெளிவூட்டும் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதேநேரம் சிங்கள சமூகத்தில் உள்ள முக்கியமான தலைவர்களை சந்தித்து உரையாடினோம். மற்றைய மதத் தலைவர்களுடன் இணைந்தும் செயற்பட்டோம். இப்படி அதிக கூட்டங்களை நடாத்தி சமூகப் பிரச்சினைகள் குறித்து ஏனைய சமூகங்களுடன் உரையாடி தெளிவுகளை வழங்கிக் கொண்டிருந்த நல்லதொரு தருணத்திலேயே யாரும் எதிர்பார்க்காத குண்டுவெடிப்புச் சம்பவம் நாட்டில் இடம்பெற்றது.

**கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டுத் தளங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

உண்மையில் இது ஈனத்தனமானதொரு செயல். இஸ்லாத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு இஸ்லாத்தின் பெறுமானங்களை குழிதோண்டிப் புதைக்கின்ற செயலாகவே இதனை நோக்க முடியும். இதுவொரு பயங்கரவாதத் தாக்குதல். இவர்கள் செய்தது கொலை. எனவே அவர்கள் தொடர்பில் அனுதாபப்படுவதற்கு எதுவுமில்லை.

எமது சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கிய விடயமாகவே நாம் இந்தச் சம்வத்தைப் பார்க்கின்றோம். இந்தச் சம்பவத்தை தொடர்ந்து தேசிய ஷூறா சபை உடனடியாக தனது கண்டனங்களை வெளியிட்டது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஐஸிஸ் தீவிரவாத அமைப்பு தொடர்பாக இளைஞர்கள் கவரப்படுகிறார்கள் என்கின்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இதன்போது நாம் ஐஸிஸ் என்பவர்கள் யார்? அவர்களது தீவிரவாத செயற்பாடுகள் என்ன? என்பன குறித்து தெளிவுபடுத்தி சிங்கள மொழியில் ஒரு கையேட்டை வெளியிட்டோம். சமூக வளைத்தளங்களிலும் இவ்வமைப்பின் கொடூரத்தன்மை குறித்து தெளிவூட்டினோம்.

**ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பிந்திய நிலவரங்களை எவ்வாறு பகுப்பாய்வு செய்யலாம்?**

இவ்விடயத்தை மூன்று அடிப்படையில் நோக்க முடியும். ஒன்று பயங்கரவாதம். இரண்டாவது, தீவிரவாதம், மூன்றாவது இனவாதம். இம்மூன்றும் ஒருசேரப் பெற்ற பிரச்சினையையே நாம் முகம்கொடுத்துக் கொண்டுள்ளோம். இதை நாம் கவனமாக அணுக வேண்டும். எல்லாவற்றையும் ஒன்றாகக் கையாள முடியாது. பயங்கரவாதத்தை ஒடுக்கும் நடவடிக்கை அரச பொறிமுறையின் கீழ் இராணுவத்தினால் கையாளப்படுகிறது. ஆனால் தீவிரவாதத்தைக் கையாள்வதென்பது மிகப்பெரும் சவாலாகக் காணப்படுகிறது. இலத்திரனியல் யுகத்தில் அது மிக வேகமாக பரவிக் கொண்டுள்ளது. தீவிரவாதம் எல்லா சமயங்களிலும் காணப்படுகிறது. எல்லாக் கொள்கைகளிலும் தீவிரவாதம் உள்ளது. மிகவும் சொற்ப அளவினரே தீவிரவாதத்தின் பால் கவரப்படுகிறார்கள். ஆனால் அது ஏற்படுத்தும் பாதிப்புக்கள் விசாலமானது. நாம் தீவிரவாதத்திற்கு எதிரான மிகப்பெரும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இதேநேரம் இனவாதம் என்பது மற்றுமொரு நோயாகக் காணப்படுகின்றது. எல்லாவற்றையும் இனத்தை மையப்படுத்தியே சரி பிழை காணப்படுகின்றது. இப்படியான பிரச்சினையும் நாட்டில் உள்ளது. இவ்விடத்திலேயே நாம் சிங்கப்பூரில் பின்பற்றப்படும் வழிமுறையொன்றை சிபாரிசு செய்தோம். சிங்கப்பூர் பல்லின மக்கள் வாழும் ஓர் அமைதியான நாடு. சிங்கப்பூர் இராஜதந்திரி ஒருவர் இலங்கை வந்தபோது அவருடன் உரையாடும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. உங்களுடைய நாட்டிலும் தீவிரவாதம் உள்ளதா? என வினவியதற்கு. அவர், ஆம் உள்ளது எனக் கூறினார். அங்குள்ள முஸ்லிம்களுள் சிலர் தீவிரவாதத்தை நாடுகிறார்கள் எனக் கூறினார். ஆனால் அங்கு ஒரு பொறிமுறையுள்ளது. ஆங்கிலத்தில் இது RRG – Religions Rehabilitation Group என அழைக்கப்படுகின்றது.

இக்குழு அரசாங்கத்தோடு இணைந்து செயற்படுகிறது. அரசாங்கம் தீவிரவாதிகள் என்று எவரையாவது பிடித்தால் அவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் படி இந்தக் குழுவிடம் ஒப்படைக்கும். RRG யிடம் விஞ்ஞான ரீதியான புனர்வாழ்வுச் செயன்முறையுள்ளது. அதாவது ஒருவரிடம் கதைத்து அவரது மனதிலுள்ளவற்றை எடுத்து, அரசியல், பொருளாதார, ஆன்மீக விடயங்களால் தீவிரவாத எண்ணம் படைத்தவராக மாறினாரா? அல்லது வேறு விடயங்களின் காரணமாகவா? என்பதை ஆராய்ந்து அதற்குரிய வழிமுறையில் புனர்வாழ்வு வழங்கப்படுகின்றது. இது வெற்றிகரமான முறையாக காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இதற்கு குடும்பத்தவர்களின் உதவியும் கிடைக்கும். நாட்டிற்கு அவர்களை ஒதுக்க வேண்டியும் ஏற்படாது. இது நாட்டிற்கும் நல்லது. அண்மையில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் RRG முறை பற்றிச் சிந்திக்கும் படி நாம் ஆலோசனை வழங்கியிருந்தோம்.

**இனங்களுக்கிடையில் இன நல்லுறவை பாதிக்கும் அம்சங்களாக நீங்கள் குறிப்பிடும் விடயங்கள் என்ன?**

முதலாவது, இஸ்லாத்தின் கொள்கைகள் பற்றிய பிழையான புரிதல். நாம் இலங்கையில் ஆயிரம் வருடங்களாக இருக்கிறோம் எனக் கூறுகிறோம். ஆனால் மற்றைய சமூகத்திற்கு இஸ்லாத்தை பற்றியோ நபியைப் பற்றியோ சொல்லவில்லை. பெரும்பாலான சிங்கள மக்கள் இன்னும் நபி (ஸல்) அவர்களையே இறைவன் என்று நினைத்துக்கொண்டுள்ளார்கள்.

இரண்டாவது, சில முஸ்லிம்களது பிழையான நடவடிக்கைகள். முஸ்லிம் பெயர்தாங்கிகள் சிலர் இந்நாட்டில் இருந்து கொண்டு மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். களவு, கொலை, போதைப் பொருள் வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டு வருவதை குறிப்பிட முடியும்.

மூன்றாவது, சமூகங்களுடனான உறவாடல் (Communication Gap) குறைந்துள்ளது. நாம் முஸ்லிம் பாடசாலைகளில் அல்லது சிங்கள பாடசாலைகளில் கற்றுவிட்டு தனிமையாக செயற்படுகிறோம். இவ்வாறு பல காரணங்களால் எமக்கும் ஏனைய சமூகங்களுக்கும் இடையிலான உறவாடல் குறைந்துள்ளது. இதுவும் எம்மைப் பற்றிய சந்தேகத்தை அதிகரிக்க காரணமாய் அமைந்திருக்கிறது. எம்மைப் பற்றி அவர்களுக்கும் அவர்களைப் பற்றி எங்களுக்கும் தெரியாமல் உள்ளது.

நான்காவது, சமூக பொருளாதார அரசியல் விடயங்கள். சிலர் பொருளாதார நலன்களை வைத்து இனத்துவேசத்தை வளர்க்கின்றனர். சிலர் அரசியல் இலாபத்திற்காக வேண்டியும் இதனை போஷிக்கின்றனர். எமது சமூகத்தின் சில அரசியல் வாதிகளும் இதற்கு துணைபோகின்றனர்.

ஐந்தாவது விடயமாக புவி அரசியலை (Geo politics) குறிப்பிட முடியும். இலங்கை நாடு எமக்கு மாத்திரம் உரித்தானதல்ல. இங்கு எத்தனையோ நாடுகள் தலையிட்டுள்ளன. இந்தியா, சீனா அமெரிக்கா போன்ற பெரும் நாடுகள் இங்கு முதலீடு செய்துள்ளன. அந்நாடுகளுக்கு இலங்கை ஒரு மைதானமாக அமைந்துள்ளது.

ஆறாவது இஸ்லாத்தின் எதிரிகள். இவர்கள் இஸ்லாத்திற்கு எதிரான விடயங்களை செய்துகொண்டேயிருப்பர். இப்படியான காரணங்கள் இருக்கும் போது அவற்றை நோக்கிய வேலைத்திட்டங்களையே முன்னகர்த்த வேண்டும். துரதிஷ்டவசமாக எமது சமூகம் அதற்குத் தயாராக இல்லை. இந்த சகவாழ்வு வேலைத்திட்டம் தொடர்பாக 10 இற்கும் மேற்பட்ட அமைப்புக்களிடம் உரையாடியுள்ளேன். கிட்டத்தட்ட 12 மாவட்டங்களுக்கு சென்று இவ்விடயத்தை முன்வைத்துள்ளேன். இது தவிர நூற்றுக்கணக்கான நபர்களிடம் இதுவிடயம் குறித்துப் பேசியுள்ளேன். ஆனால் இது சாதாரண விடயமல்ல. இலங்கை நாட்டில் உயிர்வாழ்வதற்கு உத்தரவாதமளிக்கும் திட்டமாகும். இது உரிமையுமல்ல. அதையும் தாண்டிய விடயம். பேசும்போது இது நல்ல திட்டம் எனக் கூறிவிட்டு பிறகு அதை மறந்துவிடுவார்கள். இதுதான் [illegible]

ஊர்மட்டத்தில் தெளிவூட்டிய போது சிலர் இதனை சர்வ சாதாரணமாக நினைத்தார்கள். தற்பொழுது இந்தத் திட்டத்தை செய்திருந்தால் நிறைய விடயங்களை பேசியிருக்கலாம் என்கின்றார்கள். இந்த சகவாழ்வுத் திட்டத்தை முன்னெடுத்ததில் பிரயோசனம் கிட்டவில்லையே என்று நான் மனதளவில் வேதனைப்பட்டதும் உண்டு. ஆனால் இந்த கஷ்டமான நேரத்திலும் முஸ்லிம்களுக்காக குரல்கொடுப்பவர்கள் யாரென்று பார்த்தால் எம்மோடு பணியாற்றியவர்களாவர் என்பது மன நிம்மதியை தருகின்றது. ஈஸ்டர் தாக்குதலுக்கு பிறகு சமூகத்தில் குழப்பங்கள் ஏற்படாமல் இருக்க அவர்கள் மிகப்பெரும் பணியை செய்துள்ளனர்.

வெளிப்படையில் கார்டினல் மல்கம் மிகப்பெரும் பங்களிப்பை செய்தார். ஆனால் களத்தில் நின்று இனவாதத்திற்கு எதிராக பேசுகின்ற மிகப்பெரும் கூட்டமொன்று எம்மத்தியில் உள்ளனர். குறிப்பாக சிங்கள சமூகத்தில் உள்ளனர்.

**இவ்விடயத்தில் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் பங்களிப்பு எவ்வாறிருந்தது?**

இவ்விடயத்தில் ஜம்மிய்யதுல் உலமா சபை முக்கிய பங்களிப்பை நல்கி வருகிறது. ஜம்மிய்யதுல் உலமா சபையின் கீழ் Council For Co-ordination and Corporation என்றொரு சமூகங்களுக்கிடையில் இணைப்பை ஏற்படுத்துவதற்கான ஒரு வேலைத் திட்டம் உள்ளது. ஒருமுறை நாம் தேசிய ஷூறா சபையின் வேலைத்திட்டத்தை உலமா சபையிடம் முன்வைத்தோம். இது தேசிய ஷூறா சபையினாலோ அல்லது உலமா சபையினால் மாத்திரம் செய்யக் கூடிய வேலைத்திட்டமொன்று அல்ல. இது மிகப்பெரும் வேலைத்திட்டம். ஒரு தேசிய வேலைத்திட்டமொன்றை நோக்கி நாம் நகர வேண்டும்.

**முஸ்லிம் சமூகத்தை வழிநடத்துவதில் புத்திஜீவிகளின் பங்களிப்பு அளப்பரியவை. தற்போதைய சூழ்நிலையில் புத்திஜீவிகள் முஸ்லிம் சமூகத்திற்கு எவ்வாறான வழிகாட்டல்களை வழங்க வேண்டும்?**

இலங்கையில் இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை அமெரிக்காவில் இடம்பெற்ற 9/11 தாக்குதலோடு ஒப்பிட முடியும். 9/11 தாக்குதல் அமெரிக்க வரலாற்றிலேயே மிகப்பெரும் மாற்றத்தை உண்டுபண்ணியது. அதேபோன்று ஈஸ்டர் தாக்குதலுக்கு பிறகு சகல விடயங்களிலும் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. இங்கு எமது சமூகத் தலைமைகள் மிக முக்கியமாக பேச வேண்டிய விடயம் என்னவெனில், இந்தத் தாக்குதலால் வரக்கூடிய சமூக பொருளாதார அரசியல் விளைவுகளைப் பற்றியாகும். எமது நாட்டிற்கும் முஸ்லிம்களுக்கும் வரக்கூடிய பாதிப்புக்களை கட்டாயமாக பேச வேண்டும். அடையாளப்படுத்த வேண்டும். இவற்றை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இது மிகப்பெரும் விவகாரமாக மாறிவிடும். இது கவனமாக ஆராயப்பட வேண்டும். இதுவே புத்திஜீவிகளின் முக்கிய பணியாக இருக்க வேண்டும்.

இதன் பிறகு எமது சமூகத்தை வழிநடத்துவதற்கான உள்ளீடுகள் கிடைக்க வேண்டுமெனில் இவர்களிடமிருந்தே கிடைக்க வேண்டும். இவர்களே சமூகத்திற்கு வழிகாட்ட வேண்டும். இவ்வாறு தான் சிந்திக்க வேண்டும். உங்களது பொருளாதாரம் இப்படித்தான் இருக்க வேண்டும். பாரம்பரிய பொருளாதாரத்தை விட்டு விட்டு வேறொன்றுக்கு மாற வேண்டுமா? அல்லது பிறிதொரு வியாபாரம் பற்றி யோசிக்க முடியுமா? பல் கலாசார வர்த்தக முறைமை குறித்து சிந்திக்க முடியாதா? என்றவாறு வழிகாட்டல்களை வழங்க வேண்டும். அரசியலும் அப்படித்தான். பாராளுமன்ற உறுப்புரிமையை பெற முடியாத அளவுக்கு முஸ்லிம்கள் உள்ள பிரதேசங்களில் முஸ்லிம் கட்சிகள் ஒன்றும் போட்டியிட வேண்டுமா?

**இலங்கை முஸ்லிம் சமூகம் எதிர்பார்த்திராத அண்மைய சம்பவத்திலிருந்து எத்தகைய படிப்பினைகளை பெற வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

எங்களை சரியான பாதையில் இட்டுக் கொள்ள இறைவன் தந்த வாய்ப்பாகவே அண்மைய நிலவரத்தை நான் காண்கிறேன். எல்லோரும் கலந்தாலோசித்து இந்தத் திட்டத்தை சரியாகச் செய்தால் அல்லாஹ் இதை எமக்கு ஒரு அருளாக மாற்றுவான். நாம் சமூகமாக இயங்கி தீவிரவாதிகளை ஒதுக்குவது அடுத்த சமூகத்திற்குள்ள சந்தேகங்களை குறைக்கும். தற்பொழுது வீடுகள் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்விடயம் தொடர்பாக மக்கள் தமது கவலைகளை தெரிவிக்கின்றார்கள். உண்மையில் இது அசௌகரியமான விடயம் தான். ஆனால் மக்களது பாதுகாப்பு, உயிர் என்பது முக்கியம். இவ்விடயத்தில் நாம் பாதுகாப்பு தரப்புக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும். இதில் ஏற்படும் அசௌகரியங்களை பொறுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து உளவியல் ரீதியாக நிறைய சிங்கள மக்கள் முஸ்லிம்களை கண்டு அச்சப்படுகிறார்கள். சிலர் முஸ்லிம்களது ஆடைகளை கண்டவுடன் பயப்படும் அளவுக்கு உளவியல் ரீதியாக பாதிப்புக்களை எதிர்கொண்டிருக்கிறார்கள். இதுவொரு இயல்பான விடயம். இதுபோன்ற வெளிப்பாடுகள் இல்லாமல் போவதற்கு சில வாரங்களாவது செல்லும். அதற்குப் பின்னரே அவர்களோடு மனம் விட்டு உரையாட வேண்டும். தற்பொழுது அவர்கள் தங்களது உயிர், உடைமைகளை பாதுகாக்கவே முயற்சிப்பார்கள். உண்மையில இன்று அவர்கள் மார்க்கத்தை பின்பற்றும் உரிமையை விட வாழ்வதற்கான உரிமையையே முன்னுரிமைப்படுத்துகின்றனர்.

**இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு நீங்கள் கூற விரும்பும் ஆலோசனைகள் என்ன?**

மிக முக்கியமாக நாம் மற்றைய சமூகங்களின் உணர்வுகளை புரிந்துகொள்ள வேண்டும். இது எமது சமூகம் விட்ட பிழையாகும். நாம் உரிமைகளைப் பேசிய அளவுக்கு அடுத்தவர்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளவில்லை. உதாரணமாக, இறைச்சிக்கடை வைப்பதை நாம் உரிமையாக பேசுகிறோம். ஆனால் சிங்கள சமூகம் பசுவை கடவுளாக அல்லது புனிதமாக நோக்குகின்ற போது அவர்கள் மத்தியில் நாம் மாட்டிறைச்சியை தொங்கவிட்டுக் கொண்டு விற்பனை செய்யும் போது நாம் அவர்களது உணர்வுகளை மதிக்கவில்லை என்ற உணர்வு அவர்களிடம் ஏற்படும். மறுபுறத்தில் அவர்கள் எமது கிராமத்தில் பன்றி இறைச்சிக் கடையொன்றை திறந்தால் நாம் எந்தளவு கொதித்தெழுவோம். அதை நாம் எப்படி பார்க்கிறோம்?

உண்மையில் நாம் அதற்கு விரும்ப மாட்டோம். ஆனால் சட்ட ரீதியாக அதைச் செய்ய முடியுமா? முடியும். அவர்களுக்கு உரிமையும் உள்ளது. அவர்கள் எமது உணர்வுகளை மதித்திருக்கிறார்கள். திஹாரியில் Food City ஆரம்பிக்கும் போது அங்குள்ள பள்ளிவாசலினால் பன்றியிறைச்சி விற்பனை செய்ய வேண்டாம் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டதும், அவர்கள் அம்மக்களது உணர்வுகளை மதித்து பன்றியிறைச்சி விற்பனையை நிறுத்தியிருக்கிறார்கள்.

இதுவே புரிந்துணர்வு. நாம் இந்த விடயத்தில் பிழைவிட்டிருக்கிறோம். அடுத்த சமூகத்தினர், முகத்தை மூட வேண்டாம், பயமாக இருக்கிறது என அதிகமான சந்தர்ப்பங்களில் கூறினார்கள். நாம் கேட்கவில்லை. கறுப்பு நிற ஆடை அணிய வேண்டாம் என்றார்கள். நாம் கேட்கவில்லை. அது எமது உரிமை என்றோம். இன்று அதை கழற்றி வீசுகின்ற அளவுக்கு இடமளித்திருக்கிறோம். நாம் அவர்களது உணர்வுகளை மதிக்கவில்லை. எமது சில செயற்பாடுகள் அடுத்தவர்களுக்குத் தொந்தரவாக அமைந்துவிடும் என்கின்ற உணர்வை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். இது சண்டைபிடித்துக்கொள்ளும் விடயம் அல்ல. புரிந்துணர்வின் அடிப்படையில் நிகழ வேண்டியது. முன்னர் எமது கிராமத்தில் பள்ளிவாசலுக்கு முன்னால்

(பக்.15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யெமனியர்களின் உடற் பாகங்கள் எகிப்தில் விற்பனையாகின்றன



2014 ஆம் ஆண்டிலிருந்து யெமனியர்களின் உடற் பாகங்கள் வெளிநாடுகளுக்குக் கடத்தப்பட்டு வருவதாக அல் ஜஸீரா தகவல் வெளியிட்டுள்ளது. இதில் சில எகிப்திய வைத்தியசாலைகளும் அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளதாக அல் ஜஸீரா மேலும் தெரிவித்துள்ளது.

கிசிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட யெமனியர்களின் சிறுநீரகங்கள் அவர்களுக்குத் தெரியாமலேயே வெளியெடுக்கப்பட்டு அயல் நாடுகளுக்குக் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக அல் ஜஸீரா திடுக்கிடும் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பாதிக்கப்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட நேர்காணல்கள் மற்றும் ஆவணங்களை பகுப்பாய்வு செய்த பின்னர் இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. உடற் பாகங்களைக் கடத்தி விற்பனை செய்யும் இந்தக் கும்பலுடன் எகிப்திய அதிகாரிகள் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

2014 இல் அஹ்மத் எனப்படும் யெமனியரது ஒரு சிறுநீரகம் இவ்வாறு கடத்தப்பட்டு எகிப்தில் 5000 டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆயுத மோதலை எதிர்கொண்டுள்ள யெமனியர்கள் எகிப்திற்கு புலம்பெயர்ந்து வருகின்ற நிலையிலேயே இவ்வாறு அவர்களது சிறுநீரகங்கள் வெளியேற்றப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

யெமன் மத்திய கிழக்கிலுள்ள மிக வறிய நாடு என்பது குறிப்பிடத்தக்கது. 2011 ஆம் ஆண்டிலிருந்து அந்நாட்டின் மீது சஊதி அறேபியா தலைமையிலான அறபுக் கூட்டணி தாக்குதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# மத்திய கிழக்கு கடல் பிராந்தியத்தில் அமெரிக்கப் போர் கப்பல்கள்

மத்திய கிழக்கு கடல் பிராந்தியத்தில் அமெரிக்கப் போர் கப்பல்கள் நிறுத்தப்படுவது ஓர் உளவியல் யுத்தம் என்று ஈரான் அறிவித்துள்ளது. அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் ஜோன் போல்டன் இது குறித்து கருத்து வெளியிடுகையில், USS Abrahm Ligon எனப்படும் போர் குண்டுகளை வீசும் கப்பல்களை மத்திய கிழக்கு கடல் பிராந்தியத்திற்கு அனுப்பப்பட்டள்ளன. பிராந்தியத்தில் அமெரிக்காவின் ஆதரவு நாடுகளுக்கு எதிராக ஈரான் மேற்கொள்ளும் தாக்குதல்களுக்கு பதிலளிக்கவே இந்



நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக போல்டன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈரானின் அதிஉயர் தேசிய பாதுகாப்புச் சபையின் பேச்சாளர் கையாம் கொஸ்ராவி, போல்டனின் இந்த அறிவிப்பு ஈரான் மீதான ஓர் உளவியல் யுத்தமே தவிர, வேறொன்றும் இல்லை. மத்திய தரைக் கடலில் ஊடுருவும் அமெரிக்கக் கப்பல்களை தாம் கூர்ந்து அவதானித்து வருகின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

# சர்வதேசப் பார்வை

# இஸ்ரேல் - காஸாவுக்கிடையில் அமைதி ஒப்பந்தம்



காஸாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தமொன்று கைச்சாத்தாகியுள்ளதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். காஸாவில் இஸ்ரேல் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த விமான மற்றும் தரைவழித் தாக்குதல்கள் இதன் மூலம் நிறுத்தப்பட்டுள்ளது. காஸா பள்ளத்தாக்கின் எல்லைப் புறமான தெற்கு இஸ்ரேலியர்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை விரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரங்களில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் குறைந்தது 25 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். ஒப்பந்தம் கைச்சாத்தாகும்வரை காஸா மீதான தாக்குதல்களை இஸ்ரேல் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தது. காஸா-இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு எகிப்தும் கட்டாரும் மத்தியஸ்தம் வகித்துள்ளன.

இப்போர் நிறுத்த ஒப்பந்தம் குறித்து இதுவரை இஸ்ரேலிய அதிகாரிகள் உத்தியோகபூர்வ அறிக்கை எதனையும் வெளியிடவில்லை. ஆயினும், காஸா எல்லைப் புறத்தில் குவிக்கப்பட்டிருந்த இஸ்ரேலிய இராணுவம் மீளப் பெறப்பட்டுள்ளது.

# அமெரிக்காவின் சமாதானத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தி அப்பாஸுக்கு 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

அமெரிக்கா பரிந்துரைத்துள்ள நூற்றாண்டின் கொடுக்கல் வாங்கல் எனப்படும் சமாதானத் திட்டத்தை பலஸ்தீன் அதிகார சபையின் தலைவர் மஹ்மூத் அப்பாஸ் ஏற்றுக் கொள்வதற்கு சவூதி அரசாங்கம் அவருக்கு 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியதாகவும் அவர் அதை மறுத்ததாகவும் லெபனானின் அல் அஹ்பாரின் செய்திப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சவூதியின் பட்டத்துக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான் மற்றும் பலஸ்தீன் அதிகார சபையின் தலைவர் அப்பாஸ் ஆகியோரிடையே இது குறித்த பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளதாக அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது.

இருவருக்கும் இடையிலான கலந்துரையாடலில் சவூதி இளவரசர் இந்நூற்றாண்டின்



கொடுக்கல்-வாங்கல் குறித்து விளக்கமளித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வருடாந்தம் பலஸ்தீன அதிகார சபையின் வரவு-செலவுத் திட்டம் எவ்வளவு என்று விசாரித்த இளவரசர், 10 பில்லியன் அமெரிக்க டொலர்களை அதிகார சபைக்குத் தருவதாக பேரம் பேசியுள்ளார்.

அமெரிக்காவின் சமாதானத் திட்டத்தை ஏற்றுக்கொண்டால் ஜெரூசலத்திற்குப் பதிலாக அபூதிஷ் எனப்படும் பகுதியை பலஸ்தினர்களின் தலைநகராகக் கொள்ள முடியும் என இளவரசர் அங்கு வலியுறுத்தியுள்ளார்.

இப்பேரம் பேசலை மறுத்த அப்பாஸ், இதைத் தான் ஏற்றுக் கொண்டால் அதுவே தன்னுடைய அரசியல் வாழ்வின் முடிவாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார். ராமல்லாவில் உள்ள பலஸ்தீன அதிகார சபை அதிகாரிகள் இது தொடர்பாக கருத்து வெளியிட மறுத்துள்ளனர். சட்டவிரோதமான குடியேற்றங்கள் தொடர்பில் இத்தகைய கைமாறுகளைப் பெற்றுக் கொள்ள தான் தயாரில்லை என்று மஹ்மூத் அப்பாஸ் இதன்போது தெரிவித்துள்ளதை அல் அஹ்பார் பத்திரிகை மேற்கோள் காட்டியுள்ளது.

# சிரியாவின் இத்லிப் பிராந்தியத்தில் அரசு கடும் தாக்குதல்



சிரியாவின் இத்லிப் பிராந்தியத்தில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள கடும் தாக்குதலில் குழந்தைகள் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளதாக அல் ஜஸீரா செய்திச் சேவை தெரிவித்துள்ளது. குறைந்தது 15 பொதுமக்கள் இத்தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். சிரியாவின் வடமேற்கு பிராந்தியமான இத்லிப் மீதான தாக்குதல்களுக்கு ரஷ்யாப் படையினர் அரசாங்கத்திற்கு ஆதரவளித்து வருகின்றனர்.

கிளர்ச்சியாளர்கள் ஒழிந்திருக்கும் இறுதிக் கோட்டை இதுவென்று அரசாங்கம் கூறுகின்றது. மக்கள் செறிவாக வாழும் இத்லிபின் கிழக்குப் பகுதியில் உள்ள ராஸ் அல் ஐன் கிராமத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 5 குழந்தைகள் கொல்லப்பட்டதோடு, 20 பேர் கடும் காயத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர். பல கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன.

சிரிய ஜனாதிபதி பஷ்ஷார் அல் அஸத் கிளர்ச்சியாளர்களின் இறுதிக் கோட்டையை விரைவில் கைப்பற்றுவோம் என ரஷ்ய அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். 2011 இல் சிரியாவில் அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் எழுச்சி ஆரம்பித்தது. அன்று முதல் அரசாங்கப் படையினர் கிளர்ச்சியாளர்கள் மீது கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதுவரை ஐந்தரை இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளதோடு, நாட்டின் அரைவாசி மக்கள் உள்ளூரிலும் வெளியூரிலும் இடம்பெயர்ந்து வாழுகின்றனர்.

# இராணுவ ஆட்சிக்கு எதிராக சூடானில் வைத்தியர்கள் ஆர்ப்பாட்டம்



சூடானில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இராணுவ அரசாங்கத்திற்கு எதிரான மருத்துவர்களின் பணிப் பகிஷ்கரிப்பு சம்பவங்களின் போது 90 ஆர்ப்பாட்டக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். உமர் பஷீரிடமிருந்து கைப்பற்றப்பட்ட அதிகாரத்தை சூடானிய இராணுவத்தினர் தம் வசம் எடுத்துக் கொண்டுள்ளனர். ஜனநாயக ஆட்சி மாற்றத்தை எதிர்பார்த்த மக்களுக்கு இது ஏமாற்றத்தை அளித்துள்ளதனால் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவ ஆட்சிக்கு எதிராக சூடானிய வைத்தியர்களின் மத்திய குழு பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை அறிவித்துள்ளது. இராணுவத்தினரால் வைத்தியர் ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்து மருத்துவர்கள் நேரடியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

சூடானிய ஊடகங்களும் இராணுவத்தினரால் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. ஜனநாயகபூர்வமான அதிகார மாற்றத்திற்கு சூடானிய பாதுகாப்புப் படையினர் ஆறு மாத கால அவகாசம் கோரியுள்ள நிலையில், மக்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐசிஸ் பயங்கரவாதத்தின் பின்புலம்

## சர்வதேச அரசியல் ஆய்வாளர்களின் கருத்துகள்

• கலாநிதி றஊப் ஸெய்ன்

ஆறு அங்குல தாடியுடனும், கறுப்பு நிற ஜுப்பா, தலைப்பாகை அணிந்த நிலையில் ஈராக்கினுடைய மௌஸூல் ஜும்ஆ பள்ளிவாசல் மிம்பரில் 2014 ஆம் ஆண்டு ஜுலை 21 ஆம் திகதியன்று அபூ பக்கர் பக்தாதி தலைமையில் ''உலகத்தினுடைய கலீபா நான். எனக்கு எல்லோரும் கட்டுப்படுங்கள்'' என ISIS அமைப்பின் பிரச்சாரம் தோற்றமானது. ஈராக்கிலும் சிரியாவிலும் இஸ்லாமிய எழுச்சியை உருவாக்கும் அமைப்பு என்ற பெயரில் மௌஸூல் பள்ளிவாசல் பிரகடனத்தில் இருந்து சர்வதேச ரீதியில் மிகப் பெரிய பேசுபொருளாக இவ்வியக்கம் உருப்பெற்றுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா 2015 ஆம் ஆண்டில் பல நாடுகளை ஒன்றிணைத்து இவ்வியக்கத்திற்கெதிராகத் தாக்குதல் நடவடிக்கை மேற்கொண்டதன் பிற்பாடு புதிதாகப் 13 நாடுகளில் இவ்வமைப்பு ஊடுருவியுள்ளது. இது எதனைக் காட்டுகின்றது? அமெரிக்க வல்லரசினால் இப்படியொரு ஆயுதக் குழுவை அழிக்க முடியாமல் போனதேன்? என்ற கேள்வியை இது எழுப்புகின்றது.

2000 முதல் 200,000 வரையிலான உறுப்பினர்களைக் கொண்ட இவ்வமைப்பு தீ மூட்டிக் கொலை செய்தல், கழுத்தறுத்துக் கொலை செய்தல், அடுக்கு மாடிகளிலிருந்து கீழே தள்ளி விடுதல், நீரில் மூழ்கடித்துக் கொலை செய்தல் புல்டோசர்களை ஏற்றிக் கொலை செய்தல், தற்கொலை குண்டுத் தாக்குதல் போன்ற கொடூரமான வழிமுறைகளைக் கையாள்கின்றது. ஊடகங்கள் இவர்களின் இத்தகைய கொடூரங்களை ஒவ்வொரு நாளும் உலகத்தின் பார்வைக்குக் கொண்டு வருகின்றன.

இவர்கள் யார்? ஏன் இவ்வாறு கொடூரமாகச் செயற்படுகின்றனர்? இஸ்லாமிய ஆட்சியைக் கொண்டுவருவதற்கு இஸ்லாம் காட்டித் தரும் வழிமுறை இதுதானா? இவர்கள் விதிப்பது குர்ஆன் கூறும் தண்டனையா? இஸ்லாத்தின் பெயரால் இவர்கள் மேற்கொண்டுவரும் இந்த வன்முறைகளுக்குக் காரணம் என்ன? இவர்களுக்குப் பின்னால் உள்ள சக்திகள் யார்? என்றெல்லாம் பல சந்தேகங்கள் எழுகின்றன.

உலகின் முன்னணி அரசியல் துறை ஆய்வாளர்கள் ஐசிஸ் பயங்கரவாதிகள் குறித்து பல்வேறு அபிப்பிராயங்களை முன்வைத்துள்ளனர். இவ்வமைப்புக்கும் மேற்கத்தேய நாடுகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளதாக அவர்கள் கருதுகின்றனர். இந்தியாவின் பிரபல அரசியல் ஆய்வாளர் அந்தோனி ஜாகப் ISIS என்பது ஒரு அமெரிக்க பிரிட்டன் இஸ்ரேலிய முக்கூட்டுத் தயாரிப்பு என்கிறார். பொதுவாக ஐசிஸ் பயங்கரவாதம் குறித்து ஆய்வினை மேற்கொண்டவர்கள் அவர்களுக்குப் பின்னால் பெரும் வல்லரசுகள் இருக்கக் கூடும் என்பதற்கான ஆதாரமாக பின்வரும் கேள்விகளை முன்வைக்கின்றனர்.

1. இவ்வமைப்பினரிடம் இருக்கின்ற ஆயுதங்கள் எங்கிருந்து கிடைக்கின்றன? அவற்றை எவ்வாறு கொள்வனவு செய்கிறார்கள்?

இது முக்கியமான கேள்வியாகும். ஏனெனில் மத்திய கிழக்கு அரபு நாடுகள் எதுவும் ஆயுதங்களை உற்பத்தி செய்வதில்லை. பாரம்பரிய ஆயுதத் தொழிற்சாலைகள் கூட அங்கில்லை. அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்கின்ற நாடுகளாகவே அவை உள்ளன. இந்நிலையில் விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் கனரக ஆயுதங்களை ISIS எங்கிருந்து பெற்றது என்பது சந்தேகத்திற்கிடமான கேள்வியாகும்.

2. 80,000 தொடக்கம் 200,000 வரை அங்கத்தவர்களைக் கொண்டதாகக் கூறப்படும் இவ்வியக்கம் அங்கத்தவர்களுக்கு ஊதியம் வழங்கவும் போருக்குத் தேவையான கருவிகளைக் கொள்வனவு செய்யவும், உணவுக்காகவும் தேவையான நிதியை எங்கிருந்து பெறுகின்றது?

3. நெருப்பின் மூலம் சுட்டுக் கொலை செய்தல், நீரில் மூழ்கடித்துக் கொலை செய்தல், தற்கொலை குண்டுத் தாக்குதல் போன்ற இஸ்லாம் ஒரு துளியும் அனுமதிக்காத கொடூரமான வன்முறைகளை எப்படிப் பகிரங்கமாக மேற்கொள்கின்றார்கள?

4. இவர்களின் கொடூர செயற்பாடுகள் எப்படி மிக விரைவாக சர்வதேச ஊடகங்களுக்கு வருகின்றன?

5. இதுவரை இவர்களது எதிரிகள் யாரென தெளிவாகப் பிரகடனப்படுத்தாமல் இருப்பது ஏன்?

6. சிரியாவில் இருந்து ஈராக் நகரங்களை நோக்கி விரைந்ததன் காரணமென்ன? கடந்த 40 ஆண்டுகளாக சிரிய மக்களை அடக்கி ஒடுக்கி வரும் பாத் கட்சி அரசாங்கத்தை எதிர்த்துப் போராடாமல் அந்நாட்டுத் தென்கிழக்குப் பகுதியில் மாத்திரம் (றக்கா) இவர்கள் ஒதுங்கியதேன்?

7. இன்று இவ்வியக்கம் எகிப்துக்கும் பலஸ்தீனத்திற்கும் எல்லைப் புறமாக உள்ள சினாய் என்ற இடத்தில் நிலை கொண்டுள்ளது. சினாய் இஸ்ரேலுக்கு சமீபமாக உள்ள எல்லைப் புறமாகும். இந்தப் பகுதியில் பயிற்சி முகாம் அமைத்து வன்முறைகளில் ஈடுபட்டு வரும் ISIS குறித்து இஸ்ரேல் மௌனம காத்து வருவதேன்?

8. சினாயில் இருந்துகொண்டு எகிப்திய இராணுவத்தோடு மோதி வரும் ISIS உறுப்பினர்களுக்குக் காயம் ஏற்பட்டால் இஸ்ரேலிய மருத்துவ மையங்களில் சிகிச்சை வழங்கப்படுவதேன்?



9. சிரிய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட சில ISIS அங்கத்தவர்கள் இஸ்ரேலியப் பிரஜைகள் என்பது நிரூபணம் செய்யப்பட்டது. இஸ்லாமிய கிலாபத்தை உருவாக்கும் நோக்கில் போராடுவதாகக் கூறிக்கொள்ளும் இவ்வமைப்புக்கும் யூதர்களுக்குமிடையிலான தொடர்பென்ன?

10. அமைதியாக உள்ள அரபு நாடுகளில் இவர்கள் ஊடுருவி பள்ளிவாயல்களில் குண்டு வைப்பதேன்? அதன் மூலம் முழு இஸ்லாமிய உலகையும் ஆயுத மோதலொன்றுக்குள் தள்ளிவிட இவர்கள் எத்தனிப்பதேன்? குவைத், சவூதி அரேபியா போன்ற நாடுகளில் இவர்கள் குண்டுகளை வெடிக்க வைத்து பள்ளி வாயல்களில் பலரைக் கொன்று குவித்துள்ளனர்.

11. அரபு வசந்தம் எந்தெந்த நாடுகளில் எழுந்ததோ அங்கு இவர்கள் திட்டமிட்டு ஊடுருவுகின்றார்கள். அந்த வகையில் எகிப்து, லிபியா, யெமன் போன்ற நாடுகளில் ISIS ஊடுருவுவது ஏன்?

இந்தக் கேள்விகளைத் தெளிவாக ஆராய்ந்தால் இவ்வியக்கத்திற்குப் பின்னால் இருக்கின்ற சக்திகள் யார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அரபு நாடுகளின் அரசியல் விவகாரங்களை ஆழ மாக ஆய்வுக்குட்படுத்தும் துருக்கிய ஆய்வாளர் அவ்ரகான் முகம்மது அலி, அல் ஜஸீராவின் செய்தி ஆய்வாளர் மஹ்தி ஹஸன் மற்றும் மர்வான் பிஷார் BBC இன் முன்னால் புலனாய்வுத் துறை ஊடகவியலாளர் யுவோன் ரிட்லி, இந்தியாவின் சர்வதேச அரசியல் ஆய்வாளர் அந்தோனி ஜாக்கொப் மெத்யூ போன்றோர் இஸ்ரேல் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய 03 நாடுகளினதும் கூட்டுத் தயாரிப்பே ISIS எனக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

லிபியாவின் முன்னாள் பிரதமர் அப்துல்லாஹ் அரபு நாடுகள் மேற்குலகின் ஆயுதக் கொள்வனவு சாலை எனவும் யுத்தங்களை இறக்குமதி செய்கின்ற ஏகாதிபத்திய நாடுகள் பயன்படுத்தும் கருவிதான் இந்த ISIS இயக்கமென்றும் அவர்கள் கூறியுள்ளார். முழு இஸ்லாமிய உலகத்தையும் போரிற்கு அழைக்கும் பணியை ஏகாதிபத்திய நாடுகள் இவ்வமைப்பைக் கொண்டு சாதிக்கின்றது. இந்த உண்மை பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

முஸ்லிம்கள் மேற்கொண்ட ஆய்வுகள் மட்டுமன்றி முஸ்லிம் அல்லாதவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளும் இவ்வமைப்புக்குப் பின்னாலுள்ள சக்திகள் யார் என்பதை தோலுரித்துக் காட்டியுள்ளன. குறிப்பாக அந்தோனி ஜாக்கொப் இவ்வமைப்புப் பற்றிக் கூறுகையில், ''இது ஸுன்னி அமைப்போ, ஷீஆ அமைப்போ அல்ல. மாறாக இஸ்ரேலின் உளவுத் துறையான மொசாட்டினால் பயிற்றுவிக்கப்பட்டு இஸ்ரேலின் நிதியுதவியுடன் இயங்கும் ஓர் அமைப்பென்று'' தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு நிறுவகத்தின் முன்னாள் உயர் அதிகாரி எட்வேர்ட் ஸ்னோவ்டன் 'அபூ பக்கர் பக்[illegible] மொஸாட், CIA இணை[illegible] இவரது உண்மையான பெயர் ஷிமோன் எலியட். அவரை ஓர் அரேபியராகக் காட்டுவதற்கு அபூ பக்கர் பக்தாதி என்ற பெயர் சூட்டப்பட்டது. இவர் சிறிது காலம் அமெரிக்காவில் சினிமாத் துறையில் நடித்துள்ளார். அல் காயிதா இயக்கத்தில் இணைக்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுவதற்கு முன்னர் ஈராக்கின் பக்தாத் பல்கலைக்கழகத்தில் அரபு மொழியைக் கற்று அல் குர்ஆனிலும் ஹதீஸிலும் வருகின்ற ஜிஹாத் தொடர்பான வசனங்களை நன்கு கற்று, அதற்கு விளக்கம் சொல்லும் அளவுக்குப் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்'' எனக் கூறுகின்றார். இந்த விடயம் தனிப்பட்ட வகையில் தனக்கு நன்கு தெரிந்த ஒன்று ஸ்னோடன் வலியுறுத்துகிறார்.

Global Research என்ற சர்வதேச ஆய்வு மையமும் தனது இணையத்தளத்தில் கடந்த ஆண்டில் வெளியிட்ட அறிக்கையிலும் இதே கருத்தைக் கூறியுள்ளது. பிரான்ஸின் முன்னணிப் புலனாய்வு நிறுவனம் ஒன்றும் இதே கருத்தை வெளியிட்டுள்ளது. நான் ஏற்கனவே கூறிய ஆய்வாளர்களின் கருத்துக்கள் மேலே எழுப்பப்பட்ட கேள்விகள் இவற்றை வைத்து நோக்கும்போது இவர்கள் யார் என்பதும் இவர்களுக்குப் பின்னால் உள்ள சக்திகள் யாரென்பதும் இப்போது நமக்குத் தெளிவாகின்றது.

அப்படியென்றால் இப்போது நமக்கு முன்னால் ஒரேயொரு கேள்வி மாத்திரமே எஞ்சியிருக்கின்றது. அது கடைசிக் கேள்விதான். ஆனாலும் மிக முக்கியமான கேள்வி. இவ்வாறு இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் எதிரிகளால் உருவாக்கப்பட்ட இவ்வியக்கம் ஏன் உருவாக்கப்பட்டது? அதற்கான காரணங்கள் அல்லது நோக்கங்கள் எவை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். எனது ஆய்வில் இவ்வமைப்பின் உருவாக்கத்திற்குப் பின்னால் 04 பிரதான காரணங்கள் உள்ளன.

### வளர்ந்து வரும் இஸ்லாத்தை, அதன் பரவலைத் தடுத்து நிறுத்தல் முதல் நோக்கமாகும்.

பயங்கரவாதத்திற்கெதிரான போரிற்குப் பின்னரும் மேற்கு நாடுகளில் இஸ்லாத்தைத் தழுவுகின்றோரின் வீதம் பெருமளவு அதிகரித்துள்ளது. BBC உலக சேவை 2010 இல் மேற்கொண்ட ஒரு ஆய்வின்படி இன்னும் 100 வருடங்களுக்குப் பின்னர் இஸ்லாம் பல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெரும்பான்மை சமயமாக இருக்குமென்பது கணிக்கப்பட்டது. பிரான்ஸில் இஸ்லாத்தைத் தழுவுகின்றவர்களின் வீதாசாரத்தைக் கணிப்பிட்டால் இன்னும் 100 ஆண்டுகளில் அந்நாட்டின் பெரும்பான்மை மக்கள் முஸ்லிம்களாக இருப்பர். தர்க்க ரீதியிலும், புள்ளி விபர அடிப்படையிலும் BBC இன் ஆய்வு இவ்வுண்மையை நிறுவியுள்ளது.

பிரிட்டன், ஜேர்மன், ஐக்கிய அமெரிக்காவிலும் இது போன்ற மாற்றமே நிகழ்ந்து வருகின்றது. எனவே இஸ்லாம் குறித்த ஒரு உலகளாவிய பீதியை உருவாக்க வேண்டுமென்ற தேவை மேற்குலகில் எழுந்துள்ளது. இஸ்லாமியப் பீதி (Islamophobia) என்ற ஒரு தொழில் துறையாகவே (Industry) வளர்ந்து வருகின்றது. ஐரோப்பாவின் வலது சாரிக் கட்சிகள், அரசாங்கங்கள், ஊடகங்கள், சினிமாத் துறை, தீவிர வாத இயக்கங்கள் என அனைத்தும் ஒன்றிணைந்து உலகளாவிய இஸ்லாமியப் பீதியை உருவாக்கும் ஒரு வலைப்பின்னலோடு (Islamo phobia Network) செயற்படுகின்றனர். இதன் பிரதிபலிப்புகளை இன்று மேற்கில் தெளிவாகக் காணலாம். ஐரோப்பாவின் சமூக, கலாசாரப் பன்மைத்துவத்தை எதிர்க்கும் நடவடிக்கைகளில் அதி தீவிர வலது சாரிக் கட்சிகள் இறங்கியுள்ளன. அமெரிக்காவில் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கிறார்கள்.

ஹொலிவூட் 100 திரைப்படங்களில் 10 படங்கள் இஸ்லாத்தைப் பயங்கரவாதத்தோடும், வன்முறை[illegible]படுத்தும் வகையில் உருவாக்[illegible] அமெரிக்க ஹொலிவூட் மாத்திரமன்றி இந்தியாவின் பொலிவூட் மற்றும் தமிழகத்தின் கொலிவூட் வரையும் இதே அரசியலைத் தான் பின்பற்றுகின்றன.

எனவே, இஸ்லாம் குறித்து ஒரு பயத்தை முஸ்லிம் அல்லாதோரின் உள்ளங்களில் உருவாக்க வேண்டும். அந்தப் பயத்தை உருவாக்கும் நோக்கிலேயே ISIS அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இஸ்லாம், இஸ்லாமிய ஆட்சி, இஸ்லாமிய இயக்கங்கள் அனைத்தும் பயங்கர வாதத்தையே பரப்புகின்றன. வன்முறைகளை தமக்குரிய வழியாக எடுத்துக்கொள்கின்றன. எனும் கருத்தை சர்வதேச சிவில் சமூகத்தில் ஆழப் பதிப்பதே இவ்வமைப்பை உருவாக்கியவர்களின் பிரதானமான நோக்கமாகும்.

ISIS மட்டுமன்றி நைஜீரியாவின் போகோ ஹறாம், சோமாலியாவின் அஷஸ்ஸபாப், மாலியின் அன்ஸாருத் தீன், ஆப்கானிஸ்தானின் தாலிபான், மத்திய கிழக்கு அரபு நாடுகளில் அல் கைதா என்று பல்வேறு ஆயுதக் குழுக்களை இஸ்லாமியப் பீதியைப் பரப்புவதற்கு எதிரிகள் நன்கு கையாண்டு வருகின்றனர்.

ஆப்கானிஸ்தானில் 15 ஆண்டுகளாக ரஷ்யாவுக்கு எதிராக நடத்தப்பட்ட போரின் முடிவில் ஆப்கானில் இஸ்லாமிய அரசொன்று தோன்றுவதற்கான சாத்தியம் தென்பட்ட போது அதனை முறியடிக்க தாலிபான் இயக்கம் களத்தில் இறக்கப்பட்டது.

இன்று துணைக் கண்டத்தில் நடக்கும் அனைத்து வன்முறைகளுக்கும் முஸ்லிம்களே காரணம் என்று இஸ்லாமியப் பீதி ஊடகங்களில் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. உலக ஆதிக்கமுள்ள ஊடகங்களான ரொய்டர், CNN, AFP என்பவை இன்று இஸ்லாமியப் பீதி எனும் இந்தக் கைத்தொழிலை வெற்றிகரமாக முன்னெடுக்கின்றன. இந்நிறுவனங்கள் ஒளிபரப்பக் கூடிய செய்திகளை அட்டவணைப்படுத்திப் பார்த்தால் இந்த உண்மையை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

ISIS இயக்கத்தை தோற்றுவித்தவர்களின் இரண்டாவது நோக்கம் இஸ்ரேலை பாதுகாப்பதும் அதன் விஸ்தரிப்பு வாதத்திலிருந்து சர்வதேசக் கவனத்தைத் திருப்புவதுமாகும். மத்திய கிழக்கு முழுவதையும் ஒரு யுத்த களமாக மாற்றிவிட்டால் இஸ்ரேல் பலஸ்தீனர்களுக்கு இழைத்து வரும் அநியாயங்கள் குறித்து யாரும் அக்கறை கொள்ளாதவாறு கவனம் சிதறடிக்கப் படும்.

ISIS தோற்றத்தின் மூன்றாவது நோக்கம் அரபு வசந்தத்தைத் தோற்கடிப்பதாகும். 2011 க்குப் பின்னர் அரபு நாடுகளில் கொடூரமான ஆட்சிக் கெதிராக நடைபெற்று வரும் மக்கள் புரட்சியை தடுத்து நிறுத்துவதற்கும் இருக்கின்ற ஆட்சியாளர்களை அதிகாரத்தில் நீடித்திருக்கச் செய்யவும் ISIS இயக்கத்தை மேற்கத்தேய ஏகாதிபத்திய சக்திகள் பயன்படுத்துகின்றன.

அரபு வசந்தம் இடம்பெற்ற நாடுகளில் ஏற்பட்ட ஜனநாயக ஆட்சி மாற்றத்தைத் தடை செய்த அமெரிக்கா எந்த நாட்டிலும் ஜனநாயகம் உயிர்ப் பெறுவதை விரும்பவில்லை. எகிப்திய அரசியல் காட்சிகள் இதற்குச் சிறந்த உதாரணம். அங்கு முபாரக்கின் 30 ஆண்டுகால கொடுங்கோண்மை ஆட்சிக்குப் பின்னர் நடந்த மக்கள் எழுச்சி முபாரக்கை அதிகாரத்திலிருந்து தூக்கி வீசியது. முர்ஸி ஜனநாயக முறைப்படி அதிகாரத்திற்கு வந்தார். ஆனால் அவருக்கெதிரான இராணுவப் புரட்சியை அமெரிக்காவும் இஸ்ரேலும் பிற அரபு நாடுகளும் தூண்டின.

ISIS பயங்கரவாத அமைப்பின் தோற்றத்திற்குப் பின்னால் நிற்கும் நான்காவது நோக்கம் அரபு முஸ்லிம் நாடுகளில் உள்ளார்ந்த மோதல்களை ஊக்குவிப்பதாகும். 90களுக்குப் பின்னர் உலகில் மேற்கு நாகரிகத்திற்கும் இஸ்லாமிய நாகரிகத்திற்கும் இடையில் மோதல் உருவாகும் என்று (Clash of Civilization) ஒரு சதிக்கோட்பாடு (Conspiracy Theory) சாமுவல் பீ. ஹன் டிங்டன் என்ற யூதனால் வடிவமைக்கப்பட்டது. இந்தக் கோட்பாட்டுப் பின்னணியிலேயே ஆப்கான் ஊடாக பக்தாதை நோக்கி அமெரிக்கப் படை நகர்த்தப் பட்டது. 2003 மார்ச்சில் ஈராக் ஆக்கிரமிக்கப்பட்டு அதன் எண்ணெய் வளம் சூறையாடப்பட்டது. 1.5 மில்லியன் ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

ஆக்கிரமிப்பின் முடிவில் ஈராக் 03 தேசங்களாகப் பிளவுபடுத்தப்பட்டது. தொடர்ந்தும் அரபு முஸ்லிம் நாடுகளை நேரடியான இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது பொருளாதார ரீதியில் சுமையானது எனக் கருதிய அமெரிக்கா படைகளை பெருமளவில் பின்வாங்கியது.

ஆனால் தனது மறுகாலனியத்தை (Recolni zation) உத்தரவாதம் செய்யவும் எண்ணெய்ச் சுரண்டலை நீடிக்கவும் புதியதொரு கோட்பாட்டைக் கண்டு பிடித்தது. (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• இயான் மிஷல்

வீட்டிலிருந்த கத்திகளையெல்லாம் தேடுதலின் போது கொண்டு போய்விட்டார்கள். பாண் வெட்டுவதற்காக பொலிஸ் நிலையத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேன் என்றதொரு சுவாரசியமான செய்தி சமூக வலைத் தளங்களில் சுழன்று கொண்டிருந்தது.

எத்தனை சொல்லியும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்றால் என்ன என்பதை புரியாமல் இருந்த சமூகத்துக்கு அதனைப் புரிய வைப்பதற்கு வாய்த்த சந்தர்ப்பம் போல ஈஸ்டர் தாக்குதல்கள் அமைந்திருந்தன. யார் யாரெல்லாம் சோதனையிடப்படப் போகிறார்கள், என்னென்ன பொருட்கள் எல்லாம் கைப்பற்றப்படப் போகின்றன என்பது தெரியாமல் மக்கள் குழம்பிப் போய் நின்றார்கள்.என்ன நடக்கிறது என்பதைத் தீர்மானிக்கும் முன்னரே பலர் கூண்டிலடைக்கப்பட்டு நின்றார்கள்.

தேசிய தௌஹீத் ஜமாஅத்தும் ஜமாஅதே மில்லது இப்ராஹீமும் தான் இலங்கையில் தடை செய்யப்பட்ட இயக்கங்களாக இருக்கையில் தௌஹீத் கருத்துக்களைத் தாங்கிய விடயங்களை வைத்திருந்தவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். எது பயங்கரவாதம் என்பதை நிறுவ முடியாமையினாலே இதுவெல்லாம் நடந்திருக்கிறது.

இதேபோல தௌஹீத் ஜமாஅத்தினர் மட்டும் தான் சோதனையிடப்பட்டார்கள் என்றும் இல்லை. கண்ணுக்குத் தெரியும் எந்த முஸ்லிமும் பயங்கரவாதியாக நோக்கப்பட்டு சோதனையிடப்பட்டிருக்கிறார்கள். தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். கொள்கை ரீதியாகப் பிளவுபட்டு பாதிக்கப்பட்டவர்கள் ஒருவரையொருவர் காட்டிக் கொடுத்ததில் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கொள்கை ரீதியில் தனக்குப் பிடிக்காதவர்களை பொலிஸில் மாட்டிக் கொடுப்பதற்கான சந்தர்ப்பமாக சிலர் இந்தத்

எதிராக குரல் கொடுத்தவர் என்ற போதிலும் அரச ஊழியரான இவர் விசாரிக்கப்பட்டு வருகிறார்.

தல்துவையில் தௌஹீத் சிந்தனையுள்ள பாடசாலை ஆசிரியர் ஒருவர் சந்தேகத்துக்கிடமான பல பொருட்கள் இருந்ததாகக் கூறி கைது செய்யப்பட்டுள்ளார். பல பொது நிறுவனங்களில் அங்கத்தவராக உள்ள இவரிடம் இருந்து ரபர் சீல்களும், பொது நிறுவனங்களின் சான்றிதழ்களும், தௌஹீத் பயான்கள் அடங்கிய சீடீக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. மீன்பிடி அமைச்சில் பணி புரியும் அரச ஊழியர் ஒருவர், சக ஊழியர் ஒருவர் கொடுத்த தகவலொன்றின் பேரில் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார். 21 ஆம் திகதி தாக்குதல் குறித்து அவர் முன்கூட்டியே தனது டயரில் எழுதி வைத்திருந்ததாக பொய்யான தகவல் கொடுக்கப்பட்டே அவர் மாட்டி வைக்கப்பட்டிருந்தார். இப்படி

அதேபோல கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் அலுவலகத்தில் இருந்து டி 56 துப்பாக்கி ரவைகள் 48 உடன் 02 பேர் கைது செய்யப்பட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. தனது பாதுகாப்பு உத்தியோத்தர்களுக்காக அரசாங்கத்தால் வழங்கப்பட்டவையே அவை என ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் இதற்கு விளக்கமளித்திருந்தார். நீர் கொழும்பு பிரதி மேயர், 32 போன் பட்டரிகளுடன் கைது செய்யப்பட்டிருந்தார். உள்ளூராட்சித் தேர்தல்களின் போது அவரது ஆதரவாளர்களின் பாவனைக்காகப் பயன்படுத்தப்பட்டவை என அவரது தரப்பிலிருந்து இதற்கு விளக்கமளிக்கப்பட்டிருந்தது. இப்படி அரசியல் செய்வது கூட பயங்கரவாதமாக மாறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

வெளிநாடுகளில் கல்வி கற்பதற்காகச் செல்லவிருக்கின்ற மாணவர்களும் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். அதேபோல உள்

இப்படி ஏன் கைது செய்யப்படுகிறோம், எதற்காக அழைத்துச் செல்லப்படுகிறோம், எத்தனை நாள் தடுத்து வைக்கப்படப் போகிறோம் என்றெல்லாம் தெரியாமல் இதுவெல்லாம் நடந்தேறுகிறது. என்னென்ன விடயங்கள் எல்லாம் ஆயதங்களாகவும் தீவிர வாதத்தைப் பரப்புபவையாகவும் அமையப் போகின்றன என்பது தெரியாமல் மக்கள் அகப்பட்டதையெல்லாம் ஒளித்து வைக்கவும், சிலவற்றை எரித்துப் போடவும் முயற்சிக்கிறார்கள்.

அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும் நிலையில் பாதுகாப்புப் படைக்கு எல்லையற்ற அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நடைமுறைக்கு வரும்பொழுது இந்த அதிகாரங்கள் பொலிசார் வரை விஸ்தரிக்கப்படுகிறது. பயங்கரவாதம் என்பது என்ன என்பதும் வரையறுக்கப்படாத நிலையில் பொது மக்கள் இந்தச் சட்டத்தினால் பெரிதும்

# ஈஸ்டர் தாக்குதல் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கான முன்னோட்டம்?

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் சொல்லும் முதலாவது விடயம், இந்தச் சட்டம் பயங்கரவாதம் என்பதை வரையறுக்கவில்லை என்பது. நடந்து கொண்டிருக்கின்ற சுற்றிவளைப்புக்களின் போது மக்களுக்கு இதன் தாத்பரியம் நன்றாகவே விளங்கியிருக்கும். பெரும்பாலான இடங்களில் அரபு எழுத்துடன் கூடிய காகிதங்களை வைத்திருந்தவர்கள் பயங்கரவாதிகள் என்று கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தனது பர்ஸில் அரபு மொழியில் பிரயாண துஆவை வைத்திருந்த மோட்டார் சைக்கிளோட்டி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய கிழக்கில் பணிப் பெண்ணாக வேலை செய்த பொழுது கொண்டு வந்த சில அரபு சஞ்சிகைகளை வைத்திருந்த குற்றத்துக்காக பொல்கஹவெல பிரதேசத்தில் ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார். இப்படி அரபு மொழி பயங்கரவாத மொழியாக மாறிவருவதைக் கண்டு பலரும் தம்மிடமிருந்த அரபு கிதாபுகளை தீயிட்டு எரித்துள்ளனர். அல்குர்ஆனை வீட்டில் வைத்திருக்கலாமா என்ற சந்தேகத்தை பலரும் பலரிடமும் விசாரித்துள்ளனர். பெறுமதிமிக்க தமது அரபு நூல்களை எரிக்கவும் முடியாமல் வைத்திருக்கவும் முடியாமல் இன்னும் பலர் இன்றுவரை அச்சத்துடன் நாட்களைக் கடத்தி வருகின்றனர்.

தௌஹீத் ஜமாஅத்துடன் தொடர்புடைய உரைகளையும் ஆவணங்களையும் தம்வசம் வைத்திருந்ததற்காக பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். தடை செய்யப்பட்ட இயக்கத்துடைய வீடியோக்கள் அடங்கிய இறுவட்டுக்கள் வைத்திருந்த குற்றச்சசாட்டில் இன்னும் பலர் கைதாகியுள்ளனர். தடைசெய்யப்பட்ட இயக்கம் சார்ந்த வீடியோவை தனது மொபைலில் வைத்திருந்ததற்காக கலேவெலையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பள்ளிவாசலுக்கருகில் நின்றிருந்த இரு இளைஞர்களை சோதித்துப் பார்த்ததில் அவர்களது மொபைலில் இருந்து வீடியோ காட்சிகள் சந்தேகத்துக்கிடமானவை என்று கூறி அழைத்துச் செல்லப்பட்ட சம்பவமொன்று எனமல்பொதுவ பிரதேசத்தில் நடந்துள்ளது.

தௌஹீத் ஜமாஅத்தின் கருத்துக்கள் அடங்கிய சிடீக்கள் 03, டப் மற்றும் மொபைல் போன்களுடன் 05 கடவுச் சீட்டுக்கள் வைத்திருந்த காத்தான்குடியைச் சேர்ந்த இருவரை ஆமர் வீதி பீனிக்ஸ் தொடர்மாடி வீட்டிலிருந்து கைது செய்ததாக லங்காதீப செய்தி வெளியிட்டிருந்தது. இவர்களிடம் இருந்த கடவுச் சீட்டுக்களில் அவர்கள் இருவருடையதும் அவர்கள் இருவரினதும் மனைவியரதும் கடவுச் சீட்டும் அடங்கும்.

இப்படி தடை செய்யப்பட்ட இயக்கத்தினது என்ற பேரில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். உண்மையில்



தருணத்தைப் பாவித்திருக்கிறார்கள். இந்த வகையில் அரசாங்கத்தின் அடிவருடிகளாக இருப்பவர்களின் மாற்றுக் கொள்கையில் இருப்பவர்கள் எல்லாம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் பயங்கரவாதிகளாகக் கருதப்பட முடியும்.

பயங்கரவாதிகள் என்ற போர்வையில் வர்த்தகர்கள் சோதனையிடப்பட்டு முஸ்லிம்களும் வர்த்தகமும் குறியாக்கப்பட்டிருக்கின்றன. பல முஸ்லிம் வர்த்தகர்கள் சோதனைகளின் பின்னால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள். தமது பிள்ளைகள் பயங்கரவாதத்துக்குத் துணை போனார்கள் என்பதற்காக கோடீஸ்வரத் தந்தை இப்ராஹீம் கைது செய்யப்பட்டார்.

வெசாக் பண்டிகைக் காலத்திலும் போயா தினங்களிலும் சிங்களப் பெண்மணிகள் அணியும் வெண்ணிற ஆடைகளை விற்றார் என்ற குற்றத்துக்காக திஹாரிய வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இராணுவ உடைக்குச் சமமான 06 உடுப்புக்களை வைத்திருந்தார் என்பதற்காக பாதுக்க பகுதியில் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த உடைகளில் மிலிட்டரி என்ற பேட்ஜ் பதிக்கப்பட்டிருந்துள்ளது.

வெளிநாடொன்றில் கம்பியூட்டர் வியாபாரம் நடத்திவிட்டு நாடு திரும்பிய ஒருவர் தனது வீட்டில் ஒன்றரைக் கோடி ரூபாவை மறைத்து வைத்திருந்தார் என்பதற்காக வெலிகம பிரதேசத்தில் கைது செய்யப்பட்டார். இது போலப் பல வர்த்தகர்கள் தமது பணத்தை தம்வசம் வைத்திருந்ததற்காக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதில் எது பயங்கரவாதம் என்பது தெரியாமல் வர்த்தகர்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள்.

இதேபோல அரசாங்கத்துறையில் தொழில்புரிபவர்கள் சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். புத்தளம் மாவட்ட கல்விப் பணிப்பாளர் சர்வதேச உறவாடலை தனது முதுமாணிப் பட்டத்துக்காக பயின்று வருபவர். தனது லப்டொப்பில் சர்வதேசப் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய பதிவுகளை வைத்திருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார். சர்வதேச பயங்கரவாதத்துக்கு

அரச சேவையில் உள்ள முஸ்லிம் ஊழியர்களை பயங்கரவாதிகளாக மாட்டி வைப்பதற்கும் இந்தப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உதவ முடியும்.

தனியார் துறையில் இதனை விட அதிகமாகவே போட்டுக் கொடுப்புக்கள் நடக்க முடியும். தற்கொலைதாரி உடை அணியும் விதம், தாக்குதல் காலப்பிரிவில் வெளியாகிய உளவுப் பிரிவின் ஆவணங்கள் சிலவற்றின் புகைப்படம், குண்டு வெடித்த இடங்களின் புகைப்படம் போன்றவற்றை போனில் வைத்திருந்ததற்காக கொழும்பிலுள்ள ஹோட்டல் ஒன்றில் வரவேற்பாளராகப் பணி புரியும் ஒருவர் வாத்துவ பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். முஸ்லிம் என்ற காரணத்துக்காக அவர்களைத் தொழிலில் இருந்து நீக்குவதற்கு பல நிறுவனங்களின் முகாமைகளும் இந்த அஸ்திரத்தைப் பயன்படுத்த முடியும்.



அரசியல்வாதிகளும் இந்தப் பயங்கரவாத லேபலில் இருந்து விடுபடவில்லை. ஏற்கனவே பயங்கரவாதியாகச் சித்திரிப்பதற்கு சிங்கள ஊடகங்கள் முயற்சிக்கின்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தொடர்பிலும் அவரது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தொடர்பிலும் பல விடயங்கள் இந்தக் காலப் பிரிவில் எடுத்தோதப்பட்டன. அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் உட்பட 06 பேர் 10 டெட்டனேட்டர்களுடன் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் ஒருவர் விடத்தல்தீவு கிராமிய வங்கியின் [illegible]

ளூரில் கல்வி பயிலும் மாணவர்களும் விட்டு வைக்கப்படவில்லை. பதுளை விவசாயக் கல்லூரியில் பயிலும் சம்மாந்துறை, பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் கோட்டே ரஜமகா விகாரையை தமது மொபைலில் போட்டோ எடுத்த வேளையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 5 நாட்களுக்கு முன்னர் களப் பயிற்சிக்காக பிட்டகோட்டே ரஜமகா விகாரைக்கு அருகில் உள்ள இடமொன்றுக்கு வந்த வேளையிலேயே இவர்கள் புகைப்படம் எடுத்துள்ளனர். கைது செய்யப்படும் போது இவர்களது மொபைலில் ஐஎஸ் வீடியோக்களும் இருந்ததனால் இவர்கள் 72 மணித்தியாலங்கள் தடுத்து வைக்கப்பட்டனர்.

வீடுகளில் கத்திகளை வைத்திருந்தவர்களும் பயங்கரவாதிகளாகக் கருதப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர். தனது வீட்டுக்கும் பக்கத்தில் வசிக்கும் தனது தாய் வீட்டுக்கும் இடையில் தொடர்பு கொள்வதற்காக வோக்கி டோக்கி வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அதே போல ட்ரோன் கமரா, டெலஸ்கோப் போன்ற உபகரணங்களுடனும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சில வேளைகளில் பெரும்பான்மை மக்களுக்குச் சந்தேகம் வரக் காரணமாக இருக்கிறது என்ற காரணத்துக்காக சில இடங்கள் சோதனையிடப்பட்டு உரிமையாளர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். நிட்டம்புவ பிரதேசத்தில் பஸ்யால அட்வென்சர் கேம்ப் என்ற நிறுவனத்துக்குச் சொந்தமான தொழில்ரீதியான

பயிற்சி முகாமொன்று பிரதேசத்தைச் சேர்ந்த பெரும்பான்மை மக்கள் இதனை எதிர்த்துச் செய்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாக பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதே போல வேண்டுமென்றே சில இடங்களை பயங்கரவாதத் தளங்களாகப் போட்டுக் கொடுப்பதற்கு பெரும்பான்மை இனத்தவர் முயன்ற சந்தர்ப்பங்களும் பதியப்பட்டுள்ளன. வெல்லவாய, மஹவெல்லகம முஸ்லிம் வீடொன்றின் முன்னால் வெடிபொருட்களை வைக்க முற்பட்ட 06 பேர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்படுவர் என அஞ்சப்படுகிறது.

ஈஸ்டர் தாக்குதல்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ சமூகத்தின் கருதினால் மல்கம் ரஞ்சித், பேராயர் இல்லத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கும்போது, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்றை புதிதாகக் கொண்டுவருவதை விட இருக்கின்ற சட்டத்தைப் பலப்படுத்துவதே சிறந்தது என நான் நம்புகிறேன்.

இந்தச் சட்டத்தினூடாக மக்களின், தொழிற்சங்கவாதிகளின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. இதனால் இருக்கின்ற சட்டத்தில் குறைகள் இருந்தால் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வந்து இந்த விவகாரத்தைத் தொடருமாறு கேட்டுக் கொள்கிறேன் எனக் குறிப்பிட்டிருந்தார்.

புதிய சட்டம் என்று காலம் கடத்துவதை விட இருக்கின்ற சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் படியும் அவர் வேண்டுகோள் விடுத்தார். அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இதே நிலைப்பாட்டிலேயே இருக்கிறது. புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டினை கட்சியின் செயலாளர் நிஸாம் காரியப்பர் தெரிவிக்கும் போது, நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தைத் திருத்தம் செய்து அதனையே நடைமுறைப்படுத்துவது ஆரோக்கியமானதாகும். எனினும் இது தொடர்பில் கால தேவையைக் கருத்தில் கொண்டு தீர்மானம் எடுப்போம் எனத் தெரிவித்துள்ளார்.


ஆனாலும் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், பயங்கரவாதத் தடைச் சட்டம் இல்லாமல் இந்த நாட்டில் பயங்கரவாதத்தை ஒழிக்க முடியாது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் எல்லாம் பயங்கரவாதத்துக்கு ஆதரவானவர்கள் என்று தான் கருத வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாபா அபேவர்தன குறிப்பிடும் போது, நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதை விட பயங்கரவாத தடைச் சட்டத்தைக் கொண்டு வருவதிலேயே பிரதமரின் முக்கிய கவனம் இருக்கிறது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கட்சி நலனை முன்வைத்து அணுகுவதை விட அல்லது தமது அரசியல் இலாபங்களை முன்வைத்து அணுகுவதை விட நாட்டின் சகல இன மக்களதும் நன்மையைக் கருதி அணுகுவது தான் நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பதாக அமையும். அந்த வகையில் கட்சி விசுவாசத்தை விட மனித நலனில் அக்கறை கொள்பவர்களைத் தான் மக்கள் மேன்மையானவர்களாகக் கருத முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஜிம்னாஸ்டிக் வீரர் சஹிபுல் யமீன் உலக சாதனை!





• அனஸ் அப்பாஸ்

மன்னார் பெரிய கரிசலைச் சேர்ந்த K.M. யாஸீன், புதுக்குடியிருப்பு- கோணார் பண்ணையைச் சேர்ந்த Y. மஸ்கூரா தம்பதிகளின் இரண்டாவது பிள்ளையான M.Y. சஹிபுல் யமீன், புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டியில் பிறந்து வளர்ந்தவர்.

நாடு தழுவிய ரீதியில் சுயாதீன தொலைக்காட்சியில் (ITN) பலராலும் விரும்பிப் பார்க்கப்படும் Youth with Talent நிகழ்ச்சியின் இறுதிச் சுற்று 2019 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்றது. இதில் கடுமையாக பல சவால்களுடன் பல போட்டிகளை எதிர்கொண்ட 8 போட்டியாளர்கள் மட்டுமே தெரிவாகியிருந்த நிலையில், பார்வையாளர்களதும், நடுவர்களதும், மக்களினதும் பெரும் ஆதரவுடன் 18 வயதேயான சஹிபுல் யமீன் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்து சாதனை படைத்துள்ளார். தேசிய சாதனை மட்டுமன்றி இது உலக சாதனையாகவும் பதிவு செய்யப்படுகின்றது.

### சரித்திர வீரரின் வரலாறு

சஹிபுல் யமீனின் பெற்றோர் 1990 இல் வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு, வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தின், கற்பிட்டிப் பிரதேச சபைக்குட்பட்ட கண்டல் குடாவுக்கு இடம்பெயர்ந்தவர்கள். மன்னார் புதுக்குடியிருப்பு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம்-4 வரை கல்வி பயின்ற சஹிபுல், தரம் 5 முதல் 9 வரை கற்பிட்டி கண்டல்குடா முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வியைத் தொடர்ந்தார். பின்னர் தனது தாய்க்கு ஏற்பட்ட இருதய வலி பிரச்சினைகள் காரணமாக மீண்டும் மன்னார் புதுக்குடியிருப்புக்கே சென்றுள்ளனர். பின்னர் தரம்-10 இலிருந்து மன்னார் தாராபுரம் அல்-மினா பாடசாலையில் சேர்ந்து தற்போது அங்கு உயர் தரத்தில் கல்வி பயில்கின்றார்.

சிறு வயது முதலே ஜிம்னாஸ்டிக் (தசைவலுப் பயிற்சி) நிகழ்ச்சிகளை அதிக ஆர்வத்துடன் பார்வையிடுபவராக சஹிபுல் இருந்துள்ளார். தனது சுய உந்துதலால் தன்னாலும் அவற்றை செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் ஜிம்னாஸ்டிக் கலைகளை செய்து பார்த்தார். பாடசாலைகளில் இடம்பெறும் மேடை நிகழ்ச்சிகளில் இவர் தனது திறமையினை வெளிப்படுத்தினார். இதன் மூலம் சுமார் 40 வரையான சான்றிதழ்கள், பதக்கங்கள், கிண்ணங்கள் என்பவற்றை இவர் பெற்றுள்ளார்.

சஹிபுல் தனது ஆசிரியர் நௌபாத் அவர்களின் உற்சாகமூட்டலுடன் தொடர்ந்து பயணித்தபோதும், யோகாசன பயிற்சி வழங்கும் ஆசிரியர் ஒருவரால் புறக்கணிக்கப்பட்ட கசப்பான அனுபவம் ஒன்றும் தனக்கிருப்பதாக தெரிவிக்கின்றார். "சோதனைகள் என்பவை சாதனைகளின் ஏணி" என்ற அடிப்படையில் சளைக்காது தாராபுரம் அல்-மினா பாடசாலையில் தனது திறமையினை வெளிப்படுத்தியபோது, சக மாணவி ஒருவரின் தந்தையின் வேண்டுகோளின்பேரில் இலங்கை இளைஞர் மன்றத்துக்கு இவரது திறமை எடுத்துச் செல்லப்பட்டது. இவ் இளைஞர் மன்றத்தினரே 2016 ஆம் ஆண்டு Youth with Talent Test போட்டியில் இவரை பங்குகொள்ளச் செய்தனர். Youth with Talent (Generation-1) முதலாம் சுற்றில் தெரிவான இவருக்கு, இரண்டாம் சுற்றில் முன்னேற முடியாமல் போனமை இவருக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்த வருடம் Youth with Talent (Generation-2) நிகழ்ச்சியின்போது க.பொ.த (சா/தர) பரீட்சைக்குரிய காலப்பகுதியில் இருந்தமையால் இவரால் அதில் பங்குகொள்ள முடியாமல் போனது. என்றாலும் 2018 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய Youth with Talent (Generation-3) போட்டிக்கான மாகாண மட்டத் தெரிவு கிளிநொச்சியில் இடம்பெற்றது. இதில் 10 பேர் தெரிவு செய்யப்பட்டதில் சஹிபுல் யமீன் முதன்மையானவர். மேலும், ITN நிகழ்ச்சியின் முதலாம், இரண்டாம் சுற்றுக்களில் வெற்றி பெற்றதோடு இவ்விரு போட்டிகளிலும் மிகச் சிறந்த போட்டியாளராகவும் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

தனது திறனை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மேலும் வளர்த்துக் கொண்ட இவர், இணையத்தளம் மூலமாக பல சாதனையாளர்களின் சாதனைகளைத் தேடிப் பார்த்தார். இதன் மூலம் ஜிம்னாஸ்டிக் மூலமாக திபெத் நாட்டின் யோகி குடொக்ஸ் (Yogi Coudox) மேற்கொண்ட உலக சாதனையை முறியடிக்க இலங்கையரான இவர் உறுதி பூண்டார்.

இதற்கான பூரண ஒத்துழைப்பை தனது தந்தையிடமிருந்து பெற்றுக்கொண்டார். அத்துடன், குடும்பத்தார், இளைஞர்கள் ஆகியோர் இவருக்கு பெரிதும் ஆதரவும், ஊக்குவிப்பும் வழங்கியதில் Youth with Talent (Generation-3) அரை இறுதிப் போட்டியில் 20'' உயரம், 16'' அகலம், 15'' நீளம் கொண்ட கண்ணாடி பெட்டிக்குள் தனது உடலையும் புகுத்தி, சில நிமிடங்கள் இருந்து இப்போட்டியில் வித்தியாசமான செயற்பாட்டை மேற்கொண்டு இறுதிச் சுற்றுக்குத் தெரிவானார்.

### உலக சாதனை

06-04-2019 சனிக்கிழமையன்று இடம்பெற்ற Youth with Talent (Generation-3) இறுதிச் சுற்றில், சிறிய கண்ணாடிப் பெட்டி ஒன்றிற்குள் அவரது உடலை புகுத்தி, குளிர் நீர் நிரப்பப்பட்ட இன்னொரு கண்ணாடி பெட்டிக்குள் அவரது உடல் முழுவதும் புகுத்தப்பட்ட கண்ணாடி பெட்டி போடப்பட்டது. இந்த வரலாற்று சிறப்புமிக்க பொழுதில் அதே மேடையில் உலக சாதனையை மேற்கொண்ட திபெத் நாட்டவரின் (20.9'' உயரம், 16.9'' அகலம், 15.9'' நீளமான பெட்டிக்குள் 5 நிமிடங்கள் 1 செக்கன் நீருக்குள் இருந்த) சாதனையை முறியடித்து, 5 நிமிடம் 59 செக்கன்கள் நீருக்குள் இருந்து இந்த நிகழ்ச்சியின் வெற்றியாளராகவும், உலக சாதனையை மேற்கொண்டவராகவும் சாதனை படைத்திருக்கின்றார்.

இது சுலபமாக சாத்தியப்பட்டதொன்றல்ல. தோல்விகளுக்குப் பின்னரும் தொடராக மேற்கொண்ட முயற்சிகளின் விளைவு. 2016 ஆம் ஆண்டு போட்டிகளின்போது ஒரு தடவை இப்போட்டிக்கான மருத்துவ சான்றை எடுக்க சென்ற நேரம் வாகன விபத்தால் இவருக்கு ஏற்பட்ட காயங்கள், மன உளைச்சல்கள், அதை நிவர்த்திக்க அதன்போது மாமாமாரின் உதவிகள், போட்டிகளில் முன்னேறும்போது ஏற்பட்ட செலவுகளை ஈடுசெய்ய முடியாமல் தந்தையுடன் மேசன் வேலைக்கு சென்று, அதில் கிடைக்கும் பணத்தில் கடும் கஷ்டங்களுடன் இவர் முன்னேறிய அனுபவங்கள், தந்தை மேசன் வேலை செய்தும், முச்சக்கர வண்டி ஓடியும் தனக்காகப் பட்ட கஷ்டங்கள் என சொல்லில் அடக்க முடியாத பல விடயங்கள் தங்கியிருக்கின்றன.

மன்னார் கடற்கரை மணலில் உருண்டு தனது உடலை ஜிம்னாஸ்டிக்கிற்கு இசைவாக்கிய சஹிபுல், அதில் மட்டுமன்றி தேசிய மட்ட இஸ்லாமிய கீதப் போட்டியிலும் இரண்டாமிடம் வென்றுள்ளார். மின்குமிழ் பழுதுபார்த்தலில் திறன் கொண்டுள்ளார். கிரிக்கட், கரப்பந்து விளையாட்டுகளில் சிறந்து விளங்குகின்றார். சிறந்த ஓவியராக அறியப்படுகின்றார். வட மாகாணத்தின் முதல்தர ஜிம்னாஸ்டிக் வீரர் என்ற பெயரை ஏற்கனவே வென்றிருந்தார்.

முதற்கண் அல்லாஹ்வுக்கு நன்றி, அடுத்து, பெற்றோர், குடும்பத்தார், நண்பர்கள், தனவந்தர்கள், நலன்விரும்பிகள், SMS மூலம் போட்டியின்போது வாக்களித்தோர், தொடர்ந்து உற்சாகமூட்டி கௌரவிப்போர் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றார் சஹிபுல்.

வெற்றி வாகை சூடிய சஹிபுலுக்கு சுயாதீன தொலைக்காட்சி மூலமாக ஒரு கோடி பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட இருக்கின்றது. அதில் 70-80 இலட்சம் ரூபாய் பெறுமதியான கார் ஒன்று, மூனரை இலட்சம் ரூபாய் பெறுமதியான Apache மோட்டார் சைக்கிள் மற்றும் சில பரிசுகள் அடங்குகின்றன. இது தவிரவும் பணப் பரிசில்கள் பல இவரை தேடி வர இருப்பதாக இவரது தந்தை தெரிவிப்பதுடன், அவை கிடைத்தவுடன், கின்னஸ் புத்தகத்தில் தனது மகனின் பெயர் இடம் பெறத் தேவையான விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய இருப்பதாகவும், அவர்கள் வந்து மேற்கொள்ளும் பரீட்சிப்பில் 7 முதல் 8 நிமிடங்கள் வரை தண்ணீர் தொட்டிக்குள் ஒரு சிறிய பெட்டிக்குள் இருக்க தற்போது முழுமையாக சஹிபுல் தயார் என்றும் பூரிப்புடன் குறிப்பிடுகின்றார். வாழ்த்துக்கள் சஹிபுல்! நீங்களும் அவரை வாழ்த்த அழையுங்கள் 0711590851.

---

# முதலாளித்துவம் வீழ்ச்சியடைகிறது மாற்றீடாக இஸ்லாமியப் பொருளாதாரம்?

• முஹம்மத் யெஸில்ஹார்க் *

உலகின் பாரிய ஹெட்ஜ் நிதி (Hedge Fund) பாரியளவிலான முதலீட்டு நிதியான ப்ரிட்ஜ்வோட்டர் நிறுவனத்தின் கோடீஸ்வர முகாமையாளரான ரே டாலியோ, முதலாளித்துவம் வீழ்கிறது, புதியதொரு புரட்சி வருகிறது எனக் கூறி உலகை அதிர வைத்துள்ளார்.

உலகளவிலான ஏற்றத் தாழ்வுகளும் சமத்துவமின்மைகளும் நிலையற்றதாக இருக்கின்றன. வட்டியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரங்கள் இனியும் தேவையை நிறைவு செய்யப் போவதில்லை என்ற நிலைக்கு வந்திருக்கிறது. (பல நாடுகளில் வட்டி வீதம் சேமிப்பை ஊக்கப்படுத்தும் அளவுக்கு உயர்ந்ததாக இல்லை). இஸ்லாமியப் பொருளாதாரத்தில் உள்ளடங்கியுள்ள 2.5 வீத ஸகாத், மோசமான சமூக ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பதற்கான சிறந்த வழிகளைத் தரும் என்று நான் நம்புகின்றேன்.

மோசமான உயர் வட்டி வர்த்தகங்கள் தடைசெய்யப்பட்டதோடு, வட்டி அடிப்படையிலான சேமிப்புக்களைத் தவிர்ப்பதற்கான ஊக்கப்படுத்தல்களும் உலகப் பொருளாதாரத்துக்கு புத்துயிரூட்டியிருக்க முடியும். இவை இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கை மட்டுமல்ல. இது உலகளாவிய இப்ராஹிமிய நெறிமுறைகளைச் சார்ந்தது. பொது அறிவின் அடிப்படையிலும் இதுதான் உண்மையான சுதந்திரச் சந்தையை அனுபவிப்பதற்கான வழியாகவும் இருக்கிறது.

அரேபிய கலைச் சொற்களுக்கு அப்பாலிருந்து பார்த்தால், நவீன முதலாளித்துவம் சிந்திப்பது போல பொது அறிவுக்கு ஏற்றவகையிலும், வெளிப்படைத் தன்மையானதாகவும் சமத்துவக் கட்டமைப்பிலும் எமது பொருளாதாரத்தை ஸகாத் போன்ற கோட்பாடுகள் மாற்றியமைக்க முடியும்.

டாலியோவின் வார்த்தைகள் எவ்வளவு உறுதியான தொனியில் சொல்லப்பட்டிருக்கின்றது என்பது போலவே இன்றைய சூழலில் அது முக்கியமான தலைப்பாகவும் இருக்கிறது. அத்தோடு இதைச் சொல்லுகின்ற டாலியோ எப்பேர்ப்பட்டவர் என்பதிலும் இதன் முக்கியத்துவம் தங்கியிருக்கிறது.

டாலியோ உலகின் தலைசிறந்த ஹெட்ஜ் நிதி முகாமையாளர். அந்தவகையில் டாலியாவின் இந்தக் கூற்று கிறிஸ்தவம் வீழ்ச்சியடைகிறது என்று பாப்பாண்டவர் பிரகடனப்படுத்துவதற்கு ஒப்பானது என எனது நண்பர் ஒருவர் என்னிடம் எடுத்துச் சொன்னார்.

டாலியோவின் வார்த்தைகள் சில வேளை அதிர்ச்சியளிக்கலாம். ஏனெனில், இது உலக செல்வந்தர்களின் எழுதப்படாத விதியை மீறுவதாக உள்ளது. அதாவது நீ பாரிய அளவில் முதலாளித்துவத்திலிருந்து நன்மை அடைந்திருக்கும் நிலையில் நீ அதனை விமர்சிக்கக் கூடாது என்பதே அது. இந்த முறைமையில் இதன் மீதான எதிர்ப்பும் வெறுப்புமே ஏழைகள் அனுபவிக்க முடியுமான இன்பமாகும்.

பொதுவில் சுத்திகரிக்கும் தொழிலாளர்கள், முச்சக்கர வண்டிச் சாரதிகள் போன்றவர்களே ஏற்றத் தாழ்வு பற்றிப் பேசுகிறார்கள். அமெரிக்காவின் கனவுக்கேற்றவாறு செயற்படாததே தமது வெற்றிக்கான காரணம் எனப் பகிரங்கமாகச் சொல்லும் உலகின் செல்வந்தர்கள் மிகவும் குறைவாகவே இருக்கிறார்கள்.

செல்வந்தர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை என்ற விதி, கோடீஸ்வரர்களை பொறுப்பு தொடர்பிலான தமது உணர்வையும் ஏமாற்றத்தையும் தாராளத்தன்மை தொடர்பிலான தமது குற்ற உணர்வையும் பற்றிச் சிந்திக்கத் தூண்டியிருக்கிறது. அதாவது நாங்கள் பிரச்சினைகளின் மூலத்தை விட்டு விட்டு பிரச்சினைகளைப் பற்றியே அதிகமாகப் பேசிக்கொண்டிருக்கிறோம். பிரச்சினைகளின் மூலம் நாங்கள் நினைத்திருப்பதை விட ஆழமானது. இவை பற்றிய கருத்தாடல்கள் எமது பொருளாதாரத்தை மட்டுமன்றி எமது அரசியல் மற்றும் விழுமியங்கள் தொடர்பிலும் மீளாய்வு செய்வதை வேண்டி நிற்கின்றன.

எங்களில் பலரும் பாரிய ஏற்றத் தாழ்வுகள் அற்ற சமூக ஒழுங்கொன்றை எதிர் பார்க்கின்றோம். துரதிஷ்டவசமாக கசினோ முதலாளித்துவமும் கூடிய வட்டியிலான நுகர்வுப் பண்டங்களும் இந்த இடைவெளியை அதிகரிப்பதாகவே அமைந்திருக்கின்றன. பரஸ்பர அன்பும் அங்கீகாரமும் உள்ள சமூகமொன்றை உருவாக்குவதற்கு, செல்வந்தர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான நல்லிணக்கச் சூழலொன்றை நாங்கள் உருவாக்க வேண்டியிருக்கிறது. இதனை இஸ்லாத்தின் தூண்களில் ஒன்றான செல்வ வரி மூலமாக மட்டுமே சாதிக்க முடியும். எமது நடைமுறைப் பிரச்சினைகளுக்கானத் தீர்வாக இதனைக் கருத முடியும்.




இதனை நடைமுறைப்படுத்துவதற்கு [illegible] லாளித்துவத்தை மறுசீரமைக்க வேண்டும். இதற்கு இரண்டு விடயங்கள் செய்யப்பட வேண்டும். வரி அமைப்பும், வட்டி வீத முறையுமே அவை. உலக வரி அமைப்பு இனிமேலும் வேலைக்குதவாது என்ற கருத்துக்கு உலகம் இப்பொழுது வந்திருக்கிறது. வரி தவிர்ப்பு முறைகள், வரிச் சலுகைகள் என்பவற்றினால் பெரும் பெரும் செல்வந்தர்கள் எல்லாம் பெரிய அளவில் நன்மை அடைகிறார்கள். சிறந்த வரிமுறையொன்று இல்லாத சந்தர்ப்பத்தில், அநியாயமாக அப்பாவி மக்கள் மீது வரி சுமத்தும் நிலைக்கு அரசாங்கங்கள் ஆளாகின்றன. இப்படியான வரிகள் மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளை அதிகரிக்கச் செய்கின்றன.

வட்டி முறைமை பற்றிப் பேசுவது சர்ச்சைக்குரியது. பணத்தை வைத்திருப்பது அபாயங்களே இல்லாத உள்ளார்ந்த பெறுமானமாகப் பெரும்பாலானோர் நினைக்கிறார்கள். ஆனாலும் வளர்ந்த நாடுகளில் பரந்து வரும் பாதகமானதும் குறைவானதுமான வட்டி வீதங்கள் இனியும் சேமிப்பாளர்களைத் தூண்டும் வகையில் இல்லை.

இஸ்லாமியப் பொருளாதாரம் இதற்குச் சிறந்த தீர்வாக அமைய முடியும். 2.5 வீதம் அறவிடும் இஸ்லாமிய வரிமுறை எளிமையானது, தெளிவானது. உலகம் முழுவதுமான வருமானம் 10 டிரில்லியன்கள் எனக் கொண்டால், இதில் அறவிடப்படுகின்ற ஸகாத்தின் அளவு 250 பில்லியன்களாக அமையும். அதாவது ஒவ்வொரு வருடமும் இந்தளவு தொகை வறியவர்களுக்கும் அத்தியாவசியத் தேவைகளுக்குமாகச் சுழலப் போகிறது. அதே நேரம் ஏனைய வரிகள் குறைவடைய அல்லது இல்லாமல் போகும் நிலையும் தோன்றும். அறவிடப்படும் ஸகாத் வரிக்கு மேலதிகமாக வேறெந்த வரிகளையும் சுமத்தாமல் அது செல்வந்தர்களைப் பாதுகாக்கிறது. குறிப்பாக வாரிசுரிமைப் பங்குகளில் இருந்தும் கூட.

அடுத்த படியாக வட்டி முறையிலிருந்து மீளுவது படிப்படியாக நடைபெற வேண்டும். இது எமது தற்போதைய நிதி முறைகளைப் பற்றி மீள்வாசிப்புச் செய்வதை வேண்டி நிற்கின்றது. வட்டி தொடர்பிலான உலகளாவிய தடை ஒன்றினை திடீரெனக் கொண்டுவர முடியாது. ஆனால் முதலீட்டுக்கான ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு அரசாங்கங்கள் முன்வர வேண்டும். மோசமான அதிகரித்த வட்டிகளுக்கு அதிகமான சட்டங்களை விதித்து புதிய வியாபாரங்களை ஊக்குவிக்க வேண்டும்.

இங்கு சொல்லப்பட்ட வட்டி முறைப் பொருளாதாரத்திலிருந்து மீள்வதற்கான வழிமுறைகள் சிலவேளை கடினமானதாக இருக்கலாம். ஆனாலும் அரபுச் சொற்பதத்தை நீக்கிப் பார்த்தால், ஸகாத் என்ற கோட்பாடு எமது பொருளாதாரத்தை அறிவுக் கெட்டியதாகவும், வெளிப்படையானதாகவும் ஏற்றத் தாழ்வற்றதாகவும் மாற்றும்.

அறையில் இருக்கும் செல்வந்தன், ஆட்டம் மோசடியானது என்று சொன்னால், அது ஆட்டத்தின் ஒழுங்குகளை மாற்ற வேண்டியதற்கான தருணம் வந்துவிட்டதாக நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

* முஹம்மத் யெஸில்ஹார்க் ஒரு தனவந்தர். ஐக்கிய ராஜ்ஜியத்தின் தேசிய ஸகாத் சம்மேளனத்தின் தர்மகர்த்தாவாகச் செயற்படுபவர். Q2Q நிறுவனத்தின் ஸ்தாபகர்.

(மூலம் - யூரோநிவ்ஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்

## தீவிரவாதம், வன்முறை, பயங்கரவாதம்

# காரணங்களும் விளைவுகளும் தீர்வுகளும்




### பிற மதங்கள் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு

பிறமதங்கள் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாட்டைப் பின்வரும் நான்கு அடிப்படைகளில் நின்று விளங்கிக் கொள்ள முடியும்.

I. இஸ்லாம் மத பன்முகத்தன்மையை ஏற்று, மதச் சுதந்திரத்தை வழங்குகிறது: இஸ்லாம் ஒருபோதும் பிற மதங்களின் இருப்பை மறுக்கவில்லை. அதனால்தான் பிற மதத்தவர்களின் கடவுளர்களை ஏச வேண்டாம் என்றும், அநியாயங்களில் ஈடுபடாத பிற மதத்தவர்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அல்குர்ஆன் வழிகாட்டல் வழங்கியது.

அது போல் நபியவர்களும் பிற மதத்தவர்களின் வழிபாடுகளை மதித்து நடந்தார்கள். இவை பிற மதங்களின் இருப்பை அங்கீகரித்தமையைக் காட்டுகிறது. அது போல், ஒருவர் தான் சரியென நம்பும் மார்க்கத்தைக் கடைபிடிக்கும் சுதந்திரத்தையும் இஸ்லாம் மறுக்கவில்லை.

அல்குர்ஆன் கூறுகிறது "உங்களது இரட்சகனிடமிருந்து வந்துள்ள சத்தியத்தைச் சொல்லுங்கள். விரும்பியவர் அதனை ஏற்கட்டும் விரும்பியவர் மறுக்கட்டும்" என்கிறது. (கஹ்ப் - 29).

II. இஸ்லாம் மதங்களைப் பாதுகாப்பது வாஜிப் என்கின்றது: மதத்தினைப் பாதுகாத்தல் என்பது ஷரீஆவின் பிரதான மகாஸிதுகளில் ஒன்று. இதன் பொருள் உலகில் இஸ்லாத்தைப் பாதுகாத்தல் என்பது மாத்திரமல்ல, மாற்றமாக உலகில் பொதுவாக மார்க்க உணர்வையும் மார்க்க விழுமியங்களையும் பாதுகாப்பது இதில் பிரதானமானது. இதனைத்தான் அல்குர்ஆன் இவ்வாறு கூறியது:

"அல்லாஹ் மனிதர்களில் ஒரு பகுதியினரை மற்றொரு பகுதியினரைக் கொண்டு தடுக்காவிட்டால் உலகில் ஆலயங்களும் வணக்கஸ்தலங்களும் தொழுகைகளும் அழிக்கப்பட்டு விடும்" (ஹஜ்: 40).

இமாம் லைஸ் இப்னு ஸஃத் அவர்கள், இஸ்லாமிய நாட்டை அபிவிருத்தி செய்தல் என்பதினுள் கிறிஸ்தவ தேவாலயங்களை அமைத்தலும் உள்ளடங்குகிறது என்றார்கள்.

III. மத வேறுபாட்டின் காரணமாக ஒருவன் எதிரியாகக் கருதப்பட மாட்டான். மாற்றமாக அவன் எதிராகச் செயற்படுவதன் காரணமாகவே எதிரியாக மாறுவான். இஸ்லாம் பிற மதங்களை அங்கீகரிக்கச் சொல்கின்ற பொழுது, நிச்சயமாக அவற்றைப் பின்பற்றுபவர்களை எதிரியாகக் கொள்வதில்லை. மாற்றமாக இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் அநியாயமாகப் போர் தொடுக்கின்றவர்களையே இஸ்லாம் எதிரி என்கின்றது.

இதனைத்தான் அல்குர்ஆன்: "உங்களுக்கு எதிராகப் போர் தொடுப்பவர்களுடனேயே நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் போராடுங்கள், நீங்கள் அத்துமீறிவிட வேண்டாம். ஏனெனில் அல்லாஹ் அத்துமீறுபவர்களை விரும்புவதில்லை" (பகரா - 190) என்ற வார்த்தைகள் மூலம் விளங்கப்படுத்துகிறது.

IV. எதிரி என்பதும் நிரந்தரத் தன்மை கொண்டது அல்ல, அது நட்பாக மாறவும் முடியும்: அல்குர்ஆன் கூறுகிறது: "மிகச் சிறந்த முறையிலேயே ஒன்றைத் தடுத்து நிறுத்துங்கள். அப்பொழுது, உங்களுடன் எதிர்ப்பில் இருப்பவனும் உற்ற நட்பாக மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது" (புஸ்ஸிலத் - 34) என்கின்றது.

### தீவிரவாதம், வன்முறை, பயங்கரவாதம் என்பன தோன்றுவதற்கான காரணங்கள்

**இஸ்லாம் பற்றிய புரிதல் கோளாறுகள்:**

கலாநிதி அலி கரதாகி அவர்கள், தீவிரவாத வன்முறை சிந்தனைகள் தோன்றுவதற்குக் காரணமாக அமையும் புரிதல் கோளாறுகளை பின்வருமாறு வரையறை செய்கிறார்.

முதலாவது, சட்ட வசனங்களின் நோக்கங்கள் மற்றும் காரணங்களைப் பார்க்காது, புறக்கருத்தை மாத்திரம் எடுத்தல். இரண்டாவது, வரலாறு மற்றும் வெற்றி தோல்விக்கான பௌதீக, சமூகவியல் விதிகள் போன்றவை குறித்த போதிய தெளிவின்மை. மூன்றாவது, தெளிவான வசனங்களை விட்டுவிட்டு தெளிவற்ற குழப்பமான வசனங்களைப் பின்பற்றல். நான்காவது, முக்கியமான பெரும் விவகாரங்களை விட்டு விட்டு பகுதி விவகாரங்களில் கவனம் செலுத்துதல். ஐந்தாவது, மார்க்கத்தில் ஒதுங்கியிருத்தல் வட்டத்தை விசாலப்படுத்தி இணைந்திருத்தல் வட்டத்தை குறுக்கியமை. ஆறாவது, ஹராம் மற்றும் குப்ர் வட்டங்களை எல்லை மீறி விசாலப்படுத்தியமை போன்றவற்றை அடையாளப்படுத்தலாம்.

**உரிமை மீறல்களும் அநீதிகளும்:**

இன்றைய உலக ஒழுங்கிலும் சரி, தேச அரசுகளிலும் சரி, பாரியளவில் உரிமை மீறல்களும் அநீதிகளும் நடைபெறுகின்றன. இன்றைய உலகின் மிகப் பெரிய அநீதியாக பலஸ்தீன மக்களின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். இதே வகையான அநீதியும் உரிமை மீறல்களும் அறபு நாடுகளின் சிறைகளில் பல அரசியல் கைதிகளுக்கு எதிராகவும் நடைபெற்றமை குறித்து பல்வேறு ஆய்வுகள் வெளிவந்துள்ளன.

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் தாக்கப்பட்டதைக் காரணம் காட்டி அமெரிக்காவும் அதன் கூட்டுப் படைகளும் ஆப்கானிஸ்தானிலும் இராக்கிலும் இன்னும் உள்ள இஸ்லாமிய உலகிலும் நடாத்திவரும் அநீதிகளும் உரிமை மீறல்களும் மிகவும் வெளிப்படையானவை. இந்த அநீதிகளும் உரிமை மீறல்களும் பல்வகையானவை, கொலை, சித்திரவதை, கற்பழிப்பு, முடிவே தெரியாத சிறைவாசம், உடமைகள் அழிப்பு, பொருளாதார அடக்குமுறை, சிந்தனை அடக்குமுறை, ஊடக அடக்குமுறை எனப் பல வடிவங்களில் இது நடைபெறுகிறது. இந்த அநீதிகளின் முன்னால் மனிதன் வெகுண்டெழுவது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறுகிறது. இதன் விளைவாகவும் தீவிரவாதமும் வன்முறையும் தோற்றம் பெறுகின்றன.

**ஏகாதிபத்திய சக்திகளின் சதிமுயற்சிகள்:**

தீவிரவாத வன்முறைக் குழுக்களில் பல சமயங்களில் ஏகாதிபத்திய சக்திகள் தமது அரசியல் பொருளாதார நலன்களுக்காக திட்டமிட்டு உருவாக்கியவையும் காணப்படுகின்றன. அல்காஇதா, ஐஎஸ் போன்ற வன்முறைப் பயங்கரவாத இயக்கங்கள் குறித்து பல ஆய்வு நிறுவனங்கள் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளன. மாத்திரமன்றி அவற்றிலிருந்து தப்பியோடி வந்தவர்களின் வாக்கு மூலங்களும் இந்த உண்மையைச் சொல்லுகின்றன.

இவை தவிர இன்னும் பல காரணங்கள் காணப்படுகின்றன என்றிருப்பினும் இவை மூன்றும் மிகவும் பிரதானமானவை. தீவிரவாதம் வன்முறை மற்றும் பயங்கரவாதம் போன்றவற்றிற்கு இவை காரணமாக இனங்காணப்பட்டாலும், உண்மையில் இன்றைய உலக சூழ்நிலையைப் பார்க்கின்ற பொழுது, தீவிரவாதமும் வன்முறையும் பயங்கரவாதமும் தோற்றம் பெறுகின்றன என்பதை விடவும் அவை தோற்றுவிக்கப்படுகின்றன அல்லது வி[illegible]படுகின்றன என்பதுவே உண்மை.

புரிதல் கோளாறுகள் மாத்திரம் தனித்து ஒருபோதும் வன்முறையை ஏற்படுத்தி விடுவதில்லை. அங்கு ஒரு தீவிர பின்பற்றல் தோன்ற முடியும் அல்லது பிறவற்றை மதிக்காமை தோன்ற முடியும். ஆனால் அது வன்முறையாக மாற்றம் பெறுவது, அந்தப் புரிதல் கோளாறுடன் அநீதியும் உரிமை மீறலும் இணைகின்ற பொழுது, அல்லது ஏகாதிபத்திய சதியொன்று சம்பந்தப்படுகின்ற பொழுதுதான். தொடர்ந்து அதன் நீட்சியாக பயங்கரவாதம் எழுகிறது.

### தீவிரவாத வன்முறை நடவடிக்கைகளால் ஏற்படும் பாதிப்புக்கள்

கலாநிதி யூசுப் அல் கர்ளாவி அவர்கள் கூறுவது போல், தீவிரவாத வன்முறை நடவடிக்கைகளால் தனிமனிதனுக்கோ சமூகத்திற்கோ அல்லது நாட்டிற்கோ எந்த நன்மையும் விளைந்து விடப் போவதில்லை. அது தீமைகளையே அதிகம் கொண்டு வந்து விடுகின்றது. அத்தகைய தீமைகளையும் பாதகங்களையும் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

**1. தனிமனித இழப்புக்கள்:**

அதிகமான இளைஞர்களின் உயிர் இழப்புக்கள், அல்லது தமது வாழ்வின் பெரும் பகுதியை சிறைகளில் கழித்து எதிர்காலத்தைத் தொலைத்து விடுகின்றனர், அல்லது நிரந்தரமான உள உடல் பாதிப்புக்களுக்கு ஆளாகி விடுகின்றனர். ஒவ்வொருவரும் தமது கல்வியை, தொழிலை, குடும்பத்தை இழந்து விடுகின்றனர். அர்த்தமற்ற, இலக்கே இல்லாத ஒன்றுக்காக இவ்வாறு தமது வாழ்வை அழித்துக் கொள்ளும் இளைஞர்கள் சில சமயம் இதனைப் பெரும் தியாகம் என்று நினைக்கலாம். அவர்களது எண்ணம் தூய்மையாக இருக்கலாம், ஆனால் எண்ணம் தூய்மையாக இருப்பதால் மாத்திரம் தாம் மறுமையில் வெற்றி பெற்று விட முடியும் என்று ஒருவர் நினைத்தால் நிச்சயம் அது மிகப் பெரிய தவறாகும். எண்ணம் மட்டுமன்றி செயலும் சிறந்ததாக இருக்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடு.

**2. இஸ்லாம் குறித்து ஏற்படுத்தப்படும் தவறான விம்பம்:**

ஒரு தீவிரவாத வன்முறை நடவடிக்கையின் போது, சம்பந்தப்பட்ட நபரோ அல்லது அமைப்போ மாத்திரம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுவதில்லை. அவன் சார்ந்திருக்கும் சிந்தனைப் பின்புலமும் மதமும் கூட குற்றவாளியாக்கப்படுகிறது. இந்த உண்மையை இன்று உலகில் மிகவும் தெளிவாகக் கண்டு கொள்ளலாம். மாத்திரமன்றி ஒரு சிந்தனையை அல்லது மதத்தை குற்றப்படுத்த நினைக்கும் ஏகாதிபத்திய சக்திகள் அவர்கள் சார்பாக வன்முறைகளை அரங்கேற்றுவதையும் மறுப்பதற்கில்லை.

இன்று இஸ்லாம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளது. இஸ்லாம் ஒரு வன்முறை மார்க்கம், அது உலகத்திற்கு அபாயமானது என்றும் முஸ்லிம்கள் காட்டுமிராண்டிகள் என்றும் ஒரு விம்பம் உருவாக்கப்பட்டு விட்டது. இதற்கு சதிகள் மாத்திரமன்றி முஸ்லிம்களின் புரிதலற்ற தவறுகளும் ஒரு முக்கிய காரணம்.

**3. இஸ்லாம் மறுக்கப்படுவதற்கும் இஸ்லாமிய தஃவா எதிர்க்கப்படுவதற்கும் ஒரு நியாயத்தைக் கொடுத்து விடுகிறது:**

இன்று இஸ்லாமிய தஃவா அமைப்புகள் இந்தப் பாதிப்பை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. மறுக்கப்படுவதும் எதிர்க்கப்படுவதும் தீவிரவாதம் மட்டுமல்ல, நடுநிலை இஸ்லாமிய சிந்தனையும் மறுக்கப்படுகிறது; எதிர்க்கப்படுகிறது. இஸ்லாம் என்ற பெயரில் முன்வைக்கப்படும் எதுவும் சந்தேகக் கண்கொண்டுதான் பார்க்கப்படுகிறது. இதுதான் இஸ்லாத்தின் தீர்வு என்று பெருமையுடன் முன்வைக்கும் வாய்ப்பு இல்லாது போய் விட்டுள்ளது. அதனாலோ என்னவோ நாம் இஸ்லாம் என்ற சொல்லை வலிந்து தவிர்க்க முற்படுகிறோம்.

**4. சமூகத்திற்கும் நாட்டுக்கும் ஏற்படும் இழப்புக்கள்:**

நல்ல திறமையான மனித வளங்களை சமூகமும் நாடும் இழந்து விடுகின்றன. எங்களது முயற்சிகளும் நேரங்களும் சமூகத்தையும் நாட்டையும் கட்டிவளர்ப்பதை விட்டு விட்டு வேறு ஒன்றில் வீணாகக் கழிந்து விடுகின்றன. உள்ளுக்குள்ளேயே முரண்பட்டு பொது இலக்குகளையும் பொது எதிரியையும் மறந்து விடுகின்றோம்.

**5. இஸ்லாத்தின் இலக்குகளை அடைய முடியாமல் போதல்:**

இஸ்லாத்தின் இலக்குகள் நிலையான தன்மை கொண்டவை. அவை அறிவூட்டுதல் மற்றும் உருவாக்குதல் போன்ற கட்டி வளர்த்தல் அணுகுமுறையின் ஊடாகவே அடைந்து கொள்ள முடியுமானவை. பலப்பிரயோகம் அவசியமானதுதான். ஆனால் அது இலக்குகளை அடையும் பாதையில் உள்ள தடைகளை அகற்றுவதற்குத்தானேயன்றி பலப்பிரயோகத்தினால் கட்டியெழுப்ப முடியாது. இதனால்தான் ஜிஹாத் என்பது சமூக மாற்றத்திற்கான வழிமுறை அல்ல என்று இமாம்கள் குறிப்பிடுகின்றனர்.

### இஸ்லாத்தின் புனிதங்கள் அவமதிக்கப்படும் போது நடந்துகொள்ள வேண்டிய முறைகள்

இன்று இஸ்லாம் குற்றவாளியாக்கப்பட்டுள்ளதன் விளைவில் இஸ்லாத்தின் புனித அம்சங்கள் அவமதிக்கப்படும் ஒரு நிலை தோற்றம் பெற்றுள்ளது. அல்லாஹ்வும் நபியவர்களும் மோசமான சொற்களால் வசைபாடப்படுகின்றனர். பள்ளிவாயல்கள் அவமதிக்கப்படுகின்றன அல்லது சேதப்படுத்தப்படுகின்றன. முஸ்லிம்களது மத உணர்வு சீண்டப்படுகிறது. முஸ்லிம்கள் பற்றிய வெறுப்புணர்வு வளர்க்கப்படுகிறது. இது போன்ற ஒரு சூழ்நிலை எவ்வாறு எதிர்கொள்ளப்பட வேண்டும்? தீவிரமான அணுகுமுறைகளும் வன்முறைகளும் எதிர் தாக்குதல்களும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையுமா? இங்குதான் முஸ்லிம்கள் மிகவும் சமயோசிதமாக சிந்திக்க வேண்டியிருக்கிறது. அந்தவகையில் சில ஆலோசனைகளை அடுத்து நோக்குவோம்.

**1) பொதுமைப்படுத்தலைத் தவிர்த்தல்:**

அதாவது, குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் அல்லது மதத்தின் பிரதிநிதிகள் இஸ்லாத்தினை அவமதித்துள்ளனர் எனின், அதனை அந்த முழு சமூகத்தினதும் அல்லது மதத்தினதும் குற்றமாக மாற்றிவிடக் கூடாது. அந்தவகையில் அந்த முழு சமூகத்திற்கும் தீவிரவாத சாயம் பூசுவதோ அல்லது அந்த மதத்தினை மாறி நிந்தனைக்கு உட்படுத்துவதோ நேர்மையான அணுகுமுறையாக அமைய மாட்டாது. இதனால் புதிய எதிரிகளை உருவாக்கிக் கொள்வது மாத்திரமன்றி பல உதவியாளர்களையும் இழந்து விடுவோம்.

**2) சரணாகதி மனநிலையைத் தவிர்த்தல்:**

நாம் சிறுபான்மையினர் எனவே அடங்கித்தான் போக வேண்டியிருக்கிறது என்ற சரணாகதி மனோநிலைக்குக் கண்டிப்பாக சென்று விடக் கூடாது. இது நியாயமான எதிர்கொள்ளல்களை விட்டும் எம்மைத் திசை திருப்பிவிடும். இந்த நாட்டின் யாப்பின் பிரகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய மதச் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் மதநிந்தனைத் தவிர்ப்பையும் பெற்றுக் கொள்வதற்கு எந்த வகையிலும் பின்நிற்கக் கூடாது. இந்த நாட்டில் வாழும் ஒரு மதக் குழுவினர் என்ற முழுமையான கௌரவத்துடன் தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். ஏனெனில் அடிமைத்துவம் என்பது தீர்வு அல்ல.

**3) நிகழ்வுகளால் உந்தப்படுவதைத் தவிர்த்தல்:**

எமது மிகப் பெரிய பலவீனங்களில் ஒன்று இது. தனித்தனி நிகழ்வுகள் எம்மை இயக்குவிக்கும் நிலை மாறி, இது போன்ற ஒரு சூழ்நிலை ஏன் வந்தது? எங்கே தவறு நடந்திருக்கிறது? என்பதை ஆய்ந்தறிந்து தீர்வுகளுக்குச் செல்ல வேண்டும். நியாயமாக அடுத்த சமூகங்களின் மன உணர்வுகளைப் புரிந்துகொள்ள முற்படல் வேண்டும். சதி என்ற ஒற்றைக் காரணியில் மாத்திரம் நின்று தீர்வு தேட முற்படுவது பிரச்சினைக்குரிய தீர்வுகளைத் தர மாட்டாது. இதன் சமய, சமூக, பொருளாதார, அரசியல் காரணிகள் என்ன என்பது ஆராயப்படல் வேண்டும்.

**4) வேறுபட்ட வியூகங்கள் தேவை:**

நிச்சயமாக அனைத்து விவகாரங்களையும் ஒரே அணுகுமுறையில் கையாள முடியாது. சில விவகாரங்கள் கண்டுகொள்ளப்படாமல், பெரிதுபடுத்தப்படாமல் விடப்பட முடியும். மற்றும் சில விவகாரங்கள் தெளிவான பதில்கள் வழங்குவது கட்டாயமானதாக இருக்கும். சில விவகாரங்கள் பொறுமை காக்க வேண்டியிருக்கும் மற்றும் சில ஆறப்போடுவது அபாயமானதாக இருக்கும்.

**5) உரையாடல் என்பது சவால் விடுவதல்ல:**

சில விடயங்களுக்கு பொதுத்தளத்தில் விளக்கம் அளிக்கப்படல் வேண்டும். ஒன்றின் உண்மை நிலை என்ன? என்பது பற்றிய அறிவு பூர்வமான, தர்க்க ரீதியான உரையாடல் தேவை. ஆனால் ஒருபோதும் அது அடுத்தவர்களின் மத உணர்வை சீண்டிவிடுவதாக அமைந்து விடக் கூடாது. உரையாடலும் விளக்கமளித்தலும்தான் அவசியமேயன்றி சவால் விடுவது அல்ல. அதாவது யாருடைய மதக்கருத்து சத்தியமானது என்ற தேடலாக எமது முன்வைப்புகள் அமையுமாக இருப்பின் அது திறந்திருக்கும் மனதுகளையும் மூடச் செய்து விடும் செயலாக மாறிவிடும்.

**6) பதில் நிந்தனையும் வன்முறையும் தவிர்க்கப்படுதல்:**

மத நிந்தனை என்பது உள்ளத்துடன் சம்பந்தப்பட்ட ஒன்று, எதிர்தாக்குதல் நடாத்துவதற்கு இது ஒன்றும் யுத்தம் அல்ல. எனது மதத்தை அவமதித்தால் உனது மதத்தை நானும் அவமதிப்பேன் என்ற அணுகுமுறை இந்த விடயத்திற்குப் பொருந்தி வரமாட்டாது. அதுபோல மத விவகாரத்தில் வன்முறையைக் கையாள்வது பிரச்சினையை மென்மேலும் சிக்கலாக்கி விடுமேயன்றி பிரச்சினைக்குத் தீர்வைத் தர மாட்டாது.

அல்லாஹ் எமது செயல்களை அங்கீகரிப்பானாக.


**உசாத்துணைகள்**

1. அல் இர்ஹாப் பீ மீஸானில் இஸ்லாம், அல் உம்மதுல் வஸத் (6), அல் இத்திஹாதுல் ஆலமி லிஉலமாஇல் முஸ்லிமீன், 2015.
2. அல் கர்ளாவி யூசுப் அப்துல்லாஹ், பிக்ஹுல் ஜிஹாத் திராஸா முகாரனா லிஅஹ்காமிஹி வபல்ஸபதிஹி பீ ழௌஇல் குர்ஆன் வஸ்ஸுன்னா, கெய்ரோ, மக்தபது வஹ்பா, 2009.
3. அல் கர்ளாவி யூசுப் அப்துல்லாஹ், அஸ்ஸஹ்வா அல் இஸ்லாமிய்யா பைனல் ஜுஹூதி வத்ததர்ருப்,தௌஹா, ரிஆஸதுல் மஹாகிம் அஷ்ஷரஇய்யா வஷ்ஷுஊன் அத்தீனிய்யா, ஹி. 1402.
4. பஸ்யூனி மஹ்ரூஸ் முகம்மத் மஹ்ரூஸ், அத்தஅத்துதிய்யா அத்தீனிய்யா ரூஃயா நக்திய்யா, வலைத்தில் உள்ளது, https://www.taibahu.edu.sa/Pages/AR/DownloadCenter.aspx?SiteId=50a13fdf-fc2d-43ef-a1d5-50bd4a749c1b&FileId=4bb3f9f2-707a-40a2-a4a0-383686a414c1
5. அல் கதீப் முஃதஸ், அல்உன்புல் முஸ்தபாஹ், கெய்ரோ, தாருஷ் ஷுரூக், 2018.
6. https://www.who.int/violence_injury_prevention/violence/world_report/en/
7. https://www.globalresearch.ca/america-created-al-qaeda-and-the-isis-terror-group/5402881


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்களின் நிலைமாற்று வகிபாகம் - 03

ஓர் அதிபரின் வகிபாகம் நிர்வாகத்துடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. அவர் கல்வி நிருவாகியாகச் செயற்படும் அதேவேளை, கல்வியியலாளராகவும் சிறந்த போதகராகவும் பங்காற்ற வேண்டியுள்ளது. வகுப்பறைகளில் ஆசிரியர்கள் உரிய பாடத்திற்குச் சமூகம் தராதபட்சத்தில் குறிப்பிட்ட பாடத்தைக் கற்பிப்பவராக அதிபர் விளங்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு சமூகம் தர வேண்டிய அதிபர், அவரது அலுவலகத்தில் உட்கார்ந்து வெறும் காகித வேலைகளில் (Paper Work) மூழ்குபவராக இருக்கக் கூடாது, பாடசாலை வளாகத்தினுள், குறிப்பாக வகுப்பறைகளின் நிலைமை குறித்து ஒவ்வொரு நாளும் அறிந்திருக்க வேண்டும். ஓர் சிறந்த அதிபர் அதிகமான நேரத்தை அலுவலகத்திற்கு வெளியேதான் கழிப்பார் என்று கல்வியியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

பாடசாலை வளாகத்தை அடிக்கடி சுற்றிப் பார்வையிடும் அவர், ஆசிரியர் சமூகம் தராத வகுப்பறைகளுக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்து மேற்கொள்ள வேண்டிய பரிகாரங்களை முன்னெடுத்துச் செல்வார். ஒன்றில் அவர் குறிப்பிட்ட பாடத்தை கற்பிப்பவராக இருப்பார் அல்லது வேறு ஆசிரியர்களை அதற்கு தற்காலிகமாக நியமிப்பார்.




பாடசாலையின் கற்பித்தல் செயற்பாடுகளை உறுதி செய்வதில் அதிபரின் பங்கு முக்கியமானது. ஒரு பாடசாலையின் அடிப்படை இலக்கு மாணவர்களின் கற்றல் தேர்ச்சி மட்டத்தை அதிகபட்சம் உயர்த்திச் செல்வதாகும். அதற்கு அடுத்த நிலையிலேயே இணைக்கிருத்திய செயற்பாடுகளில் அதிபரின் கவனம் குவிய வேண்டும்.

இதனால்தான் ஒரு பாடசாலையின் கல்விப் பெறுபேறுகளுக்கு அதிபர்கள் வகை கூற வேண்டியவர்களாக உள்ளனர். தரம் ஐந்து புலமைப் பரிசில், சாதாரண தரம், உயர் தரம் ஆகிய பரீட்சைகளில் மாணவர்களின் பெறுபேறுகள் வீழ்ச்சியைக் காட்டுமாயின், அதற்கான முழுப் பொறுப்பையும் பாடசாலை அதிபர்களே ஏற்க வேண்டும். அப்பொறுப்பிலிருந்து அவரால் விலகிச் செல்ல முடியாது. அல்லது ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் குற்றம் சாட்டுவதோடு அவரது கடமை முடிந்து விடாது.

வினைத் திறன் மிக்க கற்றலையும் கற்பித்தலையும் உறுதி செய்யும் பொறுப்பு அதிபர்களுக்குரியது. இதனையே அதிபர்களின் கல்வி சார் பங்கு (Academic Role) என கல்வியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய பாடத் திட்டத்தில் மாணவர்களின் உயர் பெறுபேறுகளை உறுதி செய்வதாயின் அதிபர் இன்னொரு தரப்பினர் குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும். அவர்கள்தான் ஆசிரியர்கள். ஆசிரியர்களின் திறனை மேம்படுத்துவதற்கு அதிபர் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். ஆசிரியரின் தொழின்மை சார் திறன்கள் மாணவர் அடைவு மட்டத்தோடு நேரடியாகத் தொடர்புறுகின்றது. அதேவேளை, திறமையான ஆசிரியர்களுக்கு போதிய ஊக்குவிப்பையும் அதிபர்கள் வழங்க வேண்டும். ஏனெனில், திறமையும் ஊக்குவிப்பும் இணையும்போதே வினைத்திறன் அதிகரிக்கின்றது என்பதை நாம் அறிவோம்.

# நிர்ப்பந்த பீடிப்புக் கோளாறு

(Obssiesive Compulsive Disorder - OCD)






பயனற்ற அல்லது வீணான ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்யுமாறு நிர்ப்பந்திக்கும் ஒரு தூண்டலுக்கு உட்பட்டு, அதன் காரணமாக படிவார்ப்புச் செயல்களில் (Sterio Types) ஈடுபடுவது நிர்ப் பந்த பீடிப்புக் கோளாறு (Obssiesive Compulsive Disorder) எனப்படுகின்றது.

அதேபோல் ஒரு சில சொற்றொடர்களையோ வாக்கியங்களையோ மீண்டும் மீண்டும் காரணமற்று தடுக்க முடியாத நிர்ப்பந்தத்தால் கூறிக் கொண்டிருத்தலும் இவ்வகையைச் சேர்ந்தது. இதற்கு சில உதாரணங்களைக் கூறலாம். கை கழுவும் படிவார்ப்புச் செயல். ஒரு நாளில் தேவையற்று ஏறத்தாள எல்லா வேலைகளிலும் தனது கைகளை பலமுறை கழுவுவது. காரணம், தனது கையில் ஏதேனும் அழுக்கு அல்லது துர்நாற்றத்தைத் தரும் பொருள் பட்டுள்ளதாக எண்ணிக் கொண்டு அவ்வாறு செய்தல்.

தன் கைவசமுள்ள பண நோட்டுக்களின் இலக்கங்களை மிகக் கவனமாகக் குறித்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டுக்கடங்காத நிர்ப்பந்தத்தால் எப்பொழுதும் அச்செயலில் ஈடுபடல். ''அதெல்லாம் தவறானது என்று நான் உனக்குச் சொல்லுகின்றேன்'' போன்ற சொற்றொடர்களை காரணமின்றி மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருத்தல்.

இரவு வேலைகளில் வெளிக் கதவினை மூடி தாழ்பாள் இட்ட பின்னர் கட்டிலில் உறங்குவதற்குத் தயாராகும் வேளை மீளவும் கதவு மூடப்பட்டுள்ளதா என்பதை பலமுறை சரிபார்த்தல், தபால் பெட்டியினுள் கடிதத்தைத் திணித்து விட்டு 200 மீட்டர் அங்கிருந்து சென்றதன் பின்னர் மீளவும் தபாற் பெட்டியை நோக்கி வந்து கடிதம் பெட்டியின் அடிப்பாகத்தில் விழுந்துள்ளதா அல்லது இடையில் சிக்கி நிற்கின்றதா என்பதை கையைத் திணித்துப் பார்த்தல், இது போன்ற பல உதாரணங்களைக் கூறலாம்.

தனது செயல் மதியீனத்தால் நடக்கின்றது என்பதை நன்கு அறிந்துகொண்ட போதிலும், தனக்குள்ளே இருந்து வரும் உந்துதலை சிறிதும் கட்டுப்படுத்த முடியாத நிர்ப்பந்தத்தால் இத்தகைய படிவார்ப்புச் செயல்களில் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

# மு:மின்களின் தாய்

## அன்னை ஆயிஷா (றழி) அவர்களின் வாழ்வியல் – 08

### முஃமின்களின் தாய் ஆயிஷா (றழி) திருமணம் முடித்த தினம்

ரஸூல் (ஸல்) அவர்கள் ஆயிஷா (றழி)யை திருமணம் முடித்த தினத்தைப் பற்றி கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

அல்லாமா பத்ருத்தீன் ஐனி குறிப்பிடுகிறார், ரஸூல் (ஸல்) அவர்கள் மக்காவுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு 02 வருடங்களுக்கு முன்னர் ஆயிஷா (றழி)யை திருமணம் முடித்தார்.

ஹிஜ்ரத் செய்வதற்கு 03 வருடங்களுக்கு முன்னர் திருமணம் முடித்ததாகவும் சொல்லப்படுகிறது.

ஹிஜ்ரத் செய்வதற்கு ஒன்றரை வருடங்களுக்கு முன் அல்லது ஆயிஷா (றழி)க்கு 6 வயதாக இருக்கும்போது ஷவ்வால் மாதம் திருமணம் முடித்ததாகவும் கூறப்படுகிறது.

ஆயிஷா (றழி)க்கு 7 வயதாக இருந்தபோது திருமணம் முடித்த தாகவும் ஹிஜ்ரி 02 பத்ர் போராட்டத்தின் பின் ஷவ்வால் மாதம் நபி (ஸல்) அவர்கள் வீடு புகுந்ததாகவும் சொல்லப் படுகிறது.

ரஸூல் (ஸல்) அவர்கள் ஆயிஷா (றழி)யை கதீஜா (றழி) மரணித்து 03 வருடங்களின் பின் திருமணம் முடித்ததாக சில அறிவிப்புகளில் காணலாம்.

கதீஜா (றழி) மரணித்த அதே வருடத்திலே ஆயிஷா (றழி)யை திருமணம் முடித்தார் என வரலாற்று ஆசிரியர்கள் குறிப் பிடுவர்.

அயிஷா (றழி)யின் திருமணம் நிகழ்ந்த நாளை கதீஜா (றழி)யின் மரண நாளை வைத்து வரையறுத்துக் கொள்ள முடியுமாக இருந்திருக்கும். ஆனால், கதீஜா (றழி) மரணித்த தினத்திலும் கூட அறிஞர்களுக்கிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றது.

1. கதீஜா (றழி) ஹிஜ்ரத் நிகழ 05 வருடங்களுக்கு முன்னர் வபாத்தானார்.
2. கதீஜா (றழி) ஹிஜ்ரத் நிகழ 04 வருடங்களுக்கு முன்னர் வபாத்தானார்.
3. கதீஜா (றழி) ஹிஜ்ரத் நிகழ 03 வருடங்களுக்கு முன்னர் வபாத்தானார்.

ஆயிஷா (றழி) கூட இரண்டு வித்தியாசமான அறிவிப்புகளைச் செய்துள்ளார். அவை புஹாரியிலும் முஸ்னத் அஹ்மதிலும் இடம்பெற்றுள்ளன.

ஒரு அறிவிப்பு

"கதீஜா (றழி)யைப் பற்றி ரஸூல் (ஸல்) அவர்கள் அதிகமாக ஞாபகப்படுத்தியதன் காரணமாக, அவர் மீது ரோஷப் பட்டது போன்று வேறு எந்தப் பெண் மீதும் ரோஷப்பட்டது கிடையாது. கதீஜா (றழி) வபாத்தாகி 03 வருடங்களின் பின்னர் நபி (ஸல்) அவர்கள் என்னைத் திருமணம் முடித்தார்கள்.

மற்ற அறிவிப்பு

"நபி (ஸல்) அவர்கள் கதீஜா நாயகி வபாத்தாகிய அதே வருடத் தில் ஆயிஷா (றழி)யைத் திருமணம் முடித்தார்கள்.

இவ்விரண்டு ஹதீஸ்களையும் சேர்த்துப் பார்க்கின்றபோது ஒரு விடயம் தெளிவாகுவதாக இமாம் நவவி பின்வருமாறு குறிப்பிடு கிறார்.

முதலாவது அறிவிப்பு நபி (ஸல்) அவர்கள் ஆயிஷா (றழி)யுடன் வீடு புகுந்ததையும், இரண்டாவது அறிவிப்பு திருமண உடன்படிக்கை செய்ததையும் குறிப்பிடுகின்றது. (தொடரும்)

# திருமண வயது நிர்ணயம்

திருமண வயதை நிர்ணயம் செய்ய வேண்டியதில்லை என்போரும் நிர்ணயம் செய்ய வேண்டும் என்போரும் ஒரே வகையான வசனங்களையே ஆதாரமாகக் கொள்கின்றனர். அநாதைகளின் சொத்துப் பராமரிப்பு தொடர்பாக அத்தியாயம் 4 இன் மூன்றாம் வசனத்தையும் அதே அத்தியாயத்தில் 6 ஆம் வசனத்தையும் தமது பிரதான ஆதாரமாகக் கொள்கின்றனர். இவை அநாதைகளின் சொத்துப் பராமரிப்பு தொடர்பான வசனங்களே அன்றி, நேரடியாகத் திருமண வயது குறித்துப் பேசும் வசனங்கள் அல்ல. பல்வேறு கருத்துக்களுக்கு இடம்பாடான வசனங்களாகவே இவை அமைந்துள்ளன.

சட்டவாக்கத்தில் மேற்கோள் காட்டப்படும் வசனங்கள் நம்பகத் தன்மை உடையதாகவும் அதே வேளை, ஒற்றைக் கருத்தை மாத்திரம் திட்டவட்டமாக வெளிப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். பல கருத்துக்கு இடம்பாடான வசனமொன்றை (முன்னிய்யதுத் தலாலா) அடிப்படையாகக் கொண்டு திட்டவட்டமான சட்ட நிலைப்பாடொன்றை எடுக்க முடியாது.

இந்த வகையில் திருமண வயதெல்லை நிர்ணயம் கருத்து வேறுபாடுகளுக்கு உட்பட்ட ஒரு விவகாரமாகும். காலம், இடம், சூழ்நிலை, சமூக நலன், ஷரீஆவின் ஒட்டுமொத்தக் குறிக்கோள்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இவ்விவகாரம் ஆராயப்பட வேண்டும்.

முதலில் திருமணம் குறித்து இஸ்லாமிய ஷரீஆவின் பெறுமானத்தையும் தாற்பரியத்தையும் புரிந்துகொள்வது அவசியம். இஸ்லாமிய



அறிஞர்கள் குடும்ப வாழ்வை சுருங்கிய இஸ்லாமிய அரசாங்கம் என்பர். அதற்கு தலைமைத்துவமும் கலந்தாலோசனை எனப்படும் ஷூறா அமைப்பும் உள்ளது. சொத்துக்களைப் பகிர்தல் தொடர்பான பிரத்தியேகமான சட்டங்களை அல்குர்ஆன் வரையறை செய்துள்ளது. யார் திருமணம் செய்கிறாரோ அவர் மார்க்கத்தின் அரைவாசியைப் பூரணப்படுத்துகின்றார் என இறைதூதர் (ஸல்) அவர்கள் [illegible]

குடும்ப வாழ்க்கைக்கு என்றே கணவனுக்கும் மனைவிக்கும் கடமைகளும் உரிமைகளும் உள்ளன. பொறுப்புக்கள் நிறைந்ததே குடும்ப வாழ்வாகும். அவ்வாறாயின், அத்தகைய பொறுப் புக்களைச் சுமக்கின்ற கணவனும் மனைவியும் சில முதிர்ச்சிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். உடல் முதிர்ச்சியே அதற்கான தகுதி என்று கருத முடியாது. உடல் முதிர்ச்சிக்கு அப்பால் உள முதிர்ச்சியும் அறிவு முதிர்ச்சியும் சமூக முதிர்ச்சியும் பொறுப்புக்களைச் சுமக்கின்ற பக்குவமும் கணவனுக்கும் மனைவிக்கும் அவசியம். இவ்விவகாரங்க ளோடு ஒருவரது வயது தொடர்புறுகின்றது.

இன்னொரு வகையில், திருமணம் ஒரு சமூக ஒப்பந்தமாகும். ஒப்பந்தங்களில் இரு தரப்பினரதும் விருப்பம் இன்றியமையாதது. சாதாரண கொடுக் கல்-வாங்கல்களின் போதே இரு தரப்பு விருப்பம் அவசியம் என குர்ஆன் வலியுறுத்துகின்றது. அவ்வாறாயின், சமூக உருவாக்கத்தின் அடிப்படையாக உள்ள திருமணத்தின் இரு தரப்பு விருப்பும் எவ்வளவு அவசியமானது [illegible] புரிந்துகொள்ளலாம்.

குடும்ப வாழ்வின் இலக்குகளை அடைவதற்கு ஏற்ற வகையில் வயது நிர்ணயிக்கப்பட வேண்டும். இஸ்லாம் பொதுவாக ஆணுக்கோ பெண்ணுக்கோ திருமண வயதொன்றை நிர்ணயம் செய்யவில்லை. இளைஞர்களும் யுவதிகளும் வாழும் சூழலும் தேவையும் சமூக, கலாசார அமைப்புமே அதனைத் தீர்மானிக்க வேண்டும். அந்த வகையில் உலகின் பல நாடுகளில் திருமண வயதை அரசாங்கங்கள் தீர்மானித்துள்ளன. 137 நாடுகளில் திருமண வயது 18 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அறபு முஸ்லிம் நாடுகளைப் பொறுத்தவரையில் வயதை நிர்ணயம் செய்துள்ள நாடுகளே பெரும்பான்மையாக உள்ளன. அதேவேளை, வயதை நிர்ணயம் செய்யாத அறபு நாடுகள் பல மத்திய கிழக்கில் உள்ளன. சவூதி அறேபியா, கட்டார், குவைத், ஓமான் போன்ற நாடுகளில் திருமண வயது நிர்ணயிக்கப்படவில்லை. 12, 13 வயதுகளிலும் இக்குறிப்பிட்ட நாடுகளில் பெண்கள் திருமணம் செய்கின்றனர். ஆயினும், இளவயதுத் திருமணங்கள் விவகாரத்தில் முடிவடைவதாக சமீபகால அறிக்கைகள் காட்டுகின்றன. இதனால் திருமண வயதை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை இந்நாடுகளில் வலுப்பெற்று வருகின்றது.

குறிப்பாக, மத்திய கிழக்கு நாடுகளில் விவாகரத்து இடம்பெறுவதற்கான பிரதான காரணங்களில் ஒன்றாக இளவயதுத் திருமணம் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. இதனால் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்று இந்நாடுகளில் உள்ள மார்க்க அறிஞர்கள் அரசாங்கங்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர் தாக்குதல்.. (03 ஆம் பக்கத் தொடர்)

மேலும் இந்தச் சம்பவம் பற்றி தனக்கு முன் கூட்டியே தெரியும் என்றும் அதனால் தான் எந்த ஆராதனைகளிலும் அன்றைய தினம் பங்கேற்கவில்லை என்றும் கூறியுள்ள அமைச்சர் ஹறின் பெர்ணான்டோ உள்ளக தகவல் பிரதி ஒன்றை டுவிட் செய்தும் உள்ளார். இது மிக மிகக் கேவலமானதும் வெட்கக் கேடானதும் ஆகும்.

'சில புலனாய்வு பிரிவினருக்கு இது பற்றித் தெரிந்திருக்கின்றது. ஆனால் நடவடிக்கை எடுப்பதில் அசமந்தமும் தாமதமும் காட்டப்பட்டுள்ளது. எனது தந்தையும் ஒரு புலனாய்வு அதிகாரி மூலம் தான் அதை தெரிந்து கொண்டார். இவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் அன்றிரவு பதுளையில் இருந்தேன்' என்று ஹரீண் பெர்ணான்டோ டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 11 இல் ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒப்பமிட்டு அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் உட்பட பாதுகாப்பு பிரிவின் பல அதிகாரிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு, வெளிநாட்டுத் தூதுவர்களுக்கான பாதுகாப்புப் பிரிவு என பல பிரிவுகளுக்கு இது அனுப்பப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்ட ஒரு தாக்குதல் தொடர்பாக என்ற தலைப்பில் அது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தேசிய தௌஹீத் ஜமாஅத்தின் தலைவர் மொஹமட் சஹ்ரான் என்பவர் இலங்கையில் பிரபலமான கிறிஸ்தவ ஆலயங்களையும் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தையும் இலக்கு வைத்து தற்கொலைத் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளார் என்று வெளிநாட்டு உளவுச் சேவை ஒன்றின் மூலம் உள்நாட்டு உளவுப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் கவனம் செலுத்துமாறு அவர் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு பொறுப்பானவர்களைக் கேட்டுள்ளார். சம்பந்தப்பட்ட இடங்களுக்கும் வெளிநாட்டுத் தூதுவர்களுக்குமான பாதுகாப்பை பலப்படுத்துமாறும் அவர் அதில் கேட்டுள்ளார்.

தாக்குதல் ஒன்று நடக்கவுள்ளதாக பல வெளிநாட்டு உளவுச் சேவைகளில் இருந்து தகவல்கள் கிடைத்ததாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் தெரிவித்துள்ளார்.

இவ்வளவு தகவல்கள் கிடைத்தும் அவை அலட்சியம் செய்யப்பட்டுள்ளன. இதனால் அப்பாவி உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. இத்தனையும் நடந்து முடிந்த பிறகு எதற்கு ஒரு விசாரணைக் குழு என்பது தான் அடுத்த கேள்வி.

எனவே இந்தப் பேரிடி எதிர்ப்பார்க்காத ஒன்றல்ல. எட்டு மாதங்களுக்கு முன்னாள் கடந்த ஆண்டு அக்டோபரில் நான் எழுதிய ஒரு கட்டுரையில் இன நல்லுறவின் மீது ஒரு இடி விழும் அச்சுறுத்தல் காணப்படுவதாகக் குறிப்பிட்டேன். அந்தப் பேரிடி தான் இப்போது விழுந்துள்ளது என நான் நினைக்கின்றேன்.

இஸ்ரேலுடனான இலங்கை அரசின் துரிதமாக வளர்ச்சி கண்டு வரும் உறவுகள் மிகவும் கவனம் செலுத்தப்பட வேண்டியவை. இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் இஸ்ரேல் கொண்டுள்ள சமய ரீதியான மற்றும் பரம்பரை ரீதியான குரோதம் காரணமாக அவர்கள் இலங்கை முஸ்லிம்கள் ஏனைய இனங்களுடன் கொண்டுள்ள நல்லுறவுக்கு பங்கம் விளைவிக்கக் கூடும் என்ற அச்சம் எப்போதுமே முஸ்லிம்கள் மத்தியில் இருந்து வந்துள்ளது. உலகளாவிய ரீதியில் அவர்களின் செயற்பாடுகளும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பா தலைமையில் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில் மத்திய கிழக்கின்



முஸ்லிம் நாடுகள் மீது நடத்தப்படும் அநியாயங்களில் அவர்கள் அளித்து வரும் அபரிமிதமான பங்களிப்பும் தான் இந்த அச்சத்துக்கு பிரதான காரணமாகும். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பிஜேபி ஆர்எஸ்எஸ் அரசும் இஸ்ரேலும் இன்று பின்னிப் பிணைந்து இந்தப் பிராந்தியத்திலும் இந்தியாவிலும் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதில் பிரதான பங்காற்றி வருகின்றன.

கடந்த 30 வருடங்களாக ஐரோப்பிய பிராந்தியத்தில் நடத்தப்பட்டு வரும் எல்லாத் தாக்குதல்களின் பின்னணியிலும் இஸ்ரேல் உள்ளது என்பது அறிவுபூர்வமாக சிந்திப்பவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். ஆனால் அமெரிக்க இஸ்ரேல் ஐரோப்பிய யுத்த இயந்திரத்தின் பங்காளியான மேலைத்தேய ஊடகங்கள் இவற்றை எல்லாம் கண்டும் காணாமல் மறைத்து வருகின்றன. அது மட்டும் அன்றி அந்தப் பழிகளை அவை முஸ்லிம்கள் மீதும் போட்டு வருகின்றன. அவ்வாறு பழி போடப்பட்டு சில மாதங்களில் அது இஸ்ரேலிய மொஸாட்டின் வேலை என்பதும் நிரூபணமாகின்றது. அதேபோல் இந்தியா சுதந்திரம் அடைந்தது முதல் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களுக்கு RSS பொறுப்பாக இருந்து வருகின்றது. முஸ்லிம் கிராமங்கள் மற்றும் நகரங்கள் பல அழிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக் கணக்கான முஸ்லிம் பெண்களின் கற்பு சூறையாடப்பட்டுள்ளது.

இலங்கையை ஸ்திரமற்ற ஒரு நிலைக்கு கொண்டு வருவதால் அமெரிக்க ஐரோப்பிய ஆதரவுடன் செயற்படும் இஸ்ரேல் இந்திய கூட்டணிக்கு நிறைய நன்மைகள் உள்ளன. இலங்கை சீனாவுடன் நெருங்கிய உறவுகளை ஸ்தாபித்துள்ளது. இந்து சமுத்திர பிராந்தியத்தில் அமெரிக்க - சீனா போட்டி வலுவடைந்துள்ள நிலையில் சீனாவுடன் நெருங்கிய உறவுகளை ஸ்தாபித்துள்ள இலங்கையை ஸ்திரமற்ற நிலைக்கு கொண்டுவருவதால் இவர்களுக்கு பெரும் நன்மைகள் உள்ளன. மேலும் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்ற நொடி முதல்; முஸ்லிம் சமூகம் தான் இந்தக் குற்றத்தைப் புரிந்தது என்று மேலைத்தேய ஊடகங்கள் தமது பாரம் பரிய வசை பாடலைத் தொடங்கி விட்டதையும் இங்கு அவதானிக்க வேண்டி உள்ளது.

இலங்கையில் உள்ள ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகமும் இந்தக் குற்றங்களை வன்மையாக கண்டித்துள்ளன. தேசிய தௌஹீத் ஜமாஅத் தான் இதை செய்தது என்பது உண்மை என்றால் அது சரி என்று நியாயப்படுத்தும் நிலைப்பாட்டில் இலங்கை முஸ்லிம்கள் எவரும் இல்லை. முஸ்லிம் சமூகம் பொதுவான ஒரு அறிக்கையை விடுத்துள்ளது. அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது

இலங்கையில் தவறான முறையில் வழிநடத்தப்பட்ட ஒரு பிரிவு முஸ்லிம்களால் இந்தக் காரியம் நடத்தப்பட்டுள்ளமை எமக்கு வேதனையையும் திகைப்பையும் ஏற்படுத்தி உள்ளது. இந்த தவறாக வழிநடத்தப்பட்ட இலங்கை முஸ்லிம்கள் சிலரின் செயற்பாடு எந்த வகையிலும் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் நம்பிக்கைகளைப் பிரதி பலிப்பது அல்ல. இலங்கை முஸ்லிம் சமூகத்தின் அக்கறை மற்றும் எதிர்ப்பார்ப்பு என்பனவற்றையும் இது எந்த வகையிலும் பிரதி பலிக்கவில்லை. இலங்கை முஸ்லிம் சமூகம் இலங்கையின் பிரதான சமூகப் பிரிவோடு இரண்டறக் கலந்தவர்களாகவே பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். இலங்கை தாய் திருநாட்டுக்கு அவர்களின் பங்களிப்புக்கள் மகத்தானவை. நாம் எம்மை உண்மையான இலங்கையர்களாகவே அடையாளப்படுத்தி உள்ளோம். அவ்வாறு எம்மை அடையாளப்படுத்திக் கொள்வதில் நாம் பெருமை அடைகின்றோம்.

இந்தக் கொடிய சம்பவம் எமது பல்லினப் பெறுமானங்களை பேணுவதற்காக அர்ப்பணத்தோடு பாடுபட்டு வரும் சகலரதும் முயற்சிகளுக்கும் இன ரீதியான மற்றும் சமய ரீதியான சகல வன்முறைகளுக்கும் முடிவு கட்ட வேண்டும் என்ற ரீதியில் எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளுக்கும் விடுக்கப்பட்டுள்ள சவாலாகும். உண்மையான இஸ்லாமிய விழுமியங்களான சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் முழு முஸ்லிம் சமூகத்துக்கும் உணர வைப்பதிலும் நாம் அதே அளவு உறுதியும் பூண்டுள்ளோம். அந்த வகையில் இந்த மனிதாபிமானமற்ற வெறுக்கத்தக்க பயங்கரவாத செயலை மிகக் கடுமையான வார்த்தைகளால் நாம் கண்டிக்கின்றோம்.

இலங்கையர்கள் அனைவரும் மிகவும் பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் சட்டத்தை தமது கரங்களில் எடுத்துக் கொள்வதை அவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் நாம் தயவோடு வேண்டிக் கொள்கிறோம். இது நாம் ஒற்றுமைப்பட்டு இருக்க வேண்டிய நேரம். அதில் நாம் தவறினால் அது பயங்கரவாதிகளுக்கு சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இந்தக் குற்றச் செயல்கள் தொடர்பாக தமது ஆற்றல்கள் அனைத்தையும் பிரயோகித்து மிகத் துரிதமாக விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நாம் கேட்டுக் கொள்கிறோம்.

## தோற்றுப் போன... (03 ஆம் பக்கத் தொடர்)

''வடக்கிலும் மத்திய ஆசியாவிலும் அமெரிக்காவை விஞ்சும் விதத்தில் ரஷ்யா பெற்றிருந்த செல்வாக்கை உடைப்பதற்கு ஏற்கனவே கம்யூனிஸத்துக்கு எதிராகவிருந்த தாலிபான்களை அமெரிக்கா பாவித்தது. இவர்களைப் பலப்படுத்துவதற்கென சீஐஏ அல்லது அமெரிக்கா பாகிஸ்தானிலும் ஆப்கானிஸ்தானிலும் தீவிர சிந்தனையுடைய மத்ரஸாக்களை ஸ்தாபிப்பதற்கு உதவி செய்தது. சோவியத் படைகளுக்கு எதிராகப் போராடுவது ஜிஹாத் என்ற உணர்வையும் கொடுத்து அவர்களுக்கு ஆயுதங்களையும் சீஐஏ வழங்கியது'' என தாலிபான்: ஆப்கானிஸ்தானில் யுத்தமும் மதமும் என்ற நூலில் பீட்டர் மார்ஸ்டன் குறிப்பிட்டுள்ளார். பயங்கரவாதத்துக்கெதிரான அமெரிக்க யுத்தம் எனும் நூலில் மைகல் சொஸ்டொவ்ஸ்கியும் இதே கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

சிரியாவிலும் தனது செயற்பாடுகளைத் தொடர்வதற்காக அங்குள்ள சிறிய குழுவொன்றினைப் பயன்படுத்தியே அமெரிக்கா மூக்கை நுழைத்தது. சிரியாவில் இயங்கிய புர்ஸான் அல் ஹக் என்ற அல்கைதாவுடன் தொடர்பான குழுவுக்கான சம்பளம், ஆயுதம், மிஸைல்களை இயக்குவதற்கான தளம் எனப் பல உதவிகளை சீஐஏ வழங்கியது என ஹவாய் இரண்டாவது மாவட்டத்துக்கான அமெரிக்கப் பிரதிநிதி துளசி கபேர்ட் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையிலும் இது போன்றதொரு நிலைமையே ஏற்பட்டிருக்க முடியும். இலங்கையில் சர்வதேச சக்திகளின் செயற்பாடுகள் பற்றி பல தடவைகள் பேசப்பட்டதுண்டு. பொதுபலசேனாவின் அட்டகாசங்கள் முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட்டதைப் பற்றி தேர்தல் தோல்விக்குப் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ அளித்த விளக்கங்களில், இது சர்வதேச சூழ்ச்சி என பல இடங்களில் கூறியிருந்தார். மாவனல்லை சிலை உடைப்பு விவகாரங்களின் போதும், இந்தக் குழுக்களுடன் தொடர்புடைய சர்வதேச சக்திகளைப் பற்றி ஆராய்ந்து வருவதாக கேகாலை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கமல் பெரேரா தெரிவித்திருந்தார்.

தற்பொழுது உயிர்த்தெழுந்த ஞாயிறு தாக்குதல்களுக்கு சர்வதேச பயங்கரவாத அமைப்பான ஐஎஸ் உரிமை கோரியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஐஎஸ் என்பது அமெரிக்காவின் உருவாக்கம் என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூட ஊடக மாநாடொன்றில் குறிப்பிட்டிருந்தார். அந்த வகையில் இந்தத் தாக்குதல்களின் பின்னால் இருப்பவர்கள் பற்றி இலங்கை மக்கள் மிகுந்த தெளிவுடன் தான் இருப்பார்கள். இந்த சர்வதேச சக்திகள் ஆப்கானிஸ்தானிலும் சிரியாவிலும் செய்தது போல, இங்குள்ள சிறிய குழுவொன்றைப் பயன்படுத்தி இருக்கலாம்.

இந்தத் தாக்குதலைச் செய்ததாகக் குறிப்பிடப்படும் ஸஹ்ரான் காஸிம், நேஷன்ஸ் ஒப் தௌஹீத் ஜமாஅத்தின் (Nations of Thouheed Jamath) தலைவராக இருந்திருக்கிறார் என டெய்லி மிரர் பத்திரிகை குறிப்பிடுகிறது. தௌஹீத் ஜமாஅத்தின் இந்தப் புதிய பிரிவு தேசிய தௌஹீத் ஜமாஅத்திலிருந்து (National Thouheed Jamath) தாக்குதலுக்கு 25 நாட்களுக்கு முன்னர் தான் பிரிந்து பிறந்திருக்கிறது. இந்தக் குழுவில் பெரும்பாலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான் இருந்திருக்கிறார்கள். இலங்கையின் முஸ்லிம் சனத்தொகையில் வீதக் கணக்கில் சொல்ல முடியாத அளவு சிறு தொகையினரே இந்தக் குழுவில் இருந்திருப்பார்கள். இப்படி ஒரு மிகவும் சிறியதொரு குழுதான் சர்வதேச சக்திகளின் இரையாகி இருக்கிறது.

இவ்வாறான வன்முறைகளில் ஈடுபடுகின்ற குழு தொடர்பில் அந்தச் சமூகத்தின் பெரும்பான்மையானவர்கள் அமைதியாக இருந்து அல்லது இஸ்லாத்தின் பெயரால் இதற்கு எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் இருந்தால் அது இவர்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவு வழங்குவதாக அமைகிறது. அமைதியை விரும்பும் பெரும்பான்மையான முஸ்லிம்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இதற்கான ஆதரவை இல்லாமல் செய்யும் பொழுது இந்தச் சிறு குழுக்கள் பலவீனமடைகின்றன. இதனூடாக மதத் தீவிரவாதிகள் அடையாளமற்றுப் போகின்றனர் என மௌலானா வஹீதுத்தீன் கான் தனது இஸ்லாமும் சமாதானமும் என்ற நூலிலே குறிப்பிடுகின்றார்.

இந்த வகையில் சர்வதேச சக்திகளுக்கு இலங்கையில் இரையான இந்தக் குழுவினர் தொடர்பில் இலங்கை முஸ்லிம் சமூகம் எடுத்த நிலைப்பாடு இவ்வாறான சக்திகளைத் தோல்வி அடையச் செய்திருக்கிறது. ஆப்கானிஸ்தானைப் பொறுத்தவரையில் முஜாஹிதீன்களது அந்நிக்கெதிரான ஆரம்ப காலப் போராட்டம் காரணமாக அவர்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இதனால் இவர்களது போராட்டம் திசை திரும்பிய போதிலும் மக்களின் ஆதரவை இலகுவாக திருப்பி எடுக்க முடியவில்லை. இது இந்தப் போராட்டம் வன்முறை வடிவம் எடுத்த பின்னும் நீண்ட காலம் தொடர்வதற்கு வழிகோலியது.

இலங்கையைப் பொறுத்தவரையில் நேஷன் ஒப் தௌஹீத் ஜமாஅத்தின் சம்மாந்துறைத் தற்கொலைதாரிகள் சொன்ன காபிர்களைக் கொல்ல வேண்டும் என்ற கோஷமோ, ஜமாஅதே மில்லது இப்ராஹிமின் சிலைகளை உடைக்க வேண்டும் என்ற கோஷமோ இலங்கை முஸ்லிம்களின் ஆதரவைப் பெறவில்லை. இதனடியாக கடைசியாக நடந்த தற்கொலைத் தாக்குதல்களுக்கு முஸ்லிம் சமூகம் பலத்த எதிர்ப்பைக் காட்டியது. குறிப்பாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா எடுத்த உறுதியான நிலைப்பாடுகள் சர்வதேச சக்திகளின் இலக்கைத் தகர்ப்பவையாக அமைந்திருந்தன. அவர்கள் முஸ்லிம்கள் அல்ல, முஸ்லிம்களுடைய இறுதிக் கிரியைகளை அவர்களுக்குச் செய்ய மாட்டோம் என மிகவும் இறுக்கமான நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியதன் மூலம், இனிமேல் இரையாகப் போகின்ற குழுக்களுக்கும் பலமானதொரு செய்தியை உலமா சபை வெளியிட்டது.

ஸஹ்ரானுடன் தொடர்புபட்ட நேஷன் ஒப் தௌஹீத் ஜமாஅத்தை விட்டு விட்டு இலங்கையில் நஷனல் தௌஹீத் ஜமாஅத் தடைசெய்யப்பட்டதற்கும் பின்னணிக் காரணங்கள் இருக்க முடியும். ஏனெனில் இப்பொழுதெல்லாம் நஷனல் தௌஹீத் ஜமாஅத்தை விட்டு விட்டு ஒட்டு மொத்தமான தௌஹீத் ஜமாஅத் பற்றியே பேசப்படுகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர இந்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்கிறார். 400 தௌஹீத் பள்ளிவாசல்களுக்கு இந்த அரசின் காலப்பிரிவில் அனுமதி கொடுத்திருப்பதாகச் சொல்லும் அவர், தௌஹீத் ஜமாஅத்தினருக்கு பள்ளிவாசல் கட்டிக் கொடுத்த நிறுவனங்களாக ஞான சார தேரர் சொன்ன அதே நிறுவனங்களை முன்வைத்து குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இதுபோல தௌஹீத் ஜமாஅத் என்ற பெயர்தான் இப்பொழுது பேசுபொருளாகியிருக்கிறது. எனவே ஒரு ஸ்லீப்பர் செல்லை உருவாக்குவதற்கான தற்போதைய முயற்சி தோல்வி அடையும் பட்சத்தில் அடுத்த இலக்காக இலங்கையின் தௌஹீத் ஜமாஅத்துக்கள் இலக்காக்கப்பட முடியும்.

இந்த விடயத்தில் முஸ்லிம் சமூகம் கவனமாக இருக்க வேண்டும். சமூகத்திலிருந்து தூரமாகிச் செல்கின்ற அமைப்புக்கள் தொடர்பில் சமூகத் தலைமைகள் அவதானமாக இருக்க வேண்டும். வன்முறை மார்க்கமாக இஸ்லாத்தை அறிமுகப்படுத்தி, முஸ்லிம் சமூகத்தின் 63 வீத சனத்தொகையைக் கொண்டுள்ள ஆசியப் பிராந்தியத்தின் அமைதியைக் குலைப்பதற்கு இலங்கையைத் தளமாக மாற்றுவதற்கு இலங்கை முஸ்லிம் சமூகம் இடம் கொடுக்கக் கூடாது.

## ஐசிஸ்... (09 ஆம் பக்கத் தொடர்)

அதற்குப் பெயர் நாகரிகத்திற்குள்ளேயான மோதல் (Clash with in civilaza tion) அதாவது முஸ்லிம் சமூகம் தமக்குள்ளேயே ஆயுத ரீதியான மோதல்களில் இறங்கி விட்டால் பிளவுகளும் பிரிவினைகளும் நீடிப்பதோடு ஒரு நீண்ட அரசியல் குழப்பம் உருவாகும்.

முழு அரபுலகமும் போர்க் களமாக மாற்றப்படும். ஸ்திரமான அரசுகள் குலையும். சிவில் சமூகங்கள் மோதி அழியும். இந்நிலை தமது சுரண்டலுக்கும் மறு காலனியத்திற்கும் மிகவும் சாதகமாக இருக்கும். இந்த வகை ஆக்கிரமிப்பு செலவு குறைந்ததும் தான். இதற்காக அவர்கள் கண்டுபிடித்திருக்கின்ற ஒரு கருவியே ISIS அமைப்பாகும். அது இன்று எல்லா அரபு முஸ்லிம் நாடுகளிலும் ஊடுருவி வருகின்றது. அரபு சிவில் சமூகத்தின் கண்களுக்குத் தெரியாமல் அதன் எண்ணெய் வளத்தை கொள்ளையடித்து வரும் அமெரிக்காவுக்கு தேவையானது ஒரு குழம்பிய குட்டை. ஏகாதிபத்திய சக்திகள் லாவகமாய் மீன்பிடிப்பதற்கு வசதியாக அரபு இஸ்லாமிய நிலங்களை ஒரு குழம்பிய குட்டையாக மாற்றுவதற்கு இன்று ISIS பயங்கரவாதத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த இடத்தில் முஸ்லிம் சமூகத்தின் உள்ளகப் பலவீனமும் ஏகாதிபத்திய சக்திகளுக்கு ஏதுவாக அமைகின்றது. அப்பலவீனங்களில் முதன்மையாது முஸ்லிம் சமூகத்தில் தீவிரமான பிளவுகளும், ஐக்கியமின்மையுமே. அரபு வாதத்தாலும் தேசிய வாதங்களாலும் இஸ்லாமிய சமூகம் பிளவுண்டு கிடக்கின்றது. இன்னொரு புறம் சமூக மாற்ற செயன் முறையில் முதன்மையானது எது என்பதில் முஸ்லிம் உம்மா குழம்பிப் போய் உள்ளது. மட்டுமன்றி ஆன்மீகப் பலம் எனும் நோயெதிர்ப்பு சக்தியை அது இழந்து விட்டது.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக ஓர் அறிவுத்துறை நெருக்கடி அங்கு உருவாகியுள்ளது. 30 கோடி மக்கள் வாழும் அமெரிக்காவில் 6500 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. ஆனால் 200 கோடி முஸ்லிம்கள் வாழும் அரபு இஸ்லாமிய உலகில் வெறும் 650 பல்கலைக்கழகங்களே உள்ளன. அறிவுத்துறை முன்னேற்றத்திலும் விஞ்ஞான தொழில்நுட்ப ஆய்வு முயற்சிகளிலும் நாம் பெருத்த பின்னடைவை எதிர்கொண்டுள்ளோம்.

இத்தகைய உள்ளகப் பலவீனங்களில் இருந்து முஸ்லிம் சமூகம் தன்னை விடுவித்துக் கொள்ளாத வரை அரசியல் விடுதலை என்பது சாத்தியமற்றது. அவர்கள் சிலர்தான் நாங்கள்தான் அதிகம். சுய விமர்சனமும் தூர நோக்கும் திட்டமிடலும் அவசியம். ISIS என்பது அப்பட்டமான ஒரு பயங்கரவாத அமைப்பு. அதிலிருந்து எமது இளைஞர்களை நாம் பாதுகாக்க வேண்டும். இந்தப் பொறுப்பை நமது அரசியல் மற்றும் ஆன்மீகத் தலைமைகள் ஏற்க முன்வர வேண்டும்.

25.02.2016 அன்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமையகமான தாருஸ் ஸலாமில் ஆற்றப்பட்ட உரையின் தொகுப்பு -

**முஸ்லிம் காங்கிரஸ் ஊடகப்பிரிவு**


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - | 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - | 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - | 4700.00 |
| | | | | | | சீனா | - | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாத... (01 ஆம் பக்கத் தொடர்)

ஆனால் அது நாட்டின் எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. நாடு கடந்த சர்வதேசப் பயங்கரவாதத்தை எதிர் கொள்ளும் வகையிலேயே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நிபுணர்களைக் கொண்டு வரையப்பட்டிருக்கிறது. நிபுணத்துவம் இல்லாதர்கள் எல்லாம் இது தொடர்பில் தற்போது கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஏனைய நாடுகளில் நடத்தப்படுகின்ற பயங்கரவாதச் செயல்களுக்கு எதிராக எம்மால் நடவடிக்கை எடுக்க முடிகிறதா? இந்தச் செயல்களுக்கான ஆதாரங்களை எம்மால் திரட்ட முடிகின்றதா? பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை பயங்கரவாதிகளுக்குச் சார்பானது என்று எவரேனும் சொல்வதாக இருந்தால் அவர்களும் மறைமுகமாக சர்வதேச பயங்கரவாதத்துக்கு உதவுபவர்களே என பிரதமர் தெரிவித்தார்.

சட்ட மூலத்தின் இரண்டாம் பிரிவை வாசித்த அவர், இலங்கையிலோ இலங்கைக்கு வெளியிலோ அதன் நீர்ப்பரப்



பிலோ வான்பரப்பிலோ இந்தச் சட்டத்தின்படியான குற்றமொன்றை அல்லது குற்றத்தின் பகுதியொன்றைச் செய்யும் எவர் மீதும் இந்தச் சட்டம் செல்லுபடியாகும் எனச் சுட்டிக் காட்டினார்.

மூன்றாம் பிரிவு பயங்கரவாதத்தை வரையறுக்கிறது எனக் குறிப்பிட்ட அவர், ஒரு சனத்திரளை அச்சுறுத்துவது, எந்தவொரு செய்கையைச் செய்யுமாறு அல்லது செய்வதை நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்துக்கோ, வேறு அரசாங்கங்களுக்கோ, சர்வதேச நிறுவனங்களுக்கோ அழுத்தம் பிரயோகிப்பது, எந்த அரசாங்கத்தையும் செயற்படவிடாமல் தடுப்பது, இலங்கையினதோ வேறு எந்த நாட்டினதோ ஒருமைப்பாட்டுக்கும் இறைமைக்கும் எதிராகச் செயற்படுவது அனைத்துமே பயங்கரவாதக் குற்றச் செயல்களாகக் கருதப்படும் என்று தெரிவித்தார்.

## CTA: பாராளுமன்றத்... (01 ஆம் பக்கத் தொடர்)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை தீவிரமாக எதிர்த்துவரும் ராஜபக்ஷ, இது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை விட தாக்கம் குறைந்தது எனவும், பயங்கரவாத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அதிகமான வாய்ப்புக்களை வழங்குவதாகவும் குறிப்பிடுகின்றார். நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தை ஆதரிக்கும் இவர், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்தவே கொண்டுவரப்படுகிறது எனவும் குற்றம் சாட்டினார். இந்தச் சட்டம் தொழிற்சங்கவாதிகளின் ஆர்ப்பாட்டங்கள் உட்பட்ட பொதுமக்களின் உரிமைகளையும் பறிக்கிறது என எதிர்ப்புக் காட்டி வருகிறது.

## பாதுகாப்பு... (01 ஆம் பக்கத் தொடர்)

ஏப்ரல் 21 தாக்குதலுக்குப் பின்னர் என்னைச் சந்தித்த வெளிநாட்டு ராஜதந்திரிகளும் தலைவர்கள் பலரும் இது பூகோளப் பயங்கரவாதம் என்பதை என்னிடம் எடுத்துச் சொன்னார்கள்.

தாக்குதலுடன் தொடர்புடையவர்களின் 13 பாதுகாப்பான வீடுகளும், 41 வங்கிக் கணக்குகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை அனைத்தும் பறிமுதல் செய்யபப்டும் எனத் தெரிவித்த அவர், தாக்குதலுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டு கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள 56 பேரில் 12 பேர் தீவிர செயற்பாட்டாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

## ஷரீஆ பல்கலை... (01 ஆம் பக்கத் தொடர்)

ஆனால் இலங்கையில் எந்தவொரு ஷரீஆ பல்கலைக்கழகங்களும் பதிவு செய்யப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்திருந்தார்.

ஆனாலும் பட்டம் வழங்கக் கூடிய உயர்கல்வி நிறுவனமாக இந்நிறுவனம் அனுமதி பெறாதவிடத்து இதனை ஒரு பல்கலைக்கழமாக இலங்கையில் நடத்திச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை. எனவே இதனை அரசாங்கத்திடம் ஒப்படைப்பது தான் சிறப்பானது எனவும் அவர் தெரிவித்தார்.

## தாக்குதல்களும்... (05 ஆம் பக்கத் தொடர்)

எம்.எல்.ஏ. என்ற முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்கத்துக்கு இது விடயமாக அதிகம் உதவ முடியும்.

5. தற்போது நாட்டிலே அரங்கேற்றப்படும் துவேஷ செயல்பாடுகளை தடுத்து நிறுத்தி குறிப்பாக மீடியாக்களை நடுநிலைமைக்குக் கொண்டு வருவதற்கும் நாட்டில் சாந்தி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் அரசியல்வாதிகளும் முஸ்லிம் மீடியா ஃபோரமும் உதவ முடியும். அவர்கள் அதிகமாக பங்களிப்பு செய்ய வேண்டியிருக்கிறது.

6. உலமாக்களை பொறுத்தவரையில் சமூகத்தை தைரியப்படுத்தி, அவர்களை நிதானப்படுத்த வேண்டி இருக்கிறது. ஏனைய சமூகங்களுடனான உறவை முஸ்லிம்கள் அழகாக அமைத்துக் கொள்ளும்படி சொல்ல வேண்டும். கரைந்து போகாமல் கலந்து வாழும் முறை பற்றிய தெளிவை அவர்களால் வழங்க முடியும்.

7. சமூகத்தில் இருக்கின்ற பொறுப்புதாரிகளும் முக்கியஸ்தர்களும் தாமும் தம் பாடும் என்று இருந்துவிடாமல் இந்த முக்கியமான இக்கட்டான கட்டத்தில் சமூகத்தை நெறிப்படுத்தி தைரியப்படுத்தி ஒழுங்குபடுத்த வேண்டிய கடமையை சுமந்திருக்கிறார்கள்.

8. எமக்கு மத்தியில் இருக்கின்ற கொள்கை வேறுபாடுகளை பயன்படுத்தி அடுத்த இயக்கத்தவரை பழிவாங்குவதும் அடுத்த இயக்கம் சம்பந்தமாக மனதில் ஏற்கனவே இருக்கின்ற காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அவர்களைப் பற்றி மோசமான, இல்லாத தகவல்களை அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறி சிக்கலான நிலையை உருவாக்கி விடும் சகலரும் அல்லாஹ்வைப் பயந்து கொள்ள வேண்டும். ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இது ஒற்றுமையாகவும் அறிவோடும் நிதானமாகவும் தக்வாவோடும் இக்லாஸோடும் விடயங்கள் கையாளப்பட வேண்டிய நேரமாகும்.

9. எமது சமூகத்தின் பெற்றார் தமது பிள்ளைகள் விடயமாக அதிக கரிசனை காட்ட வேண்டும் என்பதை இது காட்டுகிறது. உலமாக்கள் இஸ்லாத்தின் மிகச் சரியான நடுநிலையான கருத்துக்களை பரப்ப தீவிர கரிசனை எடுத்திருக்க வேண்டும் என்பதையும் அது கூறி நிற்கிறது. இது பன்மைத்துவ சமூகம் என்பதால், இதற்கேற்ப வாழ்வு முறை ஒழுங்குபடுத்தப்பட்டிருக்க வேண்டும். எமது சமூகத்தில் இருந்த இவ்வாறான இளை ஞர்கள் சர்வதேச இஸ்லாமிய விரோதிகளது கைப்பொம்மைகளாக மாறுவதற்கு நாம் அனைவரும் காரணமாக இருந்தமையை கசப்பாக இருந்தாலும் ஏற்க வேண்டியிருக்கிறது.

10. இஸ்லாம் பற்றிய அச்சத்தத்தை உலக மக்களது மனங்களில் ஏற்படுத்த பல சக்திகள் எல்லா நாடுகளிலும் வேலை செய்கின்றன என்பதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டு.

இந்த நாடு சுபீட்சமான நிலைக்குத் திரும்பவும் எல்லா இனங்களும் சகோதரத்துவ வாஞ்சையோடு வாழும் சூழல் உருவாகவும் அனைத்து இனங்களோடு இணைந்து செயல்படுவோமாக!

அல்லாஹ்வே போதுமானவன்.

## பயங்கரவாதத்துக்கு... (06 ஆம் பக்கத் தொடர்)

நாய்களுடனும் பள்ளிவாசல்களுக்குள் செல்வதை தவிர்க்க வேண்டும். இருப்பினும் தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு இவ்வா றான செயற்பாடுகளை நாங்கள் மிகவும் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருக்கிறோம்.

புனித ரமழான் காலத்தில் நள்ளிரவு தாண்டியும் ஆண்களும் பெண்களும் பள்ளிவாசலில் மார்க்கக் கடமைகளில் ஈடுபடுவார்கள். ஆனால், தற்போதைய சூழ்நிலைய கருத்திற் கொண்டு பெண்களை பள்ளிவாசலுக்கு வர வேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால், எங்களது சமூகத்தைச் சேர்ந்தவர்களை சோதனையின் பின்னரே பள்ளிவாசலுக்குள் அனுமதிக்கிறோம். எங்களது சமூகத்தையும் நாங்களே பாதுகாக்க வேண்டியுள்ளது.

ஏனென்றால் ஐ.எஸ். பயங்கரவாதிகள் தேவாலயங்கள், விகாரைகள், பள்ளிவாசல்கள் என்ற தரம்பிரித்து தாக்குதல் நடாத்துவதில்லை. ஐ.எஸ். பயங்கரவாதிகள் மூலம் ஈராக்கில் பள்ளிவாசல்களே அதிகளவில் அழிக்கப்பட்டன என்பதை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

பயங்கரவாதத்தில் ஈடுபட்டவர்களின் பள்ளிவாசல்களை தடைசெய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இவர்கள் மாற்று மதங்களை நோக்கி விசமப் பிரசாரங்களை மேற்கொள்ளும்போதே அவர்களிடமிருந்து பெரும்பாலானோர் ஒதுங்கியுள்ளனர். இந்த பள்ளிவாசல்கள் நீண்டகாலம் கண்காணிப்பில் இருந்துவந்தது. இதனை பொறுப்புவாய்ந்தவர்களுக்கு அறிவித்தும் அவர்கள் அசமந்தப் போக்குடன் நடந்துள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து நாங்கள் தவிர்ந்துகொள்ள விரும்பவில்லை. இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அசமந்தப் போக்குடன் செயற்பட்டுள்ளனர். ஆனால், யாரும் இவர்களுக்கு அனுசரணை வழங்கவில்லை. அதேசமயம் யாரிடமிருந்தும் இவர்களுக்கு அனுதாபம் இல்லை என்பதையும் உறுதியுடன் கூறுகின்றேன்.

விடுதலைப் புலிகளுக்கு தனியான பாரிய பிரதேசம் இருந்தது. அவர்களிடம் தனிப் படைகள் இருந்தன. அவர்கள் கெரில்லா தாக்குதல்களை நடத்தினார்கள். அத்துடன் அவர்களுக்கு மக்கள் ஆதரவும் இருந்தது. ஆனால், ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு நின்றுநிலைக்கும் சூழல் இல்லை. ஏனென்றால் அவர்களுக்கு சமூக ஆதரவோ, அரசியல் ஆதரவோ இல்லை. இதனால் அவர்கள் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஒரு அடிப்படைவாதக் குழுவாகும். அவர்களை அடியோடு பிடுங்கியெறிவது நாட்டுக்கும் முஸ்லிம்களுக்கும் செய்யும் பேருதவியாகும்.

## முஸ்லிம்கள்... (07 ஆம் பக்கத் தொடர்)

பெரஹெரா செல்லும் போது மேளம் அடிப்பதை நிறுத்துவார்கள். அந்தளவுக்கு எம்மை கௌரவப்படுத்தினர்கள். எமது மூதாதையர்கள் சிலர் பாதையில் செல்லும் போது சைக்கிளை விட்டு இறங்கி கௌரவப்படுத்தினார்கள். தற்போது இந் நிலைமையை எங்கும் காண முடியாமல் உள்ளது.

இது தவிர நாம் இன்று பொதுத்தளத்தில் வேலைசெய்வதில்லை என்கின்ற குறை உள்ளது. சிங்கள சமூகத்துடன் இணைந்து பொதுத்தளத்தில் பணியாற்றுவதில்லை. எமது சமூகத்தில் சில மோசடியான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களே அவர்களுடன் இணைந்து செயற்படுகிறார்கள். நல்லவர்கள் அவர்களோடு ஒரு வேலையிலும் ஈடுபடுவதில்லை. ஒரு பொதுப் போராட்டத்தை எடுத்துக்கொண்டாலும் அதில் எம்மவர்கள் பங்குபற்றுவது மிகக் குறைவு. எமது பிரச்சினைகளின் போது மாத்திரமே நாம் முன்நின்று பேசுகிறோம். ஒரு பொதுப்பிரச்சினை வருகின்ற போது முன்நின்று பேசுவது குறைவு. எனக்கு தெரிந்த சில சகோதரர்கள் மாற்று மதத்தை சேர்ந்த முக்கியமான சில சகோதரர்களை தனியாகச் சந்தித்து வெளிப்படையாக கதைப்பார்கள். முஸ்லிம் சமூகத்தை பற்றி உங்களிடமுள்ள விமர்சனம் என்ன? என்கின்ற கேள்வி அவர்களிடம் முன்வைக்கப்படும். அவ்வேளையில் அவர்கள் நிறைய கருத்துக்களை தெரிவிப்பார்கள். இவ்வளவு விமர்சனங்களை வைத்துக் கொண்டே அவர்கள் எம்முடன் பழகியிருக்கிறார்கள்.

சில விடயங்களுக்கு அவ்விடத்திலேயே விளக்கம் கொடுக்கப்படும். தெளிவையும் பெறுவார்கள். நீங்கள் 5 வருடங்களுக்கு முன்னர் எம்மை வந்து சந்தித்திருக்க வேண்டும். எமது சமூகத்தை சேர்ந்த நிறைய இளைஞர்கள் தற்போது மாறிவிட்டுள்ளார்கள் என்ற கருத்தை அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நாம் எந்த விடயத்திற்கும் ஆவேசப்பட்டு பதிலளிக்கக்கூடாது. முகநூலில் ஒரு கருத்து பரப்பப்பட்டாலும் அதற்கு ஆவேசப்பட்டு பதிலளித்து விடுகிறோம். ஒரு விடயத்தை ஆறுதலாக கலந்துரையாடி செய்வதில்லை. நீர்கொழும்பில் இடம்பெற்ற சம்பவத்திலும் ஆவேசமாக அதனை அணுக முற்பட்ட போதே பிரச்சினை வெடித்திருக்கிறது.

இஸ்லாத்தில் சகிப்புத் தன்மையும் பொறுமையும் முக்கியமான இபாதத். அதை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் எமக்கு கிடைத்துள்ளது. ஒரு முஸ்லிமை பொறுத்தவரையில் அவர் நம்பிக்கை இழக்க மாட்டார். வரலாற்றில் எத்தனையோ பேர் கடுமையாக உழைத்து பிரயோசனம் பெற்றிருக்கிருக்கிறார்கள். நபிமார்கள் எத்தனையோ சோதனைகளுக்கு முகம்கொடுத்திருக்கிறார்கள். எனவே இலங்கை வாழ் முஸ்லிம்களாகிய நீங்கள் எந்த நேரத்திலும் நம்பிக்கை இழக்கக்கூடாது. இந்தப்பிரச்சினையை தீர்த்து மேலுக்கு வர முடியும் என்ற நம்பிக்கையை வைக்க வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் ஊர்மட்டத்தில் உள்ளவர்கள் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் வேலைசெய்யப் பழக வேண்டும். கருத்து வேறுபாடுகள் இருக்கலாம், இயக்க வேறுபாடுகள் காணப்படலாம். குறைந்தது இப்போதாவது ஒரு தலைமைக்கு கீழ் ஒன்றுபட்டு செயற்படும் கலாசாரத்தை கொண்டு வர முடியும் என்றால் நிறைய பிரச்சினைகளுக்கு அல்லாஹ் தீர்வைத் தருவான்.

பிரதேச மட்டங்களில் ஒரு கலந்தாலோசனை சபையை அமைத்துக் கொள்வது சிறந்தது. ஒவ்வொரு பிரதசத்திற்கும் ஒரு சம்மேளனத்தை அமைத்துக்கொண்டால் நிறைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். அரசியல் கலப்பில்லாமல் தூய அமைப்பாக வரும் போது பிரதேசத்தின் பிரச்சினைகளை பொலிஸாருடன் கதைக்க முடியும். அப்படி பிரதேச ரீதியாக கலந்துரையாடல் சபை அமைக்கப்படுவதாக இருந்தால் அதற்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை தேசிய சூறா சபை வழங்கத் தயாராக உள்ளது. எனவே நாம் ஒன்றுபட்டு இப்பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டும். சரியாக இதனை பயன்படுத்தினால் சமூகத்திற்கு ஒரு விடிவை கொடுக்க முடியும். யாரும் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை, பயப்படத் தேவையில்லை. அலலாஹ் எங்களுடன் இருக்கின்றான்.

இலங்கையில் இஸ்லாமிய அமைப்புக்கள் செய்யத் தவறிய விடயம் என்னவெனில் இபாதத்களை பற்றிச் சொல்லித் தந்த அளவுக்கு மற்றவர்களுடன் வாழ்வதைப் பற்றிச் சொல்லித் தரவில்லை. இலங்கையில் எப்படி வாழ வேண்டும் என்ற விடயத்தை எமது சமூகத்திற்கு சரியாக சொல்லிக்கொடுக்க வேண்டியுள்ளது. மார்க்கத்தை நிறையப் படித்திருப்பார்கள். ஆனால் குடும்பத்தவர்களோடு எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை தெரியாமல் இருப்பார்கள்.

## யேசு உயிர்த்த... (04 ஆம் பக்கத் தொடர்)

விடவும் குறைந்த விகிதாசாரத்திலேயே காணப்படுகிறார்கள். அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இலங்கையில் எவ்வித முரண்பாடுகளும் இது வரையில் ஏற்பட்டது கிடையாது. முஸ்லிம்களுக்காக பலி தீர்க்க ISIS தீவிரவாதிகள் கத்தோலிக்க கிறிஸ்தவர்களை விடவும் பெரும் பான்மை சமூகமான சிங்களவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டிருந்தால் இத்தீவிர வாதிகள் அவர்களது சொந்த நோக்கத்திற்காக மேற்கொண்ட தாக்குதலாகப் பார்க்க முடியும்.

பௌத்த தீவிராதக் குழுக்களே முஸ்லிம்களுக்கும் அவர்களது சொத்துக்களுக்கும் சில ஆண்டுகளாக சேதம் ஏற்படுத்தி வந்தார்கள். எனவே இவர்களை விடுத்தும் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடாத்தியது என்பதை இந்த இடத்திலும் சர்வதேச சதித் திட்டம் என்பதை ஏற்றுக்கொள்வதற்கு போதுமான இன்னுமொரு ஆதாரமாக பார்க்க முடியும். அதிலும் குறிப்பாக அமெரிக்காவினுடைய காய் நகர்த்தல் என்ற பார்வையைப் பலப் படுத்துகிறது.

குறிப்பாக கிறிஸ்தவ சமுதாயத்துக்கும் முஸ்லிம் சமூகத்துக்குமிடையில் அண்மையில் சர்வதேச மட்டத்தில் முரண்பாடுகள் ஏற்பட்டதாக நிகழ்வுகள் கிடையாது. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அவர்கள் குத்ஸை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்ததைக் கூட ஏற்றுக் கொள்ளாமல் பாரிய எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறார்கள்.

இத்தாக்குதல் பற்றி இலங்கையின் பாதுகாப்புத் தரப்புக்கு முன்கூட்டி எச்சரிக்கப்பட்டுள்ள போதும் அது பற்றி அரச மற்றும் பாதுகாப்புத் தரப்பு கவனத்திற் கொள்ளாமைக்கான காரணம் என்ன?

உள்நாட்டு அரசியல் பாகுபாடுகளைப் பயன் படுத்தி சர்வதேச நாடுகளின் தலையீடு காரணமாக வேண்மென்றே பாதுகாப்பில் தளர்வு நிலை ஏற்படுத்தப்பட்டு சந்தர்ப்பமமைத்துக் கொடுக்கப்பட்டிருக்க[illegible]லாம் என்ற பலத்த சந்தேகமொன்று காணப்படுகின்றது என ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். இந்திய உளவுப் பிரிவிடமிருந்து இலங்கை பாதுகாப்புப் பிரிவுக்கு இந்நிகழ்வு பற்றி முன்கூட்டி எச்சரிக்கப்பட்டுள்ள தாகவும் மற்றும் அமெரிக்க தூதுவருக்கு முன் கூட்டி எச்சரிக்கை வந்தது என்பதை அவர் மறுத்துரைத்ததையும் கேள்விக்குட்படுத்தும் போது, இலங்கை அரசு இவ்வெச்சரிக்கையை ஏன் அலட்சியம் செய்தது என்பதற்கும் மேலாக, இவ்விரண்டு நாடுகளுக்கும் இத்தாக்குதல் தொடர்பாக எவ்வாறு முன் கூட்டி தெரிய வந்தது என்பது நியாயமான கேள்வியாகவே பார்க்க முடிகிறது.

மொழி பெயர்ப்பாளர்:

நஷ்டம் யாருக்கு என்று பார்கின்ற போது?

30 வருடங்கள் தொடர்ந்து யுத்த பூமியாக காணப்பட்டு வந்த இலங்கை தீவினை [illegible] முடியாது. 10 வருடங்களாக யுத்த காயங்களால் முடங்கிக் கிடந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாமல் தத்தளிக்கும் இலங்கைக்கு இது மிகப் பெரும் பாரமாகவே இருக்கும். நாட்டின் அமைதி நிலை பாதிப்படைந்துள்ளது. நாட்டின் சுற்றுளாத் துறை, ஏற்றுமதி, வெளிநாட்டு முதலீடுகள், உள்நாட்டு வியாபாரங்கள், உற்பத்திகள் என எல்லாப் பகுதிகளிலும் வீழ்ச்சி காணப்படுகிறது.

மக்களின் உள்ளங்களில் மீண்டும் பயம் பீடித்துள்ளது, கிறிஸ்வத மக்கள் மாத்திரம் தீவிரவாதிகளால் இலக்கு வைக்கப்பட்ட போதும் பெரும்பான்மை சிங்களவர்களின் உள்ளங்களில் முஸ்லிம்கள் பற்றிய தவறான கணிப்பீடுகள் மேலும் அதிகரித்துள்ளன. புகைந்து கொண்டிருந்தது பற்ற வைக்கப்பட்டுள்ளது.

அடுத்து தங்கு தடையற்ற சீனாவின் இலங்கைப் பயனத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்படலாம் என்ற எதிர்வு கூறலுடன் அமெரிக்கவின் முகவரான "இஸ்லாமிய ஜிஹாத்" என்ற என்பது தொடருமாக இருந்தால் இலங்கையைப் பாதிக்கும் அதே சமையம் சீனாவினது அனைத்து முன்னெடுப்புக்களிலும்; ஒரு முல்லைப் போன்று தைத்துக் கொண்டே இருக்கும்.

மொத்தத்தில் அரசியல்வாதிகளும், சர்வதேசமும் இவற்றை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் போது மக்கள் மாத்திரம தமக்கிடையில் பிளவுபட்டுக் கொண்டு பலி தீர்ப்பதில் காலம் கடத்திக் கொண்டிருப்பார்கள். உண்மையில் அரசுக்கோ அல்லது பாதுகாப்புப் பிரிவுக்கோ இத்தீவிரவாதிகளின் பின்னணி பற்றியோ அதன் பின்னால் இருந்து இயக்குகின்ற சூத்திரதாரிகள் பற்றித் தெளிவில்லாமலிருந்தாலும் அல்லது அந்த சூத்திரதாரிகளுக்கு பாய் விரித்துக் கொடுத்தாலும் தொடர்ந்து எமது நாடும் நாட்டு மக்களும் பாதிக்கப்படுவதை யாராலும் தடுக்க முடியாது. இப்பாதிப்பில் ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை விட விகிதாசார அடிப்படையில் கூடிக் குறையலாம் ஆனால் எந்த ஒரு குடிமகனுக்கும் விதி விலக்குக் கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மீள்பார்வை**

මීල්පාර්වෛ

**நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக மீள்பார்வையின் கடந்த இதழை வெளியிட முடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இலங்கை அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட தேசியப் பத்திரிகையான மீள்பார்வை தொடர்ந்தும் வெற்றிகரமாக வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அவசர காலச் சட்டத்தின் கீழ் நடந்த பெரியமுல்லை தாக்குதல்







5.5.2019 ஞாயிற்றுக்கிழமை நீர் கொழும்பு- பலஹத்துறையின் தெற்கு எல்லையில் அமைந்துள்ள அல்-பலாஹ் முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் உருவான தாக்குதல் சம்பவம் நீர்கொழும்பு-பெரியமுல்லை பகுதியில் முஸ்லிம் வீடுகள் மீது பலத்த தாக்குதல் வரை கொண்டு செல்லப்பட்டது.

நீர்கொழும்பு பிரதேசம் அதிக சுற்றுலா பயணிகள் வருகின்ற பிரதேச மாகும். குறித்த மோதல் சம்பவம் உருவான இடத்தில் முஸ்லிம்களது முச்சக்கரவண்டி தரிப்பிடமும், சற்று தள்ளி சகோதர மதத்தினரின் முச்சக்கர வண்டி தரிப்பிடமும் உள்ளது. சவாரி களை பெற்றுக் கொள்வதில் இரு தரப் பிற்கும் ஏற்கனவே நிலவி வந்த முறுகல் நிலையே மோதலாக வெடித்துள்ளது.

கடந்த ஞாயிறு அன்று மாலை 5.30 - 6 மணியளவில் பலஹத்துறையின் தெற்கு எல்லையில் அமைந்துள்ள முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் இருந்த சில சாரதிகள் மீது மதுபோதையில் வந்த சிலர் தாக்குதல் மேற்கொண்டனர். முச்சக்கர வண்டி சாரதிகள் பின்வாங்க அங்கு வந்த நீர்கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஹாரிஸ் ஹுசைன் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து அங்கு பாதுகாப்பு தரப்பினர் விரைந்துள்ளனர். எனினும் பாதுகாப்பு தரப்பினர் வேடிக்கை பார்க்க அங்கிருந்த முச்சக்கர வண்டிகள் தாக்கப்பட்டு மோட்டார் சைக்கிள் ஒன்றும் எறியூட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தரப்பினர் அங்கு கூடி இருந்த முஸ்லிம் மக்களை தமது வீடு களுக்கு செல்லுமாறு கட்டளையிட்டா லும் கலகக்காரர்களை தடுக்க போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என அங்கி ருந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதன் பின்னர் பலஹத்துறையின் தென்கிழக்கு நுழைவாயிலான தலுவ கொட்டுவ கட்டுவையை அண்மித்த தாக்கியா வீதி பகுதியில் கூடிய கலகக் காரர்களால் அங்கு உள்ள சில முஸ்லிம் வீடுகள் தாக்கப்பட்டன. அங்கு பாது காப்பு தரப்பினர் வந்து சேர முன்னரே அங்கிருந்த வீடுகள் தாக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். பாரிய சேதங்கள் பதிவாகவில்லை.

இரவு 8 - 9 மணிக்கு ஊரடங்கு சட் டம் அமுலில் இருந்தும் இந்த நிலைமை இரவு 11 மணியளவில் தான் முழுமை யாக கட்டுப்பாட்டிற்குள் வந்தமை குறிப்பிடத்தக்கது.

பலஹத்துறையின் நிலைமை இவ் வாறு இருக்க, பலஹத்துறையில் இருந்து 4-5 கிலோமீட்டர்கள் தள்ளி இருக்கும் பெரியமுல்லையின் நிலைமை மிக கவலைக்கிடமாக மாறிப் போனது. இரவு 10 மணியளவில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்க இராணுவத்தினரும் விஷேட அதிரடிப் படையினரும் கடமையில் ஈடுபட்டி ருக்க பெரியமுல்லைக்குள் புகுந்த கலகக்காரர்களால் தாக்குதல் நடாத்தப் பட்டுள்ளது. சுமார் 3 மணித்தியாலங்கள் வரை அதாவது நள்ளிரவு 1 மணி வரை கலகக்காரர்களை கட்டுப்படுத்த முடி யாமல் பாதுகாப்பு தரப்பினர் திணறிக் கொண்டிருக்க சில வீடுகளில் சமைய லறை வரை சென்று தாக்குதல் நடாத்தப் பட்டுள்ளது.

செல்லகந்த, டிப்போ வீதி, தலுபத்த பகுதிகளில் உள்ள முஸ்லிம் வீடுகள் கடும் சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டுள் ளன. கலகக்காரர்களுக்கு மைமன்கொட பகுதியில் உள்ள பள்ளி ஒன்றின் நுழைவாயிலை பாதுகாப்பு தரப்பினரே திறந்து கொடுத்ததாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

செல்லக்கந்த பகுதியில் உள்ள வீடொன்று மிக கடுமையான சேதத் திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன் அந்த வீட்டில் இருந்த தங்க நகைகளும் திருடிச் செல்லப்பட்டுள்ளது. மேலும் செல்லக்கந்தை பகுதிகளில் உள்ள முஸ் லிம்களது வீடுகள் மாத்திரம் குறிவைத்து தாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு மிலேச்சத்தனமான தாக்கு தல்களில் ஈடுபட்டவர்களில் இருவரை பெரியமுல்லை முஸ்லிம்கள் பிடித்து பாதுகாப்பு தரப்பினரிடம் ஒப்படைத்துள் ளனர். இவ்வாறு தாக்குதலில் ஈடுபட்ட வர்கள் முன்னக்கரை, வென்னப்புவ பகுதிகளில் இருந்து வந்தவர்கள் எனவும் இவர்கள் இரவு 7 மணிக்கெல்லாம் பெரியமுல்லை பிரதேசத்தில் நுழைந்து விட்டதாகவும் அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நீர் கொழும்பு பெரிய முல்லை ஜும்மா மஸ்ஜிதாலும் பாது காப்பு தரப்பினராலும் சேத விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. அவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற சேத விபரங்களின்படி,

பெரியமுல்லை பிரதேசத்தில் 55 வீடுகள் அளவில் தாக்கப்பட்டுள்ளன (இதில் 80% ஆனவை வீட்டு முன் கண்ணாடிகள், வீட்டு வாயில் கதவுகள் (Door/Gates))

ஒரு வீட்டின் முன்னால் வாகன டயர் ஒன்று பற்ற வைக்கப்பட்டுள்ளது. வீட்டு கதவு கத்தி,கோடாரியால் கொத்தப் பட்டுள்ளது.

ஒரு வீட்டில் ரூபா. 1 இலட்சம் பெறுமதியான தங்க நகை மற்றும், ரூபா. 85,000 கொள்ளையிடப்பட்டுள்ள தாக தெரிவிக்கின்றனர்.

10 முச்சக்கர வண்டிகள் சேதம்.

8 மோட்டார் சைக்கிள்கள் சேதம்.

பெரியமுல்லையில் தாக்குதல் இடம்பெற்ற அதே நேரத்தில் நீர் கொழும்பு ஆனுச்ஜிட கீணிச்ஜீ இல் உள்ள முஸ்லிம்களின் 8 வர்த்தக நிலையங்கள் தாக்கபப்ட்டுள்ளன. இதில் ஒடிஞாஞாணாதா'ண் ஜுவலரியில் மாத்திரம் ரூபா. 5000,000 பெறுமதியான நகைகள், சொத்துக்கள் கொள்ளை யிடப்பட்டதாக தெரிவிக்கின்றனர்.

சேத விபரங்கள் சரி பார்க்கப்பட்டு அரசாங்கத்தின் நஷ்டஈடு கிடைக்க ஆவண செய்வது முக்கியமானது. இதற்கு முன்னர் தாக்குதல் நடந்த பகுதிகளில் இடம்பெற்ற தவறுகள் இங்கு இடம்பெற நாம் அனுமதிக்கக் கூடாது. எமது சமூகத்தில் இருந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பை விட அரசாங்கம் நஷ்டஈடு வழங்க நாம் அழுத்தம் கொடுக்க வேண்டியது கடமை.







## இக்ரஃ இஸ்லாமியச் சங்கம் (IIC Kuwait) நடாத்தும் வருடாந்த உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி











குவைத் இக்ரஃ இஸ்லாமியச் சங்கம் மற்றும் Travel Club இணைந்து நடாத்திய இரண்டாவது சினேகபூர்வ உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி சென்ற 2019.04.12 ஆம் திகதி Jammiyathul Islaah உள்ளக அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. குவைத்தில் உள்ள இலங்கை சமூகங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் 12 பிரபல உதைப்பந்தாட்டக் கழகங்கள் இதில் பங்கெடுத்தன. இன ரீதியான ஒற்றுமை சகவாழ்வு என்பவற்றை வலியுறுத்தும் வகையில் இடம்பெற்ற இந்த இரண்டாவது சினேகபூர்வ உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்றமை நிகழ்வை இன்னும் மெருகூட்டியதுடன் இச்சுற்றுப் போட்டியின் நோக்கத்தைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்திருந்தது. போட்டிகள் ஆரம்பம் முதல் இறுதி வரை வெகு சிறப்பாகவும் விறுவிறுப்பாகவும் இடம் பெற்றதுடன், போட்டிகளில் கலந்து கொண்ட வீரர்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற எந்த வித இனப் பாகுபாடுமின்றி, ஒற்றுமையாக போட்டியின் வெற்றிக்கும், ஒழுங்காக நடாத்தி முடிக்க உதவியமையையும் காண முடிந்தது.

இறுதியில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டமையால் இந்த நிகழ்வும் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. பிரதம அதிதியாக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ காதர் மஸ்தான் அவர்களும், அதிதிகளாக இஸ்லாமிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அவ்காப் அமைச்சின் பிரதிநிதியாக சகோ. மொஹமட் அலி, Jammiyathul Islaah வின் வெளிவிவகார அலுவல்களுக்குப் பொறுப்பான சகோ. அப்துல்லாஹ் அல் ஹுமைத், அல் ஹிமா அமைப்பின் தலைவர் அஷ்ஷேக். நூருல்லா, பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோகச் செயலாளர் அஷ்ஷேக். ஷிப்லி ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இக்ரஃ இஸ்லாமியச் சங்கத்தின் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரப் பொறுப்பாளர் சகோ. ஷிஹாம் கரீம் அவர்களின் தலைமையில் கீழ் ஒழுங்கு செய்யப்பட்ட இச்சுற்றுப் போட்டி, பொதுத் தொடர்புகள் பொறுப்பாளர் சகோ. பஸ்லி பாஷி அவர்களின் [illegible] இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஹரீஸ் ஸாலிஹ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.